# ஆசிரியம்

# ASITIUM

பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா

தேசிய கல்வி நிறுவகம்

யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்.

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASITIUM

**Editor:**

**DR. T. AMIRTHALINGAM,** M. A. [Ed]

**Published by:**

P. G. D. E. Students Union,
J/Hindu Ladies College,
Jaffna.

**March – 2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரின் பெயர் : **ஆசிரியம்**

வெளியிடும் அமைப்பு : **தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் படிப்பு 2ஆம் வருட (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆசிரிய மாணவர் ஒன்றியம்.**

மலராசிரியரும் ஆலோசகரும் } **கலாநிதி தா. அமிர்தலிங்கம்**
(விரிவுரையாளர் - பட்டப்பின் கல்வி டிப்ளோமா.)

பதிப்பு : **முதலாவது 2001 மாசி**

அச்சுப்பதிப்பு : **திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம்

## கற்றனைத்தூறும் அறிவு

மலர் ஆசிரியர் :
*கலாநிதி தா. அமிர்தலிங்கம்*

பட்டப்பின் கல்வி டிப்புளோமா,
மாணவர் அமைப்பு,
தேசிய கல்வி நிறுவகம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி,

பங்குனி — 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான இரத்தினங்கள் – இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை – நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் – அவன்
தன்னம் தனிமையைப் போக்கி – உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்.

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் – உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் – அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே – நல்ல
கட்டுப் பாட்டுடன் வகுப்பறையில்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே – ஞாலம்
போற்றும் சமூகத்தினை நாம்படைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

## திரு. சி. சிவராசா அவர்களின்

# ஆசியுரை

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியிற் பங்கு கொள்ளும் இரண்டாம் வருட (2001ஆம் ஆண்டில்) மாணவ அமைப்பினரின் ஞான யக்ஞத்தின் பயன் கனிந்த கனியாம் ''ஆசிரியம்'' எனும் சஞ்சிகை வெளியிடப்படுவதில் மட்டிலா மகிழ் வெய்துகின்றோம்.

இன்றைய புதிய கல்வி மறுசீரமைப்புச் செல்நெறியில் ஆசிரியர் பாரம்பரியக் கோலத்திலும் மாற்றம் பெற்றுப் புதுப் பரிமாணம் எய்த வேண்டியதன் அவசியம் கல்விப் புலத்தினரின் தேவைகளுள் மிக முக்கியமானதொன்று. இந்நிலையில் இப்புதிய நூற்றாண்டின் கல்வித் தேவைகளையும், மாணவச் சிறார்களின் கல்வித் தாகத்தையும் பூர்த்தி செய்யும் வகையிலான உத்திகளைத் தெள்ளெனத் தெளிக்கும் வகையில் ஆசிரியம் சஞ்சிகை ஆக்கங்கள் அமைந்துள்ளமை எமது கவனத்தை ஈர்த்தது. இவ் வகையில் இக் கட்டுரைச் சிருட்டி கர்த்தர்களைப் பாராட்டுவதில் உளநிறை வெய்துகின்றோம்.

புதிய மிலேனிய யுகத்திற்கான ஆசிரிய பரம்பரை விழித் தெழ வாழ்த்துகின்றோம். இத்தகைய பயன் நிறைந்த சஞ்சிகைகள் அகவை தோறும் மலர்ந்து புதுமணங் கமழ எம் அகங்கனிந்த ஆசிகள் என்றென்றும்.

சி. சிவராசா
வலயக் கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்வித் திணைக்களம்,
வடமராட்சி, புலோலி.
2001-03-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

## திரு. வ. இராசையா அவர்களின்

# ஆசிச்செய்தி

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியில் ஈடுபட்டுள்ள ஆசிரியப் பயிற்சியாளர்கள் ''ஆசிரியம்'' எனும் முதற் சஞ்சிகையை 1995இல் வெளியிட்டனர். 2001இல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் நீண்டகால இடைவெளியின் பின் கடும் முயற்சியின் பயனாக இரண்டாவது சஞ்சிகையை வெளியிடுவதனையிட்டு கல்விப்புலம் சார்ந்த, இத்துறையோடு நீண்ட அனுபவம் பெற்றவன் என்ற வகையில் பெருமையடைகின்றேன்.

நிலையப் பொறுப்பாளர், விரிவுரையாளர் ஆகியோர் பாராட்டிற்குரியவர்கள். இடம்பெயர்வுகளைச் சந்தித்த போதிலும் தடம்புரளாமல் வியூகம் அமைத்து ஆசிரியர்களது நம்பிக்கைக்கு உரியவர்களானார்கள்.

தேசிய கல்வி நிறுவனத்தின் இக்கிளை நிறுவனம் தனது முதலாவது தொகுதியில (1992/93) கிட்டத்தட்ட 100 ஆசிரிய பயிற்சியாளர்களைக் கொண்டிருந்தது. ஆனால் இன்று பல்வேறு தடைகளைத் தாண்டி 231 ஆசிரியப் பயிற்சியாளர்களைத் தன்னகத்தேகொண்டு பூரிப்போடு தலைநிமிர்ந்து நிற்கின்றது.

ஆசிரிய பிரமாணங்கள் ஆசிரிய பதவி உயர்வுகளுக்கு பட்டப்பின் கல்வித் தகுதித்தேர்வு உட்பட பல தேவைகளை முன்வைக்கின்றது. இத் தேவைகள் அனைத்தையும் தனித்து பல்கலைக்கழகங்களால் பூர்த்தி செய்ய முடியாது. இந்த நிலையில் தேசிய கல்வி நிறுவனத்தின் வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்ட இப்பணி உன்னதமானதாகும். ஆசிரியர்களது தேவை பூர்த்தி செய்யப்பட்டு அவர்களது சமநிலை பேணப்பட்டுள்ளது.

ஆசிரிய தொழில் வாண்மை விருத்திப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள இவ் ஆசிரியர்களது சஞ்சிகை ஆக்க முயற்சி அற்புதமானது. சமகால கல்விப் பிரச்சனைகளையும், தேவைகளையும் பல்வேறு வடிவங்களில் இச்சஞ்சிகை வெளிக்கொணரும் என்ற அசையாத நம்பிக்கை எனக்குண்டு.

ஆகவே இந்நிறுவனத்தினூடாக ஆசிரியர்களது வாண்மை விருத்தி மேம்பாடு அடையவும், இச்சஞ்சிகை எதிர் காலத்தில் ஆண்டுதோறும் மலரவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

வி. இராசையா,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்

மருதனார்மடம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியர் உரை

'ஆசிரியம்' என்னும் மலர் ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்யும் நோக்குடன் 1995இல் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

2001இல் வெளிவர இருக்கும் இவ் ஆசிரியத்தில் பல்வேறு ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை வரவேற்பிற்கு உரியதாகும்.

கல்வி உலகில் புதிய அலையாக ''பின் நவீனத்துவம்'' என்ற கோட்பாட்டை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. சபா. ஜெயராசா அவர்கள் ஆராய்ந்துள்ளார்.

வடமாநில மேலதிக கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள் திட்டமிடலில் ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கு. சண்முகநாதன் அவர்கள் பாடசாலை மைய முகாமைத்துவம் நோக்கிய நகர்வும் ஆசிரியதிறன் விருத்தியும் பற்றி விபரித்துள்ளார்.

மேலும் புதிய கல்விச்சீர்திருத்த அமுலாக்கம் பற்றி பல்வேறு கோணங்களில் பலர் ஆராய்ந்துள்ளனர். அதாவது கணிப்பீடு, ஆசிரியர் பாங்கு, கற்பித்தல் சாதனங்கள், ஆரம்பக்கல்வி, செய்திட்டங்கள், அழகியற் கலை, இணைப்பாட விதானம் போன்ற ஆக்கங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

இந் நூல் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளும் அனைவருக்கும் பயன்படக் கூடியதொன்று என்பதில் ஐயமில்லை. எதிர்வரும் ஆண்டுகளிலும் 'ஆசிரியம்' பல சிறப்பான ஆக்கங்களுடன் வெளிவர எல்லாம்வல்ல இறைவனை வேண்டி ஆசிரிய மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

கலாநிதி நா. அமிர்தலிங்கம்
விரிவுரையாளர்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவர் உரை

யாழ் இந்து மகளிர் கல்லூரி, தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் படிப்பு ஆசிரிய மாணவர்களால் 'ஆசிரியம் I' என்னும் மலர் 1995இல் வெளிவந்தது.

இன்று இன்னும் அழகுற ஒழுங்கமைக்கப்பட்டு எமது விரிவுரையாளர், கலாநிதி நா. அமிர்தலிங்கம் அவர்களின் சிறந்தவழிகாட்டலில் ''ஆசிரியம் II'' வெளிவருகின்றது. பல கல்விமான்களினதும், ஆசிரிய மாணவர்களினதும் கல்வியியல் கட்டுரைகள், தமிழ் சிறுகதைகள், கவிதைகள் துணுக்குகள் என்பவற்றுடன் ஒரு வரலாற்றுப் (Diploma) பொக்கிஷமாகவும், அறிவுகள் விடய விளக்கமாகவும் பலபேருக்கு ஆய்வுக்குத் துணையாக விளங்கப்போகும் உசாத்துணை நூலாகவும் இருக்கும் இவ்வாக்கம் என்பது சிறியேனின் உளத்துணிவு எனலாம்.

இந்நூல் ஆக்கம் பட்டினத்தடிகள் குறிப்பிட்டது போல 'என் செயலாவது யாதொன்றுமில்லை... ' என்ற அனுபவ வாசகத்தை ஒப்பத்தானே பூத்துக்குலுங்கி நிற்கும் ஒரு புதுமலர். யார் யாரோ தோன்றாத் துணையாக நின்று இந்நூல் ஆக்கத்திற்குப் பல்லாற்றாலும் உதவி புரிந்தனர். நிதிப்பற்றாக் குறை ஏற்பட்டபோது அதைச்சமாளிக்கும் உத்திகளையும், குறைந்தசெலவில் சில காரிய அனுகூலங்களையும் பெற வழி வகுத்தனர்.

ஆசிரியர்களாகிய எமது துறைசார்ந்த வாண்மையை விருத்திசெய்து, காலத்துக்குக்காலம் வழிகாட்டல்களையும் செய்து உதவி வரும் தேசியகல்வி நிறுவகத்துக்கு முதற்கண் நாம் நன்றி உடையவர்களாகின்றோம்.

பலவிதமான ஒத்துழைப்புக்களை நல்கிவரும் வடமராட்சி கல்விப்பணிப்பாளர் திரு. சிவராசா அவர்களையும், வலிகாமக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. இராசையா அவர்களையும் நாம் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

இவற்றுக்கெல்லாம் மேலாக இவ்வாக்கம் அழகுற அச்சேறி, ஒரு சிறந்த ஆக்கமாக ஆசிரிய மாணவர்களினதும், விரிவிரையாளர்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்துத் தரப்பினர்க்கும், ஆர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லர்க்கும் மலரை மேலும் மணம் கமழவைக்கத் தமது மேலான கட்டுரைகளையும் இப்பதிப்பில் இடம் பெறச்செய்ததன் மூலம் அணிக்கு அணிசேர்த்த கலாநிதி சபா ஜெயராசா, கலாநிதி தனிகாசலம்பிள்ளை அவர்களுக்கும் காப்பாளர் திரு. கு. சண்முகநாதன் அவர்களுக்கும் எம்மையெல்லாம் இவ்வாறு இணைத்து இந்நூலை ஆக்க அருள்புரிந்த எந்தை ஈசனின் இணையடி மலர்களை வழுத்திக்காலத்திற்கேற்ற புதியகோணத் தில் இம்மலர் உருவாக ஒத்தாசை நல்கிய திருமகள் அழுத்த கத்தினருக்கும், மேலான ஆசிகள் தந்தபெரியோருக்கும் எமது நன்றி உரித்தாகட்டும். யுத்தசூழல், காலநெருக்கீடு, தொடர் பாடல், நிதிநெருக்கீடு போன்ற பல இடர்களின் மத்தியிலும் இவ்வாக்கம் வெளிவருவது எமக்குப் பின்வரும் ஆசிரிய மாண வர்க்கும் ஓர் உந்து சக்தியாக அமையுமெனில் அது எமது முயற்சியின் திருவினையாகும்

'என்றும் திருவருள் கைகூட்ட ஆசிரியம் II அறிவு மணம் பரப்பட்டும்.'

இவ்வண்ணம்

**ஆசிரிய மாணவர் ஒன்றியத்தலைவர் செ. பாலச்சந்திரன்**
யா/இளவாலை மெய்கண்டான் ம. வி.

"எல்லோரும் இன்புற்றிருப்பதே அல்லால் வேறொன்றும்
அறியேன் பராபரமே"

(தாயுமானவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுநிலை விரிவுரையாளரின்

# வாழ்த்துரை

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு மாணவர்களின் வெளியீடாக 'ஆசிரியம்' மலருகிறது. நமது நாட்டின் சமூக விடிவு ஆசிரியர்களினாலே சாதிக்கப்படவேண்டியது. ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபையின் செயற்பாடுகளும், ஆசிரியர் கல்விபற்றி ஏற்பட்டுள்ள இன்றைய விழிப்புணர்வும் சிறிதளவு நம்புக்கை தருவதாக அமைந்துள்ளது. பல்வேறு இடர்ப்பாடுகளிடையேயும், யாழ். பிராந்தியத்தில் இக்கற்கைநெறியை வழிநடாத்தும் எனது பத்து ஆண்டுகால அனுபவம் ஆசிரியர் கல்வி பற்றி நம்பிக்கையை எனக்கு தந்துள்ளது. ''உருளும் கல்லில் பாசிபடியாது. அக்கல்லே மாணிக்கக்கல் ஆகிறது. பாறை இடுக்களிடையே அகப்பட்ட கல் பாசிபடிந்து பாழாகிறது'' இது அனுபவ மொழி.

இவ்வகையில் இரண்டாவது இதழாக மலரும் ''ஆசிரியம்'' இதழை வரவேற்று ஆசி கூறுவதுடன், ஆண்டு தோறும் இவ்விதழ் மலர்ந்து ஒவ்வொரு ஆசிரிய மாணவரும் 'ஆசிரியம்' என்ற புனித நறுமணம் வீசும் எழில் பெற இறையருள் துணை நிற்பதாக. இதயம் நிறைந்து வாழ்த்துவது என்கடன்.

திரு. கு. சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ அமைப்பினர் 2000/2001

*காப்பாளர் :* திரு. குமாரசாமி சண்முகநாதன், B. Ed, M. A.
*ஆலோசகர் :* / *மலராசிரியர் :* கலாநிதி தா. அமிர்தலிங்கம், M. A. (Ed), Ph. D.
*தலைவர் :* திரு. செ. பாலச்சந்திரன்
*உப-தலைவர் :* திரு. கே. கே. லோகநாதன்
*செயலாளர் :* திரு. தா. உதயகுமன்
*பொருளாளர் :* திரு. வி. சேந்தன்
*உப-பொருளாளர் :* செல்வி வி. ஜெயந்தி

## செயற்குழு உறுப்பினர்

செல்வி சு. சுந்தரவதனி
செல்வி S. பிரேமா
செல்வி சு. ஞானாம்பாள்
திருமதி த. சிவமாலினி
திரு. சி. ஜெயகுமான்
திரு. சி. சிவசிவா
திரு. S. தனஞ்சயன்

# OUR LECTURERS

*Senior Lecturer* — **Mr K. Shanmuganathan**
B. Ed, M. A.

*Lecturers* — **Dr. T. Amirthalingam**
M. A. [Ed], Ph. D.

**Mrs A. Shanmuganathan**
M. A., Dip-in-Ed.

**Miss Y. Kandiah**
M. A. Dip-in-Ed.

**Mr. M. Paramsothy**
B. Sc. Dip Ed. S. L. E. A. S. Class-II

**Dr. T. Kamalanathan**
M. A. [Ed], Ph. D.

**Mr. S. Senthilmani**
B. Sc, Dip-in-Ed, Sp. Trd. (Maths)
S. L. E. A. S Class-III

**Mr. P. Thanapalan**
B. A. Dip-in-Ed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

*கல்வியில் புதிய அலை*
கலாநிதி சபா. ஜெயராஜா ... ... ... 1

*கல்வித்திட்டமிடலும் எதிர்நோக்கும் கல்விப்பிரச்சினைகளும்*
கலாநிதி S. N. தணிகாசலம்பிள்ளை
(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்) ... ... ... ... 8

*பாடசாலை மைய முகாமைத்துவம் நோக்கிய நகர்வும் ஆசிரியதிறன் விருத்தியும்*
த. சண்முகநாதன் B. Ed, M. A.
(கல்விப்பின் படிப்பு Diploma சி விரிவுரையாளர்) ... ... 13

*நிறைவு*
செ. பாலச்சந்திரன்
(யா/இளவாலை மெய்கண்டான் ம. வி.) ... ... .. 17

*க. பொ. த. (உ த.) மாணவர்களுக்கான தகைமைச் செய்திட்டங்கள்*
செல்வி எஸ். கணேசலிங்கம்
(2ஆம் வருட மாணவி) ... ... ... ... ... 20

*அன்னை (கவிதை)*
திரு. க. உதயரூபன்
(யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி) ... ... ... .. 25

*பாடசாலையில் இணைப்பாட விதானத்தின் முக்கியத்துவம்*
திரு. நா. பிரணவரூபன்
(யா/இளவாலை மெய்கண்டான் ம. வி.) ... ... ... 26

*கணிப்பீட்டில் மாணவரின் பெற்றோர் பங்கு*
திரு. சின்னத்தம்பி ஜெயரூபன்
(யூனியன் கல்லூரி) ... ... ... ... 28

*கல்வியில் சமவாய்ப்புக்கள்*
திரு. இ. நவகேதீஸ்வரன்
(1ஆம் வருடம் பட்டப்பின்கல்வி டிப்ளோமா) .. ... .. 32

*விஞ்ஞானமும் விழுமியங்களும்*
சல்வி அ. பஞ்சநதம்
ர/மெ. பெ உ. த. பாடசாலை பருத்தித்துறை) ... ... 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாதனைச் செடி (கவிதை)*
செல்வி ந. ரமணா
(யா/வடமராட்சி மகளிர் கல்லூரி) ... ... ... ... 39

*வர்த்தகம் கற்பித்தலும் கற்பித்தல் சாதனங்களும்*
செல்வி மா. மகாலக்சுமி
(யா/தாவடி இந்து வித்தியாலயம்) ... ... ... 40

*பிஞ்சுமனம் (சிறுகதை)*
செல்வி வி. நிர்மலா
(யா/உடுவில் அமெரிக்கன்மிசன் கல்லூரி) ... ... 44

*ஆசிரியனே நாட்டின் உயிர்*
திரு. கே. கே. யோகநாதன்
(யா/குடத்தனை அ. த. க. பாடசாலை) ... ... ... 46

*ஆசிரியரின் பாங்கு*
திருமதி செ. செல்லையா
(யா/சுழிபுரம் கிழக்கு அ. மி. த. பாடசாலை) ... ... 48

*கருவறை முதல் கல்லறை வரை கல்வி (கவிதை)*
கே. கே. யோகநாதன் 2ஆம் வருட மாணவன் ... ... ... 50

*புதியகல்வி மறுசீரமைப்பில் ஆரம்பக்கல்வி*
செல்வி மங்களேஸ்வரி நடராசா
(யா/மா. மெமோறியல் ஆங்கில பாடசாலை) ... ... ... 51

*மறவாமை (சிறுகதை)*
இ. கலைவாணி
(குட்டியப்புலம் அ. மி. த. க. பாடசாலை) ... ... ... 54

*எந்நாளும் கல்வி*
செல்வி க. அமிர்தரஞ்ஜினி
(யா/வயாவிளான் ம. ம. வி.) ... ... ... ... 5 7

*விரியும் றோஜா மொட்டு (சிறுகதை)*
செல்வி ஞானேஸ்வரி அதிசயதாசன் 2ஆம் வருடம் ... ... ... 61

*சமூகக் கல்வி கற்பித்தலில் கட்புல செவிப்புல*
*சாதனங்களின் ப[illegible]*
திரு. க. உதயரூபன் [illegible]ஆம் வருடம் ... ... ... 64

*[illegible] நடன ஆசிரியர்களின் பிரச்சனைகள்*
திருமதி மாலினி உலகநாதன் 2ஆம் வருடம் ... ... ... 67

*குணநல மேம்பாட்டை விருத்தி செய்தல்*
திருமதி சுவேந்திரன் பாலகௌரி ... ... ... ...

*செய்திட்டம்*
திரு. சி. தனஞ்சயன்
(யா/வட்டு. இந்துக் கல்லூரி ... ... ... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெருக்கீடுகளுக்குள்ளான பிள்ளையை இனங்காணலும் அவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடும்**
செல்வி மாலினி குணரத்தினம்
(யா / தாவடி இ. த. க. பாடசாலை) ... ... ... 75

**நுண்பாகத் திட்டமிடலும் பாடசாலை அபிவிருத்தியும்**
கலாநிதி தா. அமிர்தலிங்கம்
(விரிவுரையாளர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
தேசிய கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம்.) .. ... ... 76

**கலங்கரை விளக்கம் (கவிதை)**
சி. மலர்விழி
(யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) .. ... ... ... 80

**நலமுடன் எமக்கொரு சேதிவரும் (கவிதை)**
செல்வி வி. நிர்மலாதேவி
யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி) ... ... 81

**யப்பானும் 5, 'S' திட்டமும்**
திரு. ந. சி. யோர்ஜ்
(யாழ்ப்பாணக் கல்வி வலயம் I யாழ்ப்பாணம்) ... ... 82


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உலகில் ஒரு புதிய அலை
# பின் நவீனத்துவமும் கல்வியும்

**கலாநிதி சபா. ஜெயராசா**
முதுநிலை விரிவுரையாளர், கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, பண்பாடு தொடர்பாடல் முதலிய துறைகளில் ''கோளமய மாக்கல்'' (Globalization) என்ற அலையின் எழுச்சிக்குப் பின்புலமாக அமைந்த ஒரு வகைக் கருத்தியலே பின் நவீனத்துவம் (Post Modernism) என்பதாகும். கலை இலக்கியங்களைத் தழுவி முகிழ்த்த இக்கோட்பாடு பல்வேறு அறிவுத்துறைகளிலும் வாழ்க்கைக் கோலங்களிலும் ஊடுருவி வருகின்றது. மிசேல் பூக்கோ, ரோபல்ந் பார்த்மாக் தெரிதா, மாக்லக்கான், கேபமர்ஸ், பிரான்சேலை யோத்தோ, பிரட்ரிக் ஜேம்சன், போத்திரியா, டெலூஸ் சுரூர் முதலானோரின் சிந்தனைகள் பின்-நவீனத்துவக் கருத்தியலாக்கத்துக்குரிய பன்முகப்பட்ட விசைகளாக அமைந்தன.

பாரம்பரியமான சிந்தனை மரபுகள், கோட்பாடுகள் முதலியவை பின்-நவீனத்துவக் கோட்பாட்டாளரால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மரபு வழிச் சிந்தனைகளின் கட்டுமானத்தை அவர்கள் நிராகரிக்கின்றனர். அச்சிந்தனைகளில் மேலாதிக்கப்பண்பு, ஒன்று திரட்டிய பண்பு (Totalising) வன்மை முனைப்பு (Hege Monising) முதலியவை காணப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். உணர்வு, அறிவு, சமூகம், மானிடப்பண்பு முதலாம் அறிபுள்ளிகளை ஆதாரமாகக் கொண்டு உலக நோக்கு, கல்வி நோக்கு முதலானவை உருவாக்கப்படுவதனை பின்-நவீனத்துவவாதிகள் நிராகரிக்கின்றனர். மேற்கூறிய எண்ணக்கருக்கள் ''திரட்டிய'' பண்புகள் கொண்டவை. வன்மை முனைப்பு அவற்றிடையே காணப்படுகின்றது. இவற்றுக்கு மாறாக தொடர்பற்ற தன்மைகள் மீதும், சிதைந்த பண்புகள் மீதும், தற்காலிக பண்புகள்மீதும் திரட்டப்படாத உதிரியாயிருக்கும் பண்புகள் மீதும் பின்-நவீனத்துவ வாதிகளின் கவனம் செல்கின்றது. பல்லினப் பண்புகளைக் காணுதல், சிதைந்தவற்றைக் காணுதல், உதிர்ந்து செல்பவற்றைக் காணுதல் முதலாம் அவதானிப்புக்களை அவர்கள் முன்னெடுக்கின்றனர். அத்தகைய அவதானிப்பே வலிமை மிக்குடையதென்று கருதுகின்றார்கள்.

பின்-நவீனத்துவ நோக்கில் கல்வியையும், கல்விச் செயல் முறையையும் நோக்கும் பொழுது சில அடிப்படை வினாக்கள் எழுப்பப்படுதலுண்டு. பின்-நவீனத்துவ வாதிகள் அறிவுக்கும் உண்மைக்கும் இடையே நேர்த்தொடர்புகள் காணப்படுவதில்லை என்று குறிப்பிடுகின்றனர். இக் கருத்து ஆழ்ந்து நோக்குதற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு என்பது ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பை நியாப்படுத்தும் கருவியாகின்றது. அது அதிகாரத்தின் கருவியாகச் செயல்படுகின்றது என்று மிசேல் பூக்கோ குறிப்பிடுகின்றார். அறிவுக்கும் உண்மைக்கு மிடையே உள்ள உறவானது மிக்க பலவீனமானதாகவே உள்ளது என்ற கருத்து அதிலிருந்து மேற்கிளம்புகின்றது. அதிகாரத்தைப் பலப்படுத்தும் தேவையை அறிவு நிறைவுசெய்து கொண்டிருப்பதனால், அறிவுக்கும் உண்மைக்குமிடையே விரிசல் காணப்படுகின்றது. அறிவாளி-அறிவிலி உண்மை-பொய், நல்ல முயற்சி-கெட்ட முயற்சி என்றவாறான வகைப் படுத்தல் முயற்சிகள் சமூகத்தில் அதிகாரத்தைச் செயற்படுத்துவதற் கான கருவிகளாகின்றன. அவை நேர் நிலையிலும் எதிர் நிலையிலும் சிந்தனைகளை நெறிப்படுத்தி அதிகாரத்துக்கு ஆட்பட வைக்கின்றன.

அதிகாரத்திலுள்ளவர்களது கருத்துக்களுக்கு அந்தஸ்தும், மதிப்பும், கௌரவமும், அறிவினால் பெற்றுத்தரப்படுகின்றது. அறிவே சில கருத் துக்களுக்கு மதிப்பின்மையை ஏற்படுத்துகின்றது. அதிகாரத்துக்குச் சமூக ஒப்புதல் கிடைப்பதற்குரிய வழிவகைகளை ''அறிவு'' மேற் கொள்கின்றது. அதிகார வளர்ச்சியின்போதும், ஒடுக்குமுறை வரலாற் றின் போதும், அடக்கப்பட்ட அறிவுகளையும் கல்விச்செயல் முறையின் வழியாக வெளிக்கொண்டு வருதல் வேண்டும்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நிகழ்ந்த அறிவு உற்பத்தியா னது பொருள்கள் மீது ஆதிக்கம் செலுத்தவும், இயற்கை மீது ஆதிக் கம் செலுத்தவும் பெருமளவில் முடுக்கி விடப்பட்டது. ரூசோவின் கல்விச் சிந்தனைகள், டுயியின் முதலியவற்றில் முறையே இயற்கையைக் கையாளுதல், பொருள்வழிப் பயன்பாடு முதலியவை மேலோங்கி இருந் தன. அவை பின்னர் வளர்ச்சி பெற்ற ஆட்சி முறைமைக்கு சாதகமா யின. மரபு வழி இந்திய அறிவு உற்பத்தியானது வருணப்பாகுபாட்டு முறைமை சார்ந்த அதிகார நிரலமைப்பை நியாயப்படுத்துவதற்குப் பெருமளவில் உதவியது.

றேவின் மேற்குறித்த பெறுமானத்தை போலோ பிறேற்றியும் பல எடுத்துக்காட்டுகளினால் விளக்கினார். அறிவு என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதகமாகவே பயன்படுத்தப்படுகின்றது.

**கல்வியும் மொழியும்:**

பின்-நவீனத்துவ வாதிகள் மொழியின் அமைப்பியலை மீளாய்வு செய்கின்றனர். உலகம் பற்றிய காட்சியை மொழியே ஏற்படுத்துகின் றது. மொழி வழியாகவே அனைத்தும் தரிசிக்கப்படுகின்றது. மொழி பற்றிய மரபு வழிக்கருத்துக்கள் விமர்சனத்துக்கு உள்படுத்தப்படவேண்டி யுள்ளன. சிந்தனை உலகத்துக்கும் சொல்லுக்கும், பொருளுக்குமிடையே இடை வெளிகள் காணப்படுகின்றன. பொருளைத் தரமுடியாது சொற் ' விரிசலடைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கும் உண்மைக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு மொழியமைப்பும், மொழிவழி உருவாக்கப்படும் உள அமைப்பும் துணைசெய்கின்றன. சொல்லுக்கும் அதுகுறிக்கும்பொருளுக்குமிடையே இடைவெளிகள் காணப்படுகின்றன. தேடிக்கண்டறிய முடியாதவற்றையும் உண்டென்று கூறி வலியுறுத்தும் சொற்களும் உண்டு. உண்மையென்பது கண்டறியப்படாத நிலையில் ''உண்மை'' என்ற சொல் வெறும் ஒலியாகவே நிற்கின்றது. மொழியை ஆதாரமாகக்கொண்ட கோட்பாடுகளும். தர்க்கங்களும், கல்விக்கருத்துக்களும் சொற்கூட்டமாக அதிகார அணிகளாக (Phrase Regimes) உள்ளன. நவீன உலகின் தொழில்நுட்ப வளர்ச்சியும், தொழில் முறைகளின் பன்முகப்பாங்கும் பழைய மொழிக்கட்டமைப்பைப் பயனற்றதாக்கி விட்டன என்றும் பயனும் உபயோகமும் குன்றிய மொழியே இன்று எஞ்சி நிற்கின்றதென்றும் பௌடிலிலாத் (Bavdrillard) குறிப்பிடுகின்றார் மொழியும் கல்வியும் பற்றிச் சிந்திக்கும் பொழுது இவரின் எதிர் அறிவுவாத நோக்கின் ஆழத்தையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. அதாவது உண்மை நிலையை மொழியால் நேரடியாகப் பிரதிபலிக்க முடியாதிருக்கும் இக்கட்டான நிலை இருப்பதைக் குறிப்பிடவேண்டியுள்ளது. மொழி என்பது குறிப்பான்களினால் (Signifiers) ஆக்கப்படுகின்றது. அதன் வழியாகக் குறியீடுகளை அல்லது கருத்துப் பிம்பங்களைத் தரமுடியுமேயன்றி வஸ்துவை அல்லது இயங்கும் பொருளை நேரடியாகத் தரமுடியாது என்பது சசூர் என்பாரின் கருத்தாகும். மொழித்தொடர்பாடலிலே காணப்படும் நிறைவிக்க முடியாத இடைவெளியை இது குறிப்பிடுகின்றது. மொழியின் இந்தப் பலவீனமான நிலையை கல்விச்செயல் முறையினால் வெளிப்படுத்தவேண்டியுள்ளது. ஆசிரியரும் மாணவரும் மொழிக்கட்டமைப்பின் இந்த அவலத்தை உணர்ந்து செயற்படவேண்டியுள்ளது. மொழியின் இந்தப் பலவீனத்தை ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தெரியப்படுத்தல் பின்-நவீனத்துவத் கற்பித்தலின் ஒரு சிறப்பார்ந்த பிரமாணமாகக் காணப்படுகின்றது.

**கல்வியும் தேடலும் :**

பின்-நவீனத்துவக் கோட்பாட்டின்படி ''இயல்பானது, சரியானது பொதுவானது'' என்று நம்பப்படுபவற்றை பரிசீலனை செய்வதற்குக் கல்வி கைகொடுத்தல் வேண்டும். காலம், இடம், கட்டளைகள் அனைத்தும் மாறியவண்ணமுள்ளது. அவற்றை அடியொற்றிய நியமங்கள் மாறியவண்ணமுள்ளன. இந்நிலையில் மாற்றமடையாத நடுவம் அல்லது மையம் (Centrism) என்பதைப் பரிசீலிக்கவேண்டியுள்ளது. மாற்றமடையாது காலத்தையும் இடத்தையும் கடந்து அவை எழுகின்றன என்பதை பின்-நவீனத்துவ வாதிகள் நிராகரிக்கின்றனர்.

எந்த ஓர் அமைப்பும் முற்று முழுதான முழுமைகொண்டதும் ஒத்திசைவு கொண்டதுமான அமைப்பாக அமைவதில்லை. அதில் முழுமை உண்டென்று நம்பிக்கைகொள்ள வைப்பதற்குரிய உபாயமாகப் பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியக் கல்விச் செயல்முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வரலாற்றைக் கடந்து முழுப்பொருளாக மாறாமல் நிலைத்து நிற்பதாகப்பாரம்பரியங்கள் நம்பவைக்கப்படுகின்றன. இதன் காரணமாகப் பாரம்பரியங்கள் அனைத்தும் புனிதமானவை என்று ஏற்கவைக்கப்படுகின்றன. இதனால் பாரம்பரியத்திலே காணப்படும் எதிர்மறைப் பண்புகளையும் திறனாய்வு செய்யவேண்டிய தேவையை பின்-நவீனத்துவ கல்விச் சிந்தனை முன்னெடுக்கப்படுகின்றது.

**நூலாக்கம்:**

நூலாக்கம் பற்றிய பல புதிய சிந்தனைகளைப் பின் – நவீனத்துவம் முன்வைக்கின்றது ஒரு நூலை இப்படித்தான் படிக்கவேண்டும், இப்படித்தான் விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற பாரம்பரியமான பண்டிதத்தன்மை இங்கு நிராகரிக்கப்படுகின்றது. ஒரு நூலை எப்படியும் அணுக முடியும், அந்நூலில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு எப்படியும் விளக்கங்களைத் தரமுடியும் என்று பின்-நவீனத்துவவாதிகள் குறிப்பிடுகின்றனர். நூலைப்படிப்பவனாலே அதற்குரிய அர்த்தம் உருவாக்கப்படுகின்றது. அதாவது வாசகரது முக்கியத்துவம் பின்-நவீனத்துவத்தில் சிறப்புப் பெறுகின்றது.

நூலாக்கம் என்பது முடிந்த முடிவான ஒரு வடிவமல்ல. வாசகரது உருவாக்கத்திற்கேற்ப ஒரு நூல் தொடர்ந்து வளர்ந்த வண்ணமோ, மாறிய வண்ணமோ இருக்கும். வாசகரது இயல்புக்கேற்றவாறு ஒரு நூலின் அர்த்தம் உருவாகிக்கொண்டிருக்கின்றது.

**அரசியலும் கல்வியும்:**

நாட்டினம், மொழி, சமயம், பிரதேச உணர்வு வர்க்கங்கள் முதலியவை நிறுவனமாக்கப்பட்டவைதாம் ''இயற்கையானவை'' என நம்பவைக்கப்படும் பொழுது அவை வன்முறைக்கு இட்டுச் செல்கின்றன என்று அவர்கள் மேலும் விபரிக்கின்றார்கள். மொழி, சமயம், வர்த்தகம் முதலியவற்றைப் பயன்படுத்தி அரசியற்களத்திலும், தேர்தற்களத்திலும் இறங்கும் பொழுது அதிகாரத்தைக் கோரும் பொழுதும் அங்கு வன்முறை வெளிப்படுத்தப்படுவதாக பின்-நவீனத்துவவாதிகள்தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்கள். நிறுவனமாக்கப்பட்டவை தம்மை ''இயற்கையானவை'' என்று வரிந்து கட்டும் பொழுது வன்முறை தோன்றுகின்றது. நிறுவனமாக்கப்பட்டவற்றை இயற்கையானவை என்று அறியவைப்பதில் கல்வியும் பங்கெடுத்துக்கொள்ளுகின்றது.

அரசியலும், அரசியல் தொடர்பான தீர்மானங்களும் வன்முறையோடு தொடர்புடையது என்ற கருத்து பின்-நவீனத்துவவாதிகளால் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றது. அனைத்தும் வன்முறைகளாக நக்கும் பொழுது பல செறிவுகள் கொண்ட தீர்வுகளில் குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை கொண்ட தீர்வுகளைத் தெரிவுசெய்வதற்கு கல்வி உதவமுடியும். அதாவது, தாக்கத்தைக் குறைப்பதற்குக் கல்வி துணைசெய்ய முடியும்.

தத்துவவியலாளர்கள் நித்தியமானவை (Eternal) நித்தியமற்றவை அல்லது குறித்த காலத்திற்குரியவை என்று தீர்வுகளைப் பாகுபடுத்துகின்றனர். அத்துடன் நித்தியமானவற்றை மேலானவை என்றும், குறுங்காலத்துக்கு உரியவற்றை கீழானவை என்றும் பாகுபடுத்துகின்றனர். இது ஓர் எளியதீர்வாக இருப்பதுடன் வழுக்கள் நிறைந்ததாகவும் இருத்தலைக் கல்வியறிவின் வழியாகச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. காலத்தின் சுருக்க இயலாத்தன்மையைக் (Irreducibility) கல்வி வெளிப்படுத்தல்வேண்டும். இந்நிலையில் ஏதேனும் ஒரு தீர்வுக்குள் சிக்கித் தத்தளிப்பதைக் காட்டிலும், தீர்வுகளை எட்ட முடியாத முரண்களின் அழுத்தங்களைத் தொடர்ந்து நீடிக்கச் செய்வதே பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. முரண்களின் அழுத்தங்களைத் தங்கவைப்பதற்குக் கல்வி உதவ முடியும். சாதி, மதம் முதலானவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தும் பண்புகளை முதன்மைப்படுத்தும் அரசியற் சமுகம் குறித்தும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும் என்பது பின்-நவீனத்தாரின் தொடர்ச்சியான வற்புறுத்தலாக உள்ளது.

ஒவ்வோர் அரசியல் ஒழுங்கமைப்புக்கும் அதன் எஞ்சிய வடிவத்துக்கு (Reminder) மிடையேயுள்ள வேறுபாட்டை அறிதற் செயன்முறையின் வழியாகக் கண்டுபிடிக்க வேண்டும். இந்நிலையில் எஞ்சிய வடிவம் யாது என்பது பற்றித் தெளிவுகொள்ள வேண்டியுள்ளது. அதாவது அரசியல் ஒழுங்கமைப்பு ஒன்றினை வரையறுக்கும் பொழுது அதற்குள் அடங்காது எஞ்சி நிற்பதே ''எச்சம்'' அல்லது ''மிஞ்சி நிற்கும் பகுதி'' என்று கொள்ளப்படும். இந்த மிச்சங்கள் தமக்குரிய அரசியலைத் தெரிந்தெடுப்பதற்குரிய அறிவுப்பலம் கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்பது பின்-நவீனத்துவத்தின் குரலாக ஒலிக்கின்றது. அதாவது முன்னரிலும் வேறுபட்ட ''வித்தியாசமான'' அரசியற் சிந்தனைகள் பின்-நவீனத்தாரால் முன்னெடுக்கப்பட்டன.

இங்கு அரசியலின் வித்தியாசம் (Politics of Difference) ஒன்ற கண்ணோட்டம் வலிமை பெறுகின்றது. இதனை ஓர் எடுத்துக்காட்டினால் விளக்கலாம். உதாரணமாக கறுப்பின மக்களின் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் அம்மக்களிடம் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்பான வித்தியாசங்கள் அல்லது வேறுபாடுகள் காணப்படுகின்றன. கறுப்பின மக்கள் என்ற பெருந் தொகுதியானது அவர்களிடையே காணப்படும் பொருளாதார வேறுபாடு என்ற வித்தியாசத்தைப் புறக்கணித்துவிடுகின்றது. இந்நிலையில் நிறம் என்ற உயிரியல் அடித்தளவாதத்திலிருந்து விடுபடல் வேண்டும் என்ற கருத்தை இவர்கள் வலியுறுத்துகின்றார்கள். இதனால் அந்த இனத்துக்குரிய தனித்துவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடவேண்டுமென்பது அல்ல, வித்தியாசங்களை விரிவாக நோக்கும் பொழுது பல்வேறு சாத்தியக் கூறுகள் பற்றியும், பன்மை நிலைகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து கறுப்பின மக்களின் போராட்டத்தை மேலும் வலிமைப்படுத்த முடியும்.

மூடிய சிந்தனைக்குப் பதிலாக திறந்து விரிந்த சிந்தனைகளை வளர்ப்பதே பின்-நவீனத்துவத்தின் கல்வி இலக்குகளாக அமைகின்றன. லக்கான் என்பவர் இக்கருத்தை பல எடுத்துக்காட்டுகளினால் அணி செய்கின்றனர்.

அரசியலும், கல்வியும் பற்றிய பின்-நவீனத்துவ சிந்தனைகள் அரசியலின் பன்முகத்தன்மைகள் பற்றியும், அரசியல் இலக்குகளின் பன்முகத்தன்மைகள் பற்றியும் அறிந்துகொள்வதற்குத் தூண்டுதலளிக் கின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் கூடுதலான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருத்து இன்னொரு சந்தர்ப்பத்தில் முக்கியத்துவம் குறைந்த கருத்தாக மாறுகின்றது. அரசியற் குறிக்கோளும் இவ்வாறே அசையும் குறிக் கோளாக மாறுகின்றன. அரசியற் தந்திரோபாயங்களும் பன்முகப்பட்ட னவாய் வளர்வதை அறிதற் செயல் முறையின் வாயாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது.

பின்-நவீனத்துவத்தின் அடிப்படையில் இலங்கையின் அரசியல் பற்றி நோக்குவோமாயின் பல்லினப் பண்புகொண்ட இலங்கை அரசியல் என்று கூறுவதே பொருத்தமானது.

இந்நிலையில் அரசியலின் பல்லினப் பண்புகள் கல்வியிலும் தாக் கங்களை ஏற்படுத்தும். அரசியலில் அவர்கள் குறிப்பிடும் வன்முறைப் பண்புகளும் கல்வியின் மீது தாக்கங்களையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தும். அரசியலை அடியொற்றி நீத்தியமான கல்விநோக்கு, குறுங்காலக் கல்விநோக்கு என்ற வாறான கருத்துக்களும் வடிவமைப் புச்செய்யப்படுகின்றன.

உலகம் முழுவதற்கும் பொதுவான கல்விக் கோட்பாடு ஒன்று இருக்க முடியாது. அவ்வாறே இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு கல்வித் திட்டம் இருக்க முடியாது. அப்படியொரு திட்டம் இருக்குமாயின் அது பன்முகப்பாங்குகளையும், பன்முகப் பண்பாட்டு வேறுபாடுகளையும், பன்முகத் தனித்துவங்களையும் நிராகரிப்பதாகவே இருக்கும் என்பது பின்-நவீனத்துவத்தாரின் கருத்தாகும்.

**திறனாய்வு :**

பின்-நவீனத்துவம் தனித்த ஒரு சிந்தனையாளரால் உருவாக்கப் பெற்ற ஒரு கோட்பாடல்ல. பலரால் பல்துறைகளில் பல சந்தர்ப்பங் -ளில் ஏற்படுத்தப்பட்ட சிந்தனை இழைகளைக் கொண்ட கோவையாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்-நவீனத்துவம் எழுப்பும் பிரச்சினைகள் நவீன முதலாளித்துவத்தின் கோளமயப்படுத்தல், நுகர்வோர் தொடர்பான பல்லினப் பாங்கு முதலியவற்றுடன் தொடர்புடையன. மார்க்கிய, நவமார்க்கிய வாதிகள் இன்று பின்-நவீனத்துவம் எழுப்பும் பிரச்சினைகளை ஏற்கனவே முன்னர் எழுப்பியுள்ளார்கள். அறிவு, உலக நோக்கு ஆகியவை வர்க்கநலன்களை உட்பொதிந்திருக்கும் என்ற யதார்த்தத்தை மார்க்சியம் ஏற்கனவே துல்லியமாக வெளிப்படுத்தியது. பின்-நவீனத்துவவாதிகள் அறிவுக்கும் உண்மைக்கும் இடையே நேரிய இணைப்பு இல்லை என்பதை இன்று தெளிவு படுத்துகின்றார்கள். அதற்கு மேல் மாக்சியவாதிகள் போல் அவர்களால் நகர முடியாதுள்ளது.

பின்-நவீனத்துவம் முன்வைக்கும் பன்முகமாகிய பண்புகள் என்ற கருத்தும் முரண்பாடுகளைத் தக்கவைத்தல் தொடர்பான கருத்தும் மார்க்சிய சிந்தனைகளில் பரக்கக்காணப்படுகின்றன. மேலும் அரசியலுக்கும் அதிகாரத்துக்கும் உள்ள தொடர்புகள் பற்றி பின்-நவீனத்துவ வாதிகள் குறிப்பிடும் கருத்து, மார்க்சிய வாதிகளால் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. ஆனால் பின்-நவீனத்துவ வாதிகள் புதிய நடையியலையும். சொல்லாடல்களையும் கையாண்டு மேற்கூறிய கருத்துக்களை நுண்ணியதாக விளங்குகின்றனர்.

சுரண்டலற்ற, தன்நலமற்ற புதிய ஒரு சமுகத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்பதை பின்-நவீனத்துவம் திட்டவட்டமாக விளக்கத் தவறிவிடுகின்றது. உலகின் புதிய வளர்ச்சிகளைப் பின்-நவீனத்துவம் விபரித்து விளங்குகின்றது. ஆனால் எவ்வாறு அவற்றின் அவலங்களை மாற்றியமைக்கலாம் என்ற முன்மொழிவுகள் பின்-நவீனத்துவத்தில் வறிதாகவே உள்ளது ஆனாலும் கல்விக் கோட்பாடுகள் பற்றிய ஒரு ''மறுவாசிப்பு'' வேண்டப்படுகின்றது என்ற பின்-நவீனத்துவத்தின் அழுத்தமான குரல் வரவேற்கப்படக் கூடியதாகும்.

## REFFRENCE


1. Arran E. Gare, post-modeinism and the Environmental crisis, Routledge, 1995
2. Eve ta vour bannet, post cultural theory critical theory after the marxist paradigms Macmillan, 1993
3. Francis Fukuyama, the end of history and last man, Penguin books, 1992
4. New left Review, No-146, 1984


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் திட்டமிடலும் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகளும்

கலாநிதி S. N. தணிகாசலம்பிள்ளை
மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

திட்டமிடல் என்பது ''குறிப்பிட்ட ஒரு விடயம் செய்யப்படுவதை அல்லது அடையப்படுவதை விளக்கும் ஒரு செயன்முறை அல்லது நடைமுறையாகும்''

இந்த அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாண கற்றல், கற்பித்தல் கருமத்தொடர் அதன் மூலம் அடையப்படும் மாணவனை சமுகத்திற்கு பொருத்தப்பாடுள்ள மனிதனாகக் கையளித்தல் என்ற அடைவு எந்தளவிற்கு? அத்துடன் '' அனைவர்க்கும் கல்வி '' என்ற கோட்பாடு அடிமட்டத்திற்கு எந்தளவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது? என்பவையே உங்கள் சிந்தனைக்கு ஊற்று.

இவற்றைப் பெற்றுக்கொடுக்க நியம முறைக்குட்பட்ட கல்வி நிறுவனங்கள் இவற்றுடன் தனியார் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றுடன் பள்ளிக்கூடங்களுக்கு உதவும் வசதிகளை வழங்க மேலாண்மை (Hierachey) நிறுவனங்களும் உள. இவைகள் யாவும் மேலே நோக்கிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைய சிறந்த வழிமுறைகளை உருவாக்கி செயற்படுகின்றனவா? என்பதை பகுப்பாய்வு ரீதியாக நோக்கவேண்டியுள்ளது. இந்நிறுவனங்கள் தேவையான மனித வளங்களை, பௌதிக வளங்களைப் பெற்றுள்ளனவா? அவற்றில் இருந்து உச்சப்பயனபாட்டைப் பெற்று பயன்தரு நிறுவனமாக இயங்குகின்றனவா? நிறுவன ஆளணியினர் தூண்டப்படுகின்றார்களா? ஊக்குவிக்கப்படுகின்றார்களா? அர்ப்பணிப்பு, ஆர்வத்துடன் செயற்படுகின்றார்களா? என்பனவற்றை ஆய்தல் அவசியமாகும்.

பாரம்பரிய கற்றல், கற்பித்தல் முறையான, முறைமைசாரா, (Non Fomal) முறைமையில் (In Fomal) முறைகளைப் போக்கி, முறைமைக் கல்வியில் மட்டும் வைத்துள்ள செயற்பாட்டு நம்பிக்கை எந்தளவிற்கு கல்வியில் வெளியீட்டை அளித்துள்ளது? நவீன கல்வி ரீதியான மேற்பார்வை, ஆய்வுகள், பயிற்சி முறைகள் எந்தளவிற்கு அடிமட்ட நிலையில் கல்வியை வளர்க்க உதவியுள்ளன. பொதுவான மனித விழுமியங்கள், கல்விப்பெறுமானங்களை எந்தளவிற்கு வளர்த்துள்ளன?

இவ்வினாக்களின் அடிப்படையில் திட்டமிடல் நோக்குடன் நிறுவனங்களின் உண்மையான குறிக்கோள் தொகுதியொன்றை நிர்ணயித்து வற்றை அடைவதற்கு கூடுமான அளவு திறமையானதும், வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதும், எமது மாகாணத்திற்கு பொருத்தமானதுமான வழிமுறைகளை காண உதவுமாறு வேண்டுகின்றோம். நாம் எதை அடையவேண்டும்? எவ்வாறு அடைய வேண்டும்? இதுவே திட்டமிடலின் ஆதாரம்.

''நீங்கள் எங்கு போகிறீர்கள் என்பது உங்களுக்குச் சரியாகத் தெரியாவிட்டால், சிக்கலான பாதைகளில் நீங்கள் இலகுவாக தொலைந்து போவீர்கள்'' என்பது திட்டமிடலின் அடிப்படைக்கருத்து.

**பழைய முறையா? புதிய முறையா?**
**பழமையுடன் புதிய நல்ல அம்சங்களைச் சேர்ப்பதா?**

திண்ணைப்பள்ளி முறையில் நல்ல குரு, சிஷ்ய பரம்பரை கற்றல் கற்பித்தல் முறை கேள்வி வழியான, மனனரீதியான கற்றல், நல்ல மனித விழுமியக் கையளிப்பு ஆழ்ந்த அகலமான பாடப்புல அறிவு. கிராம நகர வேறுபாடின்றி கிராமத்திலும் கட்டமைப்புள்ள நிறுவனக் கல்வி என்பன இருந்தன.

1950 களின் முன்பு இலவசக்கல்வியின் அடிப்படையில் கிராம தொகுதிகளுக்கு ஓர் மத்திய மகாவித்தியாலயம், நகர மோகம் குறைவு அந்தந்த கிராமத்தொகுதிகளில் நல்ல கல்வியும் அமைந்தபடியால் அமைதியான ஆழமான கல்வி அமைந்தன.

1960 களின் முன்பு பள்ளிக்கூடங்கள் சுவீகரிக்கப்பட முன்பு தற் சுதந்திரம், தன்னதிகாரம் கொண்ட நிறுவனமாக இருந்தன. அரசியல் ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ தலையீடு இருக்கவில்லை. அதிபர் சர்வ அதிகாரம் படைத்தவர் ஆசிரிய நியமனம், ஆசிரிய மாற்றத்தில் அதிபருக்கு பூரண அதிகாரம், கல்வி மேற்பார்வை, ஆலோசனைவழங்க வெளிமேற்பார்வையாளர்கள் இல்லை. நிறுவன நிலையில் அதிபர், ஆசிரியர்கள் தம் பள்ளிக்கூடப் பிரச்சினைகளுக்கேற்ற செயற்பாடும், தீர்வும் அமைந்தன. கல்வித்திணைக்களத்தில் இருந்து ஒரே ஒரு உத்தியோகத்தர் வருடாந்த விபரத்திரட்டு திரட்ட வருகை தருவார். ஆசிரிய பயிற்சிக்கு மரபு ரீதியான இருவருட வதிவிடப் பயிற்சி நல்ல கற்பித்தல் நுட்பம், கற்பித்தல் உத்திகள் வளர்க்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தன. அதிபர் ஆழ்ந்த அறிவுத்தளம் படைத்து, அனுபவம் பெற்றிருந்தார் சமுகம் அவரை ஏற்றிருந்தது.

**1970 முதல் 1980 வரை** பள்ளிக் கூடங்கள் சுவீகரிக்கப்பட்டமை அவற்றின் தற்செயற்பாட்டில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தியது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்பட்டமை. அதிபர்கள் அரசியல் செல்வாக்குடனும், போட்டிப்பரீட்சை மூலமும் நியமிக்கப்பட்டமை ஆசிரிய அதிபர்கள் நிலையில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியது மட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாமல் நிறுவனச் செயற்பாட்டிலும் சிக்கல்களை உருவாக்கியது. இதனால் கூடுதலான கல்வி மேற்பார்வை செய்யவேண்டிய தேவையை உருவாக்கியது.

**1980 களின் பின்பு** 1980ஐ அடுத்து வந்த பத்து ஆண்டுகளில் உள்ள பிரச்சினைகள் புதியதொரு திசைதிருப்பத்தையும் தொகுப்பமைப்பையும் வேண்டி நின்றன. 1981ஆம் ஆண்டின் வெள்ளை அறிக்கை அறிமுகப் படுத்தப்பட்டது. 1984ஆம் ஆண்டு ஜனவரி முதல் கல்வி முகாமைத்துவக் கலாச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. கூடுதலான கல்வி நிர்வாக நிறு வனங்களும், கல்வி மேற்பார்வை ஆளணியினர்களும் தோற்றுவிக்கப் பட்டனர். நல்ல அனுபவம் அறிவு, ஆற்றல், திறன் படைத்த ஆசிரியர் கள், அதிபர்கள் நிர்வாகச் செயற்பாட்டிற்கு பள்ளிக்கூடங்களில் இருந்து பறித்தெடுக்கப்பட்டார்கள். அதிகாரச் செயற்பாடு கல்வி நிர் வாகங்களை நோக்கி படை எடுக்க கவர்ச்சியாக்கியது பள்ளிக்கூடங் கள், கற்பித்தல் கருமத்தொடர் நிலையில் இருந்து அனுபவம், ஆற்றல் உள்ள மனித வளமற்று காணப்படும் நிலைக்கு மாறியது.

ஆசிரியர்கள் முறையாகப் பயிற்றப்படாமல், அர்ப்பணிப்பு இல்லா மல் வியாபார நோக்குடன் கல்வியை அணுக இடமளித்தது. ஆர்வம் கொண்டு கூடுதலான விடயங்களைத் தேடி, விரிவுரைச் செயற்பாட் டில் கற்பித்தல் தொடரப்பட்டது. தனியார் கல்வி நிலையம் பரீட்சைத் தேவையை நிறைவேற்றுவதாகவும், பணம் சம்பாதிக்கும் களமாகவும் மாறியது. கல்வி விலைபேசி காசுக்காக விற்கப்பட்டது. பள்ளிக்கூட ஆசிரியர்கள் தமது வகுப்பு மாணவர்களை பொறுப்பேற்பதிலிருந்து விலகிக் கொண்டனர். மாணவர்கள் கல்விக்காக இரண்டு நிறுவனங் களில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. உடல் உறுதி, உளவளச் செயற்பாட்டிற்கு நேரமில்லாது அங்குமிங்கும் அலைகின்றனர். அவர் களுக்கு கற்றல் செயற்பாட்டிற்கு நேரமில்லை. தங்கள் நேரத்தை கூடு தலாக கற்பித்தல்நடைபெறும் கருமத்தொடரிலேயே செலவழிக்கின்றனர்.

**1990ன் பின்பு** எமது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தோன்றிய அமை தியற்ற தன்மை கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தேசிய ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்ட கொத்தணி முறை, கோட்டக்கல்வி முறை ஒழிக்கப்பட்டு, வலய முறை அறிமுகமாக்கப்பட்டது. எமது மாகா ணத்தைப் பொறுத்தமட்டில் அவற்றிற்கு போதிய ஆளணிப்பற்றாக்குறை உள்ளதால் அம்முறையும் செயற்படுத்தப்படாமல் உள்ளது.

**1995ன் பின்பு** 1996ன் முற்பகுதியில் கல்விச்செயலாளராகப்பதவி ஏற்ற திரு. சுந்தரம் டிவகலாலா நிறுவன நிலையிலும், அவற்றின் செயற்பாட்டிலும் புதிய மாற்றத்தை உருவாக்கினார். பொதுநிர்வாகத் தில், திட்டமிடலில் அவர் பெற்ற அனுபவம் கல்வி நிறுவன, கல்வி நிர்வாக நிறுவனங்களை பகுப்பாய்வு செய்யத்தூண்டி புதிய பரிமா ணத்தை உருவாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிர்வாக நிறுவனங்களின் தலைமை நிறுவனமாக அமையும் கல்வி அமைச்சு தொடக்கம் பள்ளிக்கூடம் வரை உள்ள நிறுவனக் கட்டமைப்பை உறுதிப்பாடானதாக்கும் அடிப்படையில் அவரது ஆலோசனையில் பல்வேறு நடவடிக்கைகள் நோக்கப் படுகின்றன. கல்வி அமைச்சு நிறுவனம் திட்டமிடல் பிரிவு, கல்வி அபிவிருத்திப் பிரிவு, கல்வி ஆய்வும் பயிற்சியும் பிரிவு, ஆரம்பக்கல்விப்பிரிவு, கல்விமேற்பார்வை, மதிப்பீட்டுப் பிரிவுகள் என்பன நிறுவப்பட்டு அனுபவமும், தேர்ச்சியும் உள்ள ஆளணியினர்களால் ஆளணிப்படுத்தப்பட்டுள்ளன. இவை மாவட்ட மட்டத்துக்கு விரிவாக்கப்பட உள்ளன.

**திட்டமிடலின் முக்கியமான பிரச்சினைகள்:**

1. உறுதிப்பாடான நிறுவனக் கட்டமைப்பு இன்மையும், ஆளணிப்படுத்தல் முறையாக இன்மையும்.

இவற்றின் அடிப்படையில்

a) இருக்கும் கல்வி ஆளணியினர் தொகைக்கேற்ப கல்வி நிர்வாக மேற்பார்வை நிறுவனங்களின் அளவைக் குறைக்கலாமா?

b) தேசிய மட்டகல்வி நிர்வாக வலய முறைமையுடன் நாம் எம்மை ஈடுபடுத்த வேண்டுமா?
அல்லது எங்களுக்கேற்ற முறையை உருவாக்குவதா?

c) கல்வி நிர்வாக மாவட்டங்கள், கோட்டங்கள், நிர்வாக மாவட்டங்களுக்கு ஒத்ததாக இருப்பதா அல்லது கோட்டங்களை (அதாவது தொகையில் குறைந்த பள்ளிக்கூடங்கள் கொண்ட கோட்டங்களை கொத்தணி முறைக்குட்படுத்தி நிர்வகிப்பதா இல்லையா? இவற்றில் அரசியல் தலையீடு வருவது தவிர்க்க முடியாதா? அதனைக் கருத்தில் கொள்ளாமல் விடுவதா?

d) பள்ளிக்கூடங்களில் நல்ல கற்றல், கற்பித்தல் கருமத்தொடர் நடைபெற அவற்றுக்கு தலையீடின்றி, தற்சுதந்திரம், தன்னதிகாரம் கொண்டு இயங்க வழி அமைப்பதா?

2. தகவல்கள், தரவுகள் முறைமையையும் பகுப்பாய்வின்மையும்.

a) பள்ளிக்கூடம் முதல் கல்வி அமைச்சு வரை தகவல்கள், தரவுகள் முறைமையை வினைத்திறமையுடையதாகவும், உகந்த தீர்மானம் மேற்கொள்வதற்கும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கும் வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

b) இம்முறைமையில் எங்கள் முறைமை குறைவுடையது. காரணம் இத்துறையில் ஈடுபடுத்தப்படும் திட்ட அலுவலர்கள் ஆசிரிய சேவையில் இருந்தே நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு போதிய பயிற்சியும் பொறுப்பும் அளிக்கப்படவில்லை. அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு திட்டமிடல் சேவைக்கு உள்ளீர்க்கப்படல் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c) இவர்களை மேற்பார்வை செய்பவர்கள் வழி நடாத்துபவர்கள் திட்டமிடல் முறையில் அறிவு, பயிற்சி இல்லாதவர்களாகக் காணப் படுகின்றனர். அவர்களுக்கு உள்ளூர் வெளியூர் பயிற்சி அளிக்க வழி காணப்பட வேண்டும்.

d) அதிபர்கள், ஆசிரியர்கள் இதன் பெறுமானத்தை விளங்காமல் உள்ளனர் சில வேளைகளில் உண்மைக்கு புறம்பான தகவல்கள், தரவுகளை அளித்து விடுகின்றனர். வெவ்வேறு இடங்களில் வெவ் வேறு தகவல்கள் கோருவதும், அவர்கள் வழங்குவதும் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றது. இதனால் வெற்றிகரமாக எமது குறிக்கோள் களை அடைய முடியாதுள்ளது. இதனால் எம்மால் உருவாக்கப் படும் செயல் திட்டங்கள் குறித்த இலக்கை அடைய முடியாமற் போய் விடுகின்றது.

3. கணனிமுறையும் வலைப்பின்னல் (Net Work) முறையும்

1. சர்வதேச ரீதியாக, உள்நாட்டு ரீதியாக இம்முறைக்கு அப்பாற் பட்டுள்ளோம்.
2. இவற்றை விருத்தியாக்க எந்தெந்த முறையில் ஆக்க நடவடிக்கை கள் மேற்கொள்ள வேண்டும்.

4. தரவுகள், தகவல்கள் பகுப்பாய்வும் அவற்றினூடாக நல்ல தீர்மானம் மேற்கொள்ள லும், திட்டமிடலுக்கு உதவலும்.

a) நம்பகரமான, உண்மையான தகவல், தரவுகளைப் பேணல்
b) ஏதாவது மாற்றம் நிகழின், அவற்றை உடனுக்குடன் அறியத்தரும் நிலை உருவாக்கல்
c) தரவுகள், தகவல்கள் எல்லா மட்டங்களிலும் ஒரு தொடர்பை உள் ளக வலைப்பின்னல் முறை (Inter-Net System) மூலம் உருவாக்கல்
d) பள்ளிக்கூடங்கள், கோட்டங்கள், மாவட்டங்கள், அமைச்சுமட்டங் கள் யாவும் ஒன்றுக்கொன்றுடன் பிரச்சினைகளுக்கு தீர்வுவேண்டி தொடர்பு கொள்ளக்கூடிய சூழலை உருவாக்கல்

5. நிறுவனப் பகுப்பாய்வும் மீள் உருவாக்கமும்

a) நிறுவனத்தளக்கோலம், இடஅமைவு, பௌதீகச்சூழல், கட்டிடநிலை (அமைந்துள்ளவை, அமையப்போவது) மனிதவளநிலை, பௌதீக வளநிலை பற்றிய பகுப்பாய்வு
b) எல்லா நிறுவனங்களுக்கமைய நிலஅளவு, கட்டிடங்கள் பௌதீகச் சூழல் பற்றிய படவரைவைப் பேணல்

இப்பிரச்சினைகளில் தங்கள் அவதானிப்பையும், ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மைய முகாமைத்துவம் நோக்கிய நகர்வும் ஆசிரிய திறன் விருத்தியும்

ந. சண்முகநாதன், M. A.
சிரேஷ்ட விரிவுரையாளர்.

கல்வியை வழங்கும் ஏகபோக உரிமை பாடசாலைகளிடமிருந்து பறிக்கப்பட்டு வருகிறது. முழுமையான கல்வியை வழங்கும் ஆற்றலை பாடசாலைகள் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தை பலரும் வலியுறுத்த விழைகின்றனர். பாடசாலை ஆசிரியர்கள் கண்டனத்திற்கு உரியவர்களாகிவிட்டனர். பாடசாலைக்குப் பதிலாக கல்வியை வழங்கும் மாற்று நிறுவனங்கள் பற்றி பலரும் சிந்திக்கின்றனர். இந்நிலையில் நமது நாட்டில் பாடசாலைகளை வலுவுள்ளதாக்கவும், ஆசிரியர்களை செவ்வை சார் பணியாளர்களாக்கவும் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று அறிவுத்தொகுதி வரம்பை மீறிய பெருக்கத்திற்காளாகியுள்ளது. வெறுமனே நூற்கல்வி என்ற பாடப்பொருள் சார்ந்த கல்வியை வழங்குவதுடன் பாடசாலைகளின் பொறுப்புணர்வும் பங்களிப்பும் அடங்கமுடியாது. இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வித்தேவை விரிந்து பரந்த அறிவுப் பெருக்கத்திற்கமைய வேறுபட்டுள்ளது. இதற்கமைய பாடசாலையைத் தயார்ப்படுத்தும் நோக்கில் பாடசாலை மைய முகாமைத்துவம் முன்மொழியப்பட்டுள்ளது.

ஆசிரியர் ஒரு புத்தாக்கச் செயற்பாட்டாளர். ஆசிரியர் தனது பாடசாலையை ஆக்கபூர்வமான பொறுப்புமிக்க பணியினை நிறைவேற்றும் நிறுவனமாகச் செயற்படவைக்கும் பொறுப்பு உடையவராக எதிர்பார்க்கப்படுகிறார். அவரது கவனம் கற்றல் தொடர்பாக நான்கு விடயங்களில் ஈர்க்கப்பட வேண்டியுள்ளது.

1. அறிந்து கொள்வதற்காகக் கற்றல்
2. குறிப்பிட்ட ஒன்றினை ஆற்றுவதற்காக கற்றல்
3. இணைந்து வாழ்வதற்காகக் கற்றல்
4. ஆவதற்காகக் கற்றல்

இக்குறிக்கோளினை எய்தக் கல்வி நிருவாக முறையில் மாற்றம் வேண்டப்படுகிறது. அதனைச் செயற்படுத்த நமது நாடு இந்நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கிறது. கடந்த கால நிருவாகச் செயற்பாடுகளே பாடசாலையின் ஆற்றலை செயலற்றுப்போகச் செய்தது. ஆசிரியர்களதும், பாடசாலைகளினதும் சுதந்திரம் சோதனைக்குள்ளானது. கல்வி நிருவாகச் செயற்பாட்டில் காலனித்துவ காலத்தைவிட மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அதிகார மனோபாவம் சகல தரப்பிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. புதிய கல்வி மாற்றங்கள் கூட இந்நிலையை மாற்றியமைக்க முடியவில்லை. அதிபர்கள், ஆசிரியர்கள், உள்ளூர் சமூகத்தினர் கல்வி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளவோ, சுயமாக பங்குகொள்ளக்கூடிய வகையிலே கல்வி நிருவாக நடைமுறை இருக்கவில்லை. கல்வி நிருவாகச் செயற்பாடும் மத்திய அரசுக்குவிந்திருந்த நிலைமாறி, அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டது. மாகாண அரசு, மாவட்ட நிர்வாகம், வலய நிருவாகம் என அதிகாரபரவலாக்கம் இடம் பெற்றதன் விளைவு, நடைமுறையில் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தவில்லை. அதிகாரபரவலாக்கலின் பின்பு அதிகார மனோபாவம் கொண்ட பெருந்தொகையான நிருவாகிகளின் எண்ணிக்கை பெருகியது. ஆசிரியர்களதும், பாடசாலைகளினதும் சுதந்திரம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

ஒரு அதிபர் தனது பாடசாலையை முகாமை செய்வதைவிட பெருமளவு நேரத்தை, தன்னை நிருவகிப்போரது கருத்துக்களுக்குச் செவிமடுப்பதிலும், அவர்கள் எதிர்பார்க்கும் தகவல்களை வழங்குவதிலுமே செலவிட நேரிட்டது. தனது பாடசாலை நலனுக்காகப் பலரைதரிசித்து, திருப்தி படுத்த வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. அதிபர்கள் சமூகத் தலைவர்களாகக் கணிக்கப்படவில்லை. சமூகத்தால் துச்சமாக மதிக்கப்படும் நிலையை கல்வி நிருவாகச் செயற்பாடுகள் அவருக்கு ஏற்படுத்திக்கொடுத்தன.

1990இன் முற்பகுதிகளில் பாடசாலைமைய முகாமைத்துவம் பற்றிய ஏற்பாடுகள் உலக நாடுகளில் தலை தூக்கின. பாடசாலையை சீரான செயற்பாடுகளின் பால் ஈடுபடுத்தவே இத்தகைய ஏற்பாடுகள் உலக அரங்கில் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் கல்வி பற்றி அக்கறை கொண்டோர் இதனால் ஈர்க்கப்பட்டு பாடசாலை மைய முகாமைத்துவத்தை முன் மொழிந்தன. 2001ஆம் ஆண்டில் இதனை நோக்கி மெல்ல நகரும் நிலை ஏற்பட்டுவருகிறது. பாடசாலைகள் மீது ஏற்பட்டுள்ள கெடுபிடிகளை அகற்றும் நோக்கிலும், பாடசாலைகளை வலுப்படுத்தும் நோக்கிலும் இம்முயற்சி மேற் கொள்ளப்பட்டது. பாடசாலைமைய முகாமைத்துவ ஏற்பாடு சில முக்கிய எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்தது. அவையாவன

1. பாடசாலை இயங்குவது தொடர்பான கொள்கைகள் அப்பாடசாலைச் சமூகமே உருவாக்க வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், சமுதாய உறுப்பினர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட ஒரு சபையினால் சுயவிருப்பின் அடிப்படையில் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பாடசாலையின் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது விரும்பத்தக்கது.

3. பாடசாலைகள் தமது வினைத்திறனை அதிகரிக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி, தமது சமூக செல்வாக்கினை மேம்படுத்துதல்.

4. பாடசாலைகளுக்கான செலவினங்களைக் குறைத்து அவை சிக்கன முறையில் இயங்க உதவுதல்.

5. பாடசாலை நிர்வாகம் தொடர்பான பயிற்சியையும் அனுபவத்தையும் அதன் உறுப்பினர்கள் பெற்று விளிப்புணர்வுடன் செயற்படல்.

6. பாடசாலை முகாமையாளர்கள் வகைகூறி இயங்கும் வகையிலான கண்காணிப்பை வழங்குதல்.

இத்தகைய எதிர்பார்ப்புகளுக்கமைய செயற்பட்டால் பாடசாலைக்கும் அதன் உள்ளூர் சமூகத்திற்குமிடையே வலுப்பெறும் இணைப்பு மூலம் பாடசாலை தனது முன்னைய சுய கௌரவத்தை பெறமுடியும். இதனால் பாடசாலைகள் சமூக நம்பிக்கைக்குரிய நிறுவனங்களாக மாறமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலையின் ஆற்றல் கேள்விக்கிடமாகும்போது ஆசிரியர்கள கணிப்பை இழக்கிறார்கள். பாடசாலையின் மனித வளம் என்பது ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகிய இருசாராருமேயாகும். இருசாராரிடையேயும் ஏற்படும் தொடர்பின் தாக்கத்தைப் பொறுத்தே பாடசாலையின் செயன்முறையாகும். பாடசாலைக் கல்விச் செலவினத்தின் 80% ஆசிரியர் சம்பளத்த்திற்காகவே செலவிடப்படுகிறது. வெறும் நூற்கல்விக்காக இப்பணம் செலவிடப்படவில்லை. மாணவர் திறமைகள் தேர்ச்சிகள் மறைந்துள்ள ஆற்றல்கள் என்பனவற்றை வெளிக்கொணரவும் வினைத்திறன் பொருந்திய வாழ்க்கை மாற்றத்தினை மாணவனுக்கு வழங்கவுமே ஆசிரியர் செலவினம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே ஆசிரியர் திறன் இத்தகைய எதிர்பார்ப்பினை நிறைவுசெய்யும் வகை அமைய பாடசாலை மைய முகாமைத்துவ செயற்பாடு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் நிறுவனங்கள் போன்று பாடசாலைகளும் தமது வினைத்திறனை அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய சமூகத்தேவைக்கு ஏற்ப கல்வியை வழங்கும் வகையில் ஆசிரியர்கள் தமது வினைத்திறனை பெருக்க கட்டாயப்படுத்தப்படுவர். உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்கால நடைமுறை ஒன்று மீண்டும் உருவாக்கப்படலாம். ஆசிரியர் தன்னை முகாமை செய்யும் பாடசாலை முகாமைத்துவ சபைக்கு வகைகூறுபவராக அமைகின்றார். ஆகவே அவர் தனது வினைத்திறனைப்பேண நிர்ப்பந்திக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தனது பாடசாலை, பாடசாலைச் சமூகம், பாடசாலை தொடர்பான நிறைவேற்றற்குரிய கொள்கைகள் என்பனவற்றோடு நெருங்கிய தொடர்பு பெற்று சுய விருப்பினை ஏற்படுத்திக்கொண்டு பணியாற்றவேண்டியவராகிறார். தான் பணியாற்றும் பாடசாலையின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்பவராகின்றார். தனது பாடசாலை பற்றிய ஆய்வு நோக்குடன் செயற்பட வேண்டியவராகின்றார். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நலிந்த பிள்ளைகளின் நலன்பேணி செயற்பட வேண்டியவராகின்றார். மாணவர் கல்வி தொடர்பான பொறுப்பினை சுயமாக ஏற்றுக்கொள்ளும் ஒருவராகின்றார். தனது மாணவனை இனங்கண்டு அவனது இயல்பிற்கமைய அவனை வழிநடாத்தி புதிய உலகப்போக்கிற்கேற்ப வெற்றிகரமாக அவனை தயார்படுத்தும் நிலைக்கு தன்னை ஆக்கிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றார். அரசாங்கப்பாடசாலை ஆசிரியன் என்ற வேண்டா வெறுப்பு மனநிலை நீங்கி தான் சார்ந்துள்ள பாடசாலையின் இயங்கும் உறுப்பினர் என்ற மனோபாவத்தினை பெற்றுக்கொண்டு செயற்படமுனைவார்.

எந்தச் சமூகம் தனது பாடசாலையை விமர்சிக்கின்றதோ அந்தச் சமூகம் பொறுப்பற்று செயற்படுகிறது எனலாம். பாடசாலை மைய முகாமை பாடசாலைச் சமூகத்தினை பொறுப்புணர்வுடனும் விளிப்புணர்வுடனும் செயற்படவைக்கும்.

இன்று நிலவும் பாடசாலை நிலையிலிருந்து விடுபட்டு புதிய உத்வேகத்துடன் செயற்படும். ஒரு புதிய சமூக சூழ்நிலையே ஏற்படும் என நாம் நம்பலாம். நெருங்கிய முகாமையாகவும் தொடர்புறு நேரடி முகாமையாகவும் பாடசாலை மைய முகாமை அமைவதால் அது பல புதிய மாற்றங்களை விளைவிக்க முடியும்.

பாடசாலை தர உள்ளீடு கல்வி மூலதன செயற்பாடு ஏற்பாடு போன்ற இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவும் பாடசாலைகளின் திறன் விருத்திக்கான புதிய முகாமைத்துவ உத்திகளாகும். எவ்வாறெனினும் பாடசாலைகளின் முழுமையான ஆற்றலை மீண்டும் துலங்கச்செய்யவும் அதனைச் சமூகம் இருகரம் நீட்டி இதயபூர்வமாக ஒப்புக்கொள்ளவும் வழிசெய்யப்படுகிறது. இதன் நிறைவில் பாடசாலை மைய முகாமைத்துவ செயற்பாடு நடைமுறையில் வெளிப்படும் ஆசிரியர்கள் திறன்மிக்க முகாமைத்துவ இயங்கிகளாக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Second Year Students*



**1ST ROW SEATED L to R :-**

Miss. K. Amirtharanjini, Miss. M. Mahalaxumy, Miss. S. Velummylum, Miss. Y. Kandiah (Lecturer), Mr. K. Sanmuganathan (Lecturer), Mr. S. Balachchandran, Mr. T. Amirthalingam (Lecturer), Mrs. V. Sanmugananthan (Lecturer), Miss. M. Manoharan.

**2ND ROW STANDING L to R :-**

Miss. N. Mangaleswari, Mrs. S. Saththiyapalan, Mrs. B. Malarvili, Miss. K. Renuka, Miss. A. Radha, Miss. K. Parapari, Mrs. A. Murugadas, Miss. V. Jeyanthi, Miss. T. Kanagarajasingam, Miss. M. Sangamiththa, Mrs. S. Rathidervi, Miss. R. Sivaneswari.

**3RD ROW STANDING L to R :-**

Mrs. P. Arulnesarani, Miss. R. Kalaivani, Mrs. S. Kuganesan, Mrs. S. Vasuki, Miss. V. K. Chandravathani, Miss. N. Prema, Miss. K. Dharshinidervi, Miss. K. Yalini, Miss. S. Pathmalogini, Miss. S. Sithadervi, Miss. A. Ann Felishiya, Miss. S. Deresvari

**4TH ROW STANDING L to R :-**

Mr. N. Piranavaruban, Mr. S. Jeyaruban, Mr. M. Saravanabavan, Mr. K. Sath
Mr. A. Yoheswaran, Mr. S. Pradeepan, Mr. P. Kalayarasan, Mr. M. Murug

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவு

செ. பாலச்சந்திரன்
2ஆம் வருட மாணவன்.

உடம்பை உணவு வளர்க்கும். உள்ளத்தை அறநெறிகள் வளர்க்கும். உயிரைச் சமயஞானம் வளர்க்கும். வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும். உள்ளம் உயர்ந்தால் மனிதன் உயர்வான். ஆதலால் இனிய கனியமுதம் அன்ன ஆன்றோர்கள் கூறும் அறிவுரைகளை நாம் எப்போதும் தப்பாது கேட்டும், ஓதியும் உய்வு பெறுதல் வேண்டும்.

ஒரு மனிதன் தான் வாழும் காலத்தில் மனநிறைவுடன் வாழவே விரும்புகின்றான். தன் வாழ்வை நிறைவுடையதாக மாற்ற மனிதன் திருப்தியுடையவனாக இருக்க வேண்டும். திருப்தி உடையவர்களைக் காண்பது அரிது, நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர் அதிருப்தியுடன்தான் அல்லற் படுகின்றனர். இதனையே செந்நாப்போதார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்றார். நிரம்பிய செல்வத்தால் திருப்தி உண்டாகின்றதா? இல்லை. இல்லைப் பெரும் பணம் படைத்தவர்களும் உண்ணாமலும் உறங்காமலும் பேயாய்ப் பறந்து திரிந்து அலைகின்றார்கள். திருப்தி என்றது பொருளின் சிறப்பில் அமைந்திக்கவில்லை. அது மனத்தில் விளைகின்ற விளைவு நாம் திருப்தியுடன் இனிது வாழவேண்டும். ஆனால் அதற்கு என்ன செய்யவேண்டும்?

நாம் நம்மிலும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைக் கண்டு ஏதோ கடவுள் நமக்கு இவ்வளவு ஏனும் தந்தாரே, என எண்ணிப் போதும் என்று மனநிறைவு அடையவேண்டும்.

குடிசையில் வாழ்பவன் வீடின்றி மரத்தடியிலே, மழையிலே நனைந்து வெய்யிலிலே காண்பவனைக் கண்டு எனக்கு ஆண்டவன் இக்குடிசையைத் தந்தானே எனவும், நடந்து போகின்றவன் காலில்லாதவனைக் கண்டு கடவுள் நமக்கு நன்கு நடக்கக் காலைத்தந்தாரே என்று மகிழவேண்டும். கஞ்சி குடிப்பவன் பட்டினி கிடப்பவனைக் கண்டு திருப்தியடையவேண்டும்.

கிடைத்தபொருளைக் கண்டு இதுவாவது கிடைத்ததே என்று திருப்தி அடைவதே அறிவுடமை. அங்ஙனம் திருப்தி அடைகின்றவனைக் கண்டு கடவுள் அருள் புரிகின்றான். வாழ்த்துகின்றான். அதிருப்தி மனிதனை அழித்துவிடும். திருப்தி மனிதனை வாழவைக்கும். ஆனால் மனிதன் ஒரே ஒரு விடயத்தில் மட்டும் திருப்தி அடையக்கூடாது எனக் குமரன் அருள் பெற்று செஞ்சொல் கைவரப்பெற்ற குமரகுருபர சுவாமிகள் இவ்வாறு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா! பெரிதென்றகமகிழ்க — தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

கல்வியறிவு குறைந்தவன் தம்மினும் குறைந்த கல்வியுடையானைக் கண்டு திருப்தியடையக் கூடாது. தம்மினும் மேலான கல்வியாளரைக் கண்டு நாமும் அவர் போலக் கல்வி பயிலவில்லை என்று கருந்தழிந்து மேலும் கல்விநலம் பெறுதல் வேண்டும். ஆகக் கல்வி தான் ஒரு மனிதனை நிறைவுடையவனாக்க வல்லது என்று கூறலாம். பழந் தமிழ் நூல்கள் கூறுவதில் இருந்து பார்க்கும் பொழுது

"நிறைமொழிமாந்தர் ஆணையிற் பிறந்த
மறைமொழி தானே மந்திரம்"

என்பதும் ஈண்டு நோக்கற் பாலது.

பொய்யாமொழிப் புலவரும்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலைத்து
மறைமொழிவு காட்டிவிடும்...

என்றார்.

மேற்கூறிய இரு கூற்றுக்களையும் ஒப்புநோக்கினால் உண்மையான நிறைவு என்ன என்பது புலனாகும்.

கல்வியை நன்கு கற்றுத் தெளிந்து ஒழுக்கமாக வாழ்பவன்கூடச் சில சமயம் மனநிறைவு அற்றுக்காணப்படுகின்றான். ஏன்? அவன் தன் சுயநலம் காரணமாகச் சமூகத்துடன் இயைபாக்கம் பெறாது சமூகத்துடன் ஒட்டி வாழாது இருப்பதனாலேயேயாகும். இதனைத்தான் வள்ளுவர்

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்"

என்றார்.

சரி, பொருள் பெற்றவனுக்கும் நிறைவு இல்லை, கல்வி கற்றவனுக்கும் நிறைவு இல்லை, உலகத்துடன் ஒட்டி வாழ முடியவில்லையே, என்ற குரல் பலமாக ஒலிக்கின்றது. ஏன்? இன்று உலகம் ஒரு நாட்டைப் பார்த்து ஒரு நாடு அஞ்சும் அளவிற்கு ஆயுதவளர்ச்சி பெற்று நிற்கின்றது. பரஸ்பர நம்பிக்கை அற்றுப்போய்க்கொண்டு இருக்கிறது. ஆனாலும் உலகின் மறுபக்கத்தைப்பார், அன்பின் குரல் ஒலிக்கின்றது.

'அன்பும் சிவமும் இரண்டல்ல...' எனப் போதித்த திருமூலர் வாக்கை நிசர்சனமாகக் காண்கின்றோம்.

நாவுக்கரசர் கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் எனக் கூறுவது இங்கு நோக்கற்பாலது. இன்றைய கலியுகத்திலே பல கோடி மக்களை ஜாதி, மத பேதமின்றி அன்பினாலே அரணைக்கும் ஒரு குரல் ஒலித்துக்கொண்டு இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சத்ய மேவ ஜயதே' என்பது பரந்து விரிந்த இந்திய அரசின் அடிப்படைப் பூட்கை (உபநிடதவார்த்தை) அங்கே சத்திய நாதனாக நின்று நித்திய ஆனந்தத்தை தருகின்றவர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா.

"அரிசி வெந்து அன்னம் ஆகும்வரை நெருப்பு எவ்வாறு அவசியமோ அதுபோல் உனக்குள் நிறைந்து இருக்கும் தெய்வீகத்தை நீ எப்பொழுது உணர்வாயோ அப்பொழுது நீ நிறைவுடையவனாகிறாய். சத்யம் நிலவும் இடத்தில் தெய்வீகம் இருக்கும். தெய்வீகம் உள்ள இடத்தில் ஆனந்தம் இருக்கும். ஆனந்தம் தானே வாழ்வின் நிறைவு. உலகின் எல்லா ஜீவராசிகளும் விரும்பும் ஒன்று ஆனந்தமே. அதுவே நிறைவு. உமாபதி சிவாச்சாரியாரின் கூற்றும் இதையே மெய்ப்பிக்கின்றது.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினார்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

— திருவருட்பயன்

சேந்தனார் திருப்பல்லாண்டிலே அண்டங்கடந்த பொருள், அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்; பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என விளம்பி நிற்கின்றார்.

சமயம் செய்யும் போதனைகள் தான் ஆன்மீக நிறைவைத் தருவன. ஆன்ம சுகத்தைத் தருவன. அது பைபிள் ஆகலாம், கீதை ஆகலாம், குர்ஆன் ஆகலாம், நமது நோக்கிலே சைவம் என்றால் சிவ சம்பந்தமுடையது என்பதுபொருள். பண்டிதமணி கலாநிதி மு. கந்தையா அவர்கள் சிவன் பற்றிக் குறிப்பிடும் பொழுது உருத்தெரியாக்காலத்தே உட்புகுந்து இருந்துகொண்டு உயிரைத் திருத்தி எடுப்பதற்காகப் புறம் புறம் திரிந்து முடிவில் அதைத் தனது வண்ணமாக்கித் தேனாக இன்னதாக அதற்குத் தித்திப்பு நல்கும் பேரதிசயப்பொருள் என்றார். "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுள்ளே புக்கு நிற்பவன்; என்றும் உள்ள அறிவுமயமான ஆனந்தப்பொருள் ஆகிய சச்சிதானந்தம் தான் முடிவாக நிறைவு தரும் பொருள். பரம்பொருள். அதைப்பற்றிய கனியமுதம் அன்ன ஆன்றோர்கள் கூறும் நற்சிந்தனைகளை நாம் தப்பாது எப்போதும் கேட்டும் ஓதியும் நிறைவு பெறுவோமாக.

"கல்வியின் இறுதி இலக்கு ஒழுக்கம், அறிவின் இறுதி இலக்கு அன்பு"

(ஸ்ரீ சத்யசாயி)

---

**உசாத்துணை நூல்கள் :**


1. கட்டுரைகள் — தெய்வத்திரு திருமுருக கிருபானந்தவாரியார்
2. சிவஞானபோதம் — சித்தாந்த பண்டிதர் செல்லையா சிவபாதம்
3. மனிதவிழுமியத்துக்கான — சத்தியசாயி கல்வி — தமிழில் தொகுப்பு கலாநிதி சபா ஜெயராசா
4. திருக்குறள்
5. திருப்பல்லாண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த. (உ/த) மாணவர்களுக்கான தகைமை விருத்திச் செய்திட்டங்கள்

செல்வி எஸ். கணேசலிங்கம்
2ஆம் வருட மாணவி.

செய்திட்டம் என்பது மாணவர்களை ஏட்டுக்கல்வியில் இருந்து உற்பத்தி நோக்கிய தொழிற்பாட்டுக் கல்விக்கு இட்டுச் செல்லும் வகையில் மாணவர்களின் இயலுமைக்கு ஏற்ப ஓர் குறித்த கால வரையறையினுள் அவனால் திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளீடுகள் தரவுகளாக வழங்கப்பட்டு ஓர் வெளியீட்டை சுய ஆளுமையூடாக வெளிக்கொணர வழிவகுக்கும் நோக்கில் எமது அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே செய்திட்ட அறிக்கையாகும்.

இத்திட்டத்தின் மூலம் மாணவன் ''தன்னை உணர்தல், தன் ஆளுமையை வெளிக்கொணரல், சுயசக்தி, மதிப்பிடலின் ஊடாக தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளுதல், சமூக ஊடாட்டம் பெறல், தொடர்பாடல் திறன் விருத்தி, சமூகத்தில் தானும் ஒரு அங்கத்தவன் ஆதல், சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனம் காணும் ஆற்றல், அதற்கான காரணிகளை ஆராய்ந்து தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் ஆற்றல், மற்றும் ஓர் தலைமைப்பக்குவம் பெறல், சுயமாக வேலை வாய்ப்பை பெற விளைதல், எந்தச்செயற்பாட்டின் மூலமும் திருப்தி அடையும் மனப்பக்குவம் பெறல், பிறரது பிரச்சினைகளில் கரிசனை கொள்ளல், மனிதநேயப் பண்புகளை வளர்த்தல், கிடைக்கும் வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெற விளைதல், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, புரிந்துணர்வு, கூட்டுமுயற்சி, இரக்கம், பிறரது செயற்பாடுகளை மதிக்கும் பாங்கு என்னும் வாழ்வின் எதிர்நீச்சலுக்கு வேண்டிய தேர்ச்சிகளையும் பெற்று சமூகத்திற்கும் தனக்கும் தன் நாட்டிற்கும் உகந்ததோர் எல்லா விடயங்களிலும் அறிவு, ஆற்றல், ஆளுமை, விருத்திப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கிலேயே இத்திட்டம் உயர்கல்வி மாணவர்களுக்கு ஓர் நடத்தை மாற்றத்தை உண்டுபண்ணும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் மாணவன் தன் சுய ஆளுமை, சுயவிருப்பு, உற்பத்தி திறன் பாங்கு என்பவற்றை குறித்த கால வரையறையினுள் அடையக்கூடியதாக அவனாலேயே ஓர் தலைப்பு தேர்ந்து எடுக்கப்பட்டு செயற்படுத்த இணக்கம் கண்டுள்ள இச்செயற்திட்டம் ஆனது உறுதியானதாக இருப்பின் சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே ஓர் மாணவன் தன்னால் தெரிந்து எடுத்த தலைப்புக்கு உரிய செய்திட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு பின்வரும் விடயங்களில் அக்கறை சலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவையாவன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்திட்ட அறிக்கையிடல் தொடர்பான விடயங்கள்:**

**1. செய்திட்ட தலைப்பு:**

*மாணவர் தன் செய்திட்டப் பிரேரணையில் கொடுத்த செய்திட்ட வகையை தெளிவு படுத்துவதாக அமையும்.*

*உ-ம்*

*1. ஆக்க வகை செய்திட்டம்:*

*சூழலில் வீணே வீசப்பட்டுள்ள குளுக்கோஸ் போத்தல்களில் இருந்து அழகுப்பொருட்கள் தயாரித்தல்*

*2. ஆய்வு வகைச் செய்திட்டம்:*

*பாடசாலைக்கு மாணவர் பிந்தி வருவதற்கான காரணங்கள் பற்றிய ஓர் ஆய்வு*

**2. பொழிப்பு:**

*இவ்விடயம் தொடர்புபடுத்துவது என்னவெனில் முழுமையாக தயாரிக்கப்பட்ட ஒப்படையின் ஓர் சுருங்கிய ஆனால் தெளிந்த கருத்தை தருவதாக அமையும். எனவே இங்கு மாணவனது முழு அனுபவமும் பிரதிபலிப்பதுடன் செய்திட்ட விடயத்தை முழு நோக்கில் பார்வையிடாது சுருங்கிய பார்வையிலேயே தெளிவுபடுத்துவதாக அமையும்.*

**3. அறிமுகம்:**

*மாணவன் செய்திட்ட வகையில் தன்னால் தெரிந்து எடுக்கப்பட்ட தலைப்பை இயற்றுவதற்கு தூண்டுவித்த அல்லது வித்திட்ட காரணியை முன்வைப்பதாக அமையும்.*

*உ-ம்:*

*சூழலில் இலவசமாக கிடைக்கும் குளுக்கோஸ் போத்தல்களில் இருந்து அழகுப்பொருட்கள் தயாரிப்பது என்பது அவனை கிடைக்கும் வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெறுவது என்ற கோட்பாட்டை (கைத்தொழிற் பிரதேசங்களில் கற்ற விடயம்) பிரயோகிக்கப்படுவதாய் அமையலாம்.*

**4. நோக்கங்களும் குறிக்கோள்களும்:**

*இவ்விடயம் ஆனது ஓர் செய்திட்டத்தை தெரிந்து எடுத்து செயற்படுத்துவதற்கான இலக்குகளை அதாவது மாணவன் மனதில் எழும் சார்பளவான எதிர்பார்க்கைகளை மையப்படுத்தியதாக அமையும்.*

*உ-ம்:*

*''பாடசாலைக்கு மாணவன் பிந்தி வருதல்'' தொடர்பான பிரச்சினை பற்றிய ஆய்வின், நோக்கங்களாக*

*1 மாணவர் பாடசாலைக்கு பிந்தி வரும் காலத்தைக் குறைத்(*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாணவனுக்கும் வகுப்பறைக்கும் இடைப்பட்ட இடைவெளியை குறைத்தல்
3. அவனுக்கு நேர முகாமையை அறிமுகப்படுத்தல்
4. பாடசாலைக்கும் நிர்வாகத்திற்கும் (ஆசிரியர்கள், அதிபர், சக வகுப்பு மாணவர்கள், மாணவர் தலைவர்) ஏற்படும் இடைஞ்சல்களைக் குறைத்தல், என்பவற்றைக் குறிப்பிடுவர்.

**5. நன்மை பெறுவோர் பற்றிய விபரங்கள் :**

ஓர் செய்திட்டம் ஒன்று சரியாகப் பூர்த்தியாக்கப்படுமாயின் அச் செய்திட்டவகை, எடுத்துக்கொண்ட தலைப்பிற்கு இணங்க பல வகையினர் நன்மை பெறுவர் என்பதைக் குறித்து நிற்பதாகும்.

உ—ம் :

உள்ளீடுகளைப் பயன்படுத்தி வெளியீடுகள் பொருட்களாக, சேவைகளாக, எண்ணங்களாக வரும்போது அதனால் பல் துறை நாட்டத்தினர் நன்மை அடைவது போலவே.

இங்கும் சரியாக உள்ளீடுகள் தரவுகள் பகுப்பிற்கு உட்பட்டு பிரயோகிக்கும் போது பெறப்படும் வெளியீட்டினால் (செய்திட்டத்தினால்) பயன் பெறுவோர் பற்றிய நபர்களை தெளிவுறுத்துவதாக அமைவதே இதுவாகும்.

உ—ம் :

''மாணவர் பிந்தி வருதல்'' தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வு காண முற்படும் விடயம் முழுமை பெறுமாயின் இங்கு குறித்த மாணவன், சகமாணவர்கள், வகுப்பு ஆசிரியர், பாட ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர் என்பவர்களைக் கூறலாம்.

**6. பயன்படுத்திய வளங்கள் :**

சாதாரணவகையில் ஓர் சிறந்த வெளியீட்டைப் பெறுவதற்கு நாம் நிலம், உழைப்பு, முதல், முயற்சி போன்ற மனித, பௌதீக வளங்களை உட்செலுத்துவது போல இங்கும் குறித்த செய்திட்டம் பூரணம் பெறுவதற்கு மாணவனுக்கு வித்திட்ட வளங்களைக் குறிக்கும்.

உ—ம் :

''மாணவர் பிந்தி வருதல் தொடர்பில்'' மனித வளம், ஆய்வுக்கு உட்பட்ட மாணவர்கள், ஆய்வை நிகழ்த்திய மாணவர்கள், பயன்படுத்திய அதிபர், மாணவர், ஆசிரியர் ஆலோசனைகள்

பௌதீகவளம்— எழுதுகருவிகள், காகிதாதிகள், வழங்கிய பரிசுப் பொருட்கள்.

நேர வளம் : தரவு சேகரிப்பிற்கு பயன்படுத்திய கால வளம், ஆலோசனை வழங்க எடுத்த நேர வளம், மதிப்பீடு செய்ய எடுத்த நேர வளம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. செய்திட்டம் அமுல் படுத்தும் படிமுறைகள் :**

எந்த ஒரு வெளியீட்டையும் பெறுவதற்கு ஏதோ ஒரு வகையில் படிமுறை ஊடாக வளங்கள் பிரயோகிக்கப்படுவது போல இங்கும் மாணவன் பல படிமுறைகளைத் தடைதாண்டியே அறிக்கையையும் வெளியீட்டையும் பெறவேண்டி உள்ளது. அவையாவன

1. முதலில் அதிபர் ஆசிரியர் மாணவர் கலந்துரையாடல்
2. மாணவன் தனக்கு பொருத்தமான அல்லது மாணவர் குழு தமக்குப் பொருத்தமான தலைப்புக்களைத் தெரிந்து செய் திட்டகமிட்டியிடம் ஒப்படைத்தல்.
3. அவர்கள் அங்கீகாரத்துடன் செய்திட்டப் பிரேரணை சமர்ப் பித்தல்.
4. குறித்தகால வரையறைக்கு ஏற்ப வேலைப்பகிர்வை அமுற் படுத்தல்.
5. ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பை உரிய காலத்தில் நிறை வேற்றல் (குழு)
6. கூட்டுமுயற்சியாக விடயங்களை ஒருங்கிணைத்தல்
7. சாதாரண வகையில் அறிக்கையை ஒருவர் எழுதிக் குழுவிடம் மதிப்பீட்டிற்கு ஒப்படைத்தல்.
8. பொறுப்பான குழுத் தலைவர் அல்லது ஒருவர் தயாரித்தல்.
9. பயன்படுத்திய ஏனைய துணை ஏடுகளோடு அறிக்கையை சமர்ப்பித்து சிறந்த வெளியீட்டைப் பெற்ற மனப்பாங்கு பெறுதல்.

**8. காலவரையறை :**

இங்கு நேர முகாமையைப் பேணுவதிலேயே அக்கறை செலுத்தப் படுகின்றது. எனவே காலத்தை நீட்டாது காலத்தை குறுக்கமாக எடுப்பதன் மூலம் உரிய இலக்குகளை அடையக்கூடியதாக இருப்ப துடன் தவறுகள் இருப்பின் மீள் ஊட்டலின் மூலம் பிரச்சினைகளை இனம்கண்டு திருத்தம் அடையக் கூடியதாக இருப்பதுடன் எக்காலத் திலும் நேர முகாமையை, நேரச்சிக்கனத்தைப் பேணக் கூடியதாக இருக்கும்.

**9. தரவும் தரவுப் பகுப்பாய்வும் :**

இவ்விடயம் எல்லாவகை செய்திட்டங்களுக்கும் பொருத்தமானதாக அமையாது. ஆனால் ''ஆய்வு வகை, பிரச்சினை தீர்த்தல் செய் திட்டத்திற்கு மிக முக்கியமான விடயமாக அமையும் அதாவது பிரரது ஆலோசனைகள், நிறுவன ஆலோசனைகள், சந்தை ஆய்வு'' எனும் விடய விளக்கங்கள் பெறப்படும் எனவே இங்கு

1. நேர்முகம் காணல்
2. வினாக்கொத்து வழங்கல்
3. தகவல்கள் பெறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மேலதிக விடயங்களை நிறுவனம், சமூகம் சார்பில் பெறல்
5. செய்திட்டத்திற்கு ஏற்ப பகுத்தல், தொகுத்தல் எனும் விடயங்களை உள்ளடக்கும்.

இதற்கு சிறிய துணை ஏடுகள் இனங்காணப்பட வேண்டியிருக்கும். அதாவது வேலைப்பகிர்வு போல தரவு பகுப்பாய்வு செய்யப்படும். அதாவது கைக்குறிப்பேடு பேணப்படும்.

**10. பெறுபேறுகள் :**

குறித்த மாணவன் தன்னால் தெரிந்து எடுத்த தலைப்பிற்கு ஏற்ப அவர் பெற்ற அடைவு, மனநிறைவு, அழகுணர்வு, வளர்க்கப்படல், வருமானம் பெறல், சமூகத்தோடு தன்னை அர்ப்பணித்தல், பிறருக்காக செயற்படல், அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தல் போன்ற பல விளைவுகள் மாணவருக்கு கிடைக்கப் பெறலாம்.

இப்பெறுபேறு குறித்த மாணவன் - பாடசாலை - சமூகம் - பிரதேசம் நாடு எனப் பரவலாக்கப்படலாம்.

**11. உசாத்துணைகள் :**

இங்கு குறித்த செய்திட்டத்தை நிறைவேற்ற பங்களிப்பு செய்த ''மேலதிக வாசிப்பு விடயங்கள் கட்புல செவிப்புல சாதனங்கள்'' அடங்கலாம்.

**12. நன்றி நவிலல் :**

மாணவன் தான் குறித்த தலைப்பை தெரிந்து எடுத்து செயற்படுத்துவதற்கு ஆக்கமும், ஊக்கமும், ஆலோசனையும் வழங்கிய அதிபர், குழு, வகுப்பாசிரியர், மற்றும் ஆலோசனை பகர்ந்த மூத்தோர், நிறுவன அமைப்புக்கள், சகமாணவர்கள் போன்றவர்களுக்கு தன் வாழ்த்துக்களை இதயபூர்வமாக தெரிவிப்பதாக அமையும்.

எனவே ஒரு மாணவன் தன்னால் செயற்படுத்துவதற்கு உகந்த செய்திட்ட வகையை தெரிந்து குறித்த காலப்பகுதியில் பொருத்தமான உள்ளீடுகளைப் பயன்படுத்தி சிறந்த வெளியீட்டைப் பெறுவதற்கு மேற்கூறிய விடயங்களில் படிமுறைகளில் அக்கறை செலுத்துவதன் மூலம் முழுமையான ஒரு தெளிவான பெறுபேற்றை தானும் சமூகமும் பெற வழிவகுப்பதோடு ஏட்டுக்கல்வியோடு மட்டும் நின்றுவிடாது சமூகத்தோடு தொடர்புபட்ட பிரயோகிக்கும் செயற்திறன் கல்வியைப்பெற வழிவகுப்பதோடு வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய முக்கிய சில பண்புகளை ''கூட்டு வாழ்க்கை, புரிந்துணர்வு, மனிதநேயம், விட்டுக்கொடுப்பனவு, தலைமைப்பாங்கு, பிறரில் அக்கறை, தன்னம்பிக்கை, தன்நிலை உணர்தல்'' போன்ற பல நற்பண்புகளைப் பெற்று நாட்டிற்கு உகந்த தொழிற்திறன் மிக்க துடிப்பான பிரஜைகள் உருவாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

திரு. க. உதயரூபன்
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

அன்னை......
அமிர்த வார்த்தைதான் அது
எத்தனை இனிமை
எத்தனை பெருமை
அதன் உள்ளே...

என்னைப் பெற்ற
அன்னையே......
வேதனை சுமந்து
சோதனையில் உனை ஆழ்த்தி
மனதிலே கவலைகளின் சுமை
சுமையின் நடுவே
சுதந்திரமான சிரிப்பு
வாழ்க்கையின் உயிரே தியாகம்
தியாகமே தாய்மையா.

என்னைப் பெரியவனாக்க
நீ பட்ட பாடுகள் தான்
எத்தனை...... எத்தனை
இரவைப் பகலாக்கி
இரத்தத்தைப் பாலாக்கி
கனவை விழியேந்தி
கனிவுடன் அமுதூட்டி
இன்னும் எத்தனை...... எத்தனை
என்னைப்பெற்ற அன்னையே
என்தலை தாழ்த்தி
வணங்குகின்றேன் உன்னை
உன் கனவு நினைவாகும்;
எத்தனை ஜென்மமானாலும்
நீயே எனக்கு
தாயாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் இணைப்பாடவிதானத்தின் முக்கியத்துவம்

திரு. நா. பிரணவரூபன்
இளவாலை மெய்கண்டான்

நாம் தொடர்பால் கற்கின்றோம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தம்மை முன்னேற்ற முயற்சிப்பதே அறிவுடமை ஆகும். எனவே கல்விக்குப் பயன் அறிவு. அறிவுக்குப் பயன் ஒழுக்கம். ஆனால் வளர்முக நாடுகளிலே கல்வி என்பது பரீட்சை எனும் பந்தய ஓட்டமாகவே அமைந்துள்ளமை வேதனை தருவதாகும். உயர்ந்த தராதரப் பத்திரத்தினைப் பெறும் நோக்குடன் கற்போர் ஓய்வில்லாது கற்றலில் தம்மை ஈடுபடுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். பிள்ளைகளின் ஏட்டுக்கல்வி முன்னேற்றம் குறித்த பெற்றோரின் அபிலாசை செறிந்த அழுத்தத்தினால் பிள்ளைகள் தங்கள் உள்ளார்ந்த இயல்புக்கேற்ற விருத்தியினைப் பெறமுடியாது போகின்றது. அவர்களது திறன்கள், தேவைகள், உந்தல்கள், அபிலாசைகள் எல்லாம் நசுக்கப்படுகின்றன. அவர்கள் பெறும் வெறும் ஏட்டுக்கல்வித் தராதரப் பத்திரங்கள் அவர்கள் வாழ்ப் பயன்படாது போய்விடும் பொழுது தாம் கற்ற கல்வியிலும் அக்கல்வியை தம்மீது திணித்த சமுகத்திலும் வெறுப்படைவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. எனவே கல்வி என்பது மாணவர் அறிவை மட்டும் அல்லது மனதை மட்டும் வளர்க்கிற செயலாகாது மாறாக உடல் உள சமூக பண்பாட்டு வளர்ச்சியைக் கொடுக்க வல்லதே 'கல்வி' என இத்துறைசார் நிபுணர்கள் தெளிவுபடுத்துகின்றனர். இவ்வாறான திறன்களை வெறுமனே பாடப்புத்தகத்தின் மூலம் அடைந்து கொள்ளமுடியாது. ஒன்றிய ஆளுமையை அல்லது சமவளர்ச்சியுள்ள ஆளுமையை மாணவர்களிடம் உருவாக்க வல்ல பாடவிதானத்தை ஏற்ற முறையில் செயற்படுத்துவதே இதற்குத் தீர்வாகும்.

ஆளுமையின் சீரான வளர்ச்சிக்கு ஏற்ற பாடசாலைச் செயற்பாடுகளைப் பாடவிதானத்திற்கு புறம்பானவை என ஒதுக்கி விடாது அவற்றை இணைந்த பாடவிதானச் செயற்பாடுகள் எனக்கருதி அவற்றின் முழுமையான பயனை கற்போர் பெற வாய்ப்பும் வசதியும் செய்யப்படவேண்டும்.

மாணவனின் உடல் வளர்ச்சியே உள வளர்ச்சிக்கு அவசியமாகையால் உடல், உள வளர்ச்சியை மாணவனிடம் உருவாக்குவது இணைப் ாடவிதானமேயாகும். இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனே சிறப்பாக கற்றலில் ஈடுபாடு கொள்கிறான். உணர்ச்சி வசப்படமாட்டான். சமநிலையைப் பேணுவான். எனவே சிறந்த மனப் பாங்கை வளர்ப்பது இணைப்பாடவிதானச் செயற்பாடாகும்.

முழுமையான மனிதரை முழுமையான பாடவிதானமே உருவாக்க வல்லது என்பதை பாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபடும் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். மாணவர்களை ஆரோக்கியமான சிறந்த குணநலம் மிக்கவர்களாக மாற்றிக் குழுமுயற்சி, கூட்டுறவு, தலைமைத்துவப் பங்கேற்றல், உதவிசெய்தல், ஊக்குவித்தல், தமது திறமைகளைத் தாமே இனங்காணல், பொறுப்புணர்ச்சி, ஒழுங்குசெய்தல் என்பவற்றை வளர்க்கக்கூடியது இணைப்பாடவிதான செயற்பாடேயாகும்.

இணைப்பாடவிதான செயற்பாட்டினுள் பாடசாலைக்கூட்டம், பாட ரீதியான கழகங்கள், மன்றங்கள், விளையாட்டு, உடற்பயிற்சிக்கண் காட்சி, சாரணர் இயக்கங்கள், கல்விச் சுற்றுலாக்கள், பொழுது போக்குக் கழகங்கள் முதலானவற்றைப் பாடசாலைகளில் புத்துயிர் அளிக்கப்படுதல் அவசியம்.

''புலன் அனுபவமே சிறந்த கற்றலின் அடிப்படை'' என்கிறார் மொன்சோரி அம்மையார். எனவே இணைப்பாடவிதானச் செயற்பாட்டின் அவசியம் குறித்து மாணவர், ஆசிரியர், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படவேண்டும். அப்போது தான் இச்செயற்பாட்டின் மூலம் பூரண பயன்பாடு ஈட்டப்பட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**முத்துக்கள்**

''ஒவ்வோர் ஆசிரியரும் வாழ்நாள் முழுவதும் மாணவர் ஆவார்''

''தனியாள் ஒருவன் இயல்பாகவே நல்லவன்''

— கார்ஸ்றோயர்ஸ்

''சிந்தனை என்பது ஓசையின்றி மொழியைப் பயன்படுத்தும் ஒரு செயற்பாடாகும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீட்டில் – மாணவரின் – பெற்றோர் பங்கு

திரு. சின்னத்தம்பி ஜெயரூபன்
யூனியன் கல்லூரி.

கல்வி என்பது மாணவனை வழிப்படுத்தும் ஒரு சாதனமாக செயற்படுகின்றது. இந்தக்கல்வியை மட்டும் கற்பிப்பது ஆசிரியரின் வேலை அல்ல. நல்ல மாணவனை உருவாக்குவதும் ஆசிரியரின் கடமையாகும். நல்ல மாணவன் மூலம்தான் சமூகத்தில் நல்ல பிரசையை உருவாக்க முடியும். சமூகத்தினை நல்வழிப்படுத்த ஆசிரியனால்தான் முடியும். அதனால்தான் தற்போதைய கல்வி முறையில் கணிப்பீடு பொருத்தப்பட்டுள்ளது.

மேலும் எல்லாத் தொழில்களையும் விட ஆசிரியர் தொழில் என்பது உயிர்களுடன் சம்பந்தப்பட்டது மட்டுமன்றி அவனை வாழ்நாள் பூராகவும் நல்லவனாக இருக்க செய்வதாகும். இதனால்தான் இதற்கு சேவை என சொல்லப்படுகின்றது. இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுதான் இன்றைய அரசு கணிப்பீடு என்ற ஒரு திட்டத்தின் மூலம் நல்ல ஒரு சமூகத்தைப் படைக்க முனைகிறது என்பதை நாம் அறிய முடிகிறது.

ஏனைய தொழில்கள்போல் அன்றி ஆசிரியன் எதையும் மறைத்து வைத்திருக்கமாட்டான். தனக்குத் தெரிந்த அனைத்தையும் மாணவனுக்கு சொல்லிக் கொடுப்பதைக் காணமுடிகிறது. ஒரு ஆசிரியன் தன்னை முழுமையாக மாணவரிடத்தில் அர்ப்பணிக்க வேண்டும். மாணவனை இனம்கண்டு அவனின் தன்மைக்கேற்ப கல்வி புகட்டுகின்றான். ஆனால் மாணவர்கள் அதற்கேற்ப செயற்படுகிறார்களா என்பதில் தான் பொருத்தப்பாடு உள்ளது. கணிப்பீடு ஆசிரியர்களுக்குத் தான் என்று எண்ணுகின்ற மாணவர்கள்தான் இன்று நிறைய உண்டு. ஆசிரியர்கள் கணிப்பீட்டின் மூலமும் பெரும் சிரமப்பாட்டையும் அடைகின்றார்கள். மாணவர்களின் பெற்றோர்கள் இதனை உணர்ந்து தமது பங்களிப்பை ஆற்றினால் இந்தக் கணிப்பீடு பெரும் வெற்றி பெறும் என்பதனை நாம் கூறமுடியும்.

மேலும் உண்மையில் கணிப்பீடு ஒரு நல்ல முறை. அதை நல்ல முறையில் செய்தல் வேண்டும், இது கற்கமுடியாத மாணவனையும் அவனுடைய துறையையும் இனங்கண்டு அந்தத் துறையில் அவனை ஈட்டு அவனுக்கான கணிப்பீட்டை வைக்கும்போது அவனை மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கத்தூண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருவன் கணிப்பீட்டில் தொடர்ந்து கறுப்புப்புள்ளி எடுக்கின்றான் என்றால் அவனை அவனுடைய துறையில்விட்டு அவனை உயர்த்த இந்த கணிப்பீட்டுத்திட்டம் உதவுகின்றது. எனவே எந்த ஒரு மாணவனும் இதில் இருந்து விலகிப் போக முடியாது என்பதை நாம் காண முடிகின்றது.

இந்தக் கணிப்பீட்டில் ஒரு பகுதி அவதானிப்புப்பத்திரம். இதில் பதினெட்டு பண்புகள் உண்டு. இதை முறைப்படி செய்தால் இதன் மூலம் நல்ல ஒரு மாணவ சமூகத்தைப் படைக்கமுடியும். ஏனெனில் ஒவ்வொரு பண்பும் மாணவனின் ஒழுக்கத்துடன் சம்பந்தப்பட்டது. இன்றைய சமூகத்தில் இதை ஒவ்வொரு பாடசாலையும் அங்கு பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் அதற்கு உதவியாக பெற்றோரும் பணியாற்றினால் நிச்சயமாக ஒழுக்கமான அன்பில் உயர்ந்த சமூகத்தைப் படைக்க முடியும்.

ஆசிரியர் கணிப்பீட்டைச் செய்கின்றபோது அதற்கு மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள் பங்களிப்புச் செய்யாவிடின் இந்தக் கணிப்பீட்டில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாது போய்விடும். மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும் அன்பு கொண்டவராகவும் இருந்தால் மட்டும் போதும். கல்விதானாகவே வந்துவிடும். இதற்குதான் சொல்லுவார்கள் ''தலைகுனிந்து கற்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே'' என்னைப் பொறுத்தவரையில் ஒழுக்கமும் அன்பும் கொண்ட மாணவன் எவனும் கல்வியில் குறைந்தவனாக இருந்ததை நான் கண்டதில்லை.

இப்படிப்பார்க்கின்றபோது அன்பினால் எதையும் செய்யமுடியும் என்ற உண்மை புலப்படுகின்றது. இன்றைய சமூக சீர்கேடுகளுக்கு மத்தியில் ஓர் நல்லாசான் எதையும் செய்ய முடியும் என்பதை இந்த சமூகம் உணரவேண்டும். எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த பிஞ்சு உள்ளங்களை நாம் நினைத்தால் எந்த வழியிலும் திரும்ப முடியும் என்பதைக் கருத்தில்கொண்டுதான் இந்தக் கணிப்பீட்டு திட்டத்தையும் அவதானிப்புப் பத்திரத்தையும் மேற்கொள்ளும்படி பணிக்கப்படுகிறது.

இதனால்தான் நான் முன்பு கூறியதைப் போன்று எல்லாத் தரப்பினரும் ஒத்துழைத்தால் இதில் பூரண வெற்றிபெற முடியும். இன்றைய மாணவர்களிடம் காணப்படும் தனியார் கல்வி மோகம் பெரும் மோசமாக்கப்படுகிறது. மாணவர்கள் ஓடி ஓடி பல தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கின்றனர். ஆனால் இதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்பதை மிகவிரைவில் மாணவரும் பெற்றோரும் உணரத்தான் போகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான் இன்றைய அரசு ஒன்பதாம் தரத்தில் கணிப்பீட்டு அடிப்படையில் மாணவர்களின் நிலைப்பாட்டை அறிய மாகாண மட்டத்தில் பரீட்சித்து பெறுபேற்றுக்கு அமைய சான்றிதழ் வழங்க உள்ளது. இது தொடர்ந்து நடைமுறையில் இருக்குமாயின் தனியார் கல்விக் கூடத்தையே தஞ்சம் என நம்பியிருக்கும் மாணவர்கள் பெரும் சிரமப்பாட்டை அடைவார்கள்.

மேலும் இந்த இடத்தில் இதையும் கூறவேண்டும். இன்று யாழ்ப் பாணத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் சீர்கேட்டுக்கு காரணம் தனியார் கல்விக்கூடங்களே என்பதை நான் ஆணித்தரமாக சொல்ல விரும்புகின்றேன். ஒரு பாடத்துக்கு இரண்டு மூன்று ஆசிரியரிடம் ஓடி ஓடி அலைந்து மாணவர்கள் களைத்துவிடுவதை நாம் காணமுடி கின்றது. இந்த நிலைப்பாட்டினை மாற்றினால் மட்டுமே நல்ல சமூ கத்தைப் படைக்கமுடியும். இதற்கு பெற்றோரின் பங்கு மிகமிக அவசிய மாகின்றது.

பெற்றோர் பிள்ளைகளிடம் காணப்படும் தனியார் கல்வி மோகங் களைக் கட்டுப்படுத்தி பாடசாலைக் கல்வியில் அதிகம் ஆர்வம் கொள்ளச் செய்யவேண்டும். இதன் மூலம்தான் நல்ல சமூகத்தைப் படைக்கமுடியும். இதற்கு ஆசிரியரின் பங்கும் இருக்கத்தான் செய்கிறது. மாணவரை இனங்கண்டு அவருடைய ஆற்றலுக்கு ஏற்றவாறு அந்த மட்டத்திற்கு கீழே இறங்கி கற்பிக்கவேண்டும். ஆசிரியர்களை பொறுத்த வரையில் அன்பினால் எதையும் அடைந்துவிட முடியும். ஆயினும் அதிகாரமும் கண்டிப்பும் பாவிக்கப்படவேண்டிய இடத்தில் பாவிக்கவும் தான் வேண்டும்.

மேலும் கணிப்பீடு வெறும் சிவப்பு கறுப்பு புள்ளிமட்டுமல்லாது மாணவனின் நிலைப்பாட்டை அறிந்து அவனுக்கு ஏற்றவாறு கணிப் பீட்டை வைக்கவேண்டும். எல்லாமாணவரும் துலங்கக்கூடியவகையில் கணிப்பீடு அமைவது மிக முக்கியமான விடயமாகும். இன்றைய மாணவர்களிடம் ஒழுக்கமும் கறுப்புப்புள்ளி. தனியார் கல்வி சிவப்பு புள்ளி. இதனைத்தான் நாம் கூறமுடிகின்றது.

மேலும் கணிப்பீட்டின் மூலம் மாணவர் தாம் பெற்ற அலகு ரீதியான கல்வியை உடனுக்குடன் கற்கதூண்டுகிறது. இந்த கணிப்பீட்டுப்பழுவை ஆசிரியர் சுமக்க அதற்கு ஏற்றவாறு மாணவர்கள் கற்காதுவிடவே அது வெற்றி பெறும் வாய்ப்பை இழந்துவிடுகிறது.

இதைப்பொறுத்தவரையில் ஆசிரியர் மாணவர்கள் மட்டும் அவ்வாறு பெற்றோரும் பூரண ஆதரவு தரவேண்டும். மாணவர்களைக் கற்கதூண்டு எல்லாவற்றையும்விட மிகமுக்கியமானது மாணவர்களின் வரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானது. இது பெற்றோர்களின் கைகளிலேதான் தங்கியுள்ளது. கூடிய அளவு பாடசாலைக்கு வரவைக் கூட்டினால் கணிப்பீடு செய்வதில் ஆசிரியருக்கு சிரமம் ஓரளவு குறையும்.

மேலும் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகிய மூவரைத் தவிர கல்வித்திணைக்களம்கூட இந்த கணிப்பீட்டுக்கு உதவ வேண்டும். ஏனெனில் பாடப்புத்தகங்களை விரைவில் பெற்றுக் கொடுத்தல், இதைவிட பயிற்சி வகுப்புக்களை ஆசிரியர்களுக்கு நடத்தல் என்பதன் மூலம் கணிப்பீட்டை வெற்றிபெறச் செய்யமுடியும். கணிப்பீட்டின் தொடர்பாட்டில் காணப்படும் கல்வி மேம்பாடு ஆனது நான்முன்பு கூறியது போன்று கல்வியைக் கற்கமுடியாத மாணவர்களுக்கு அவர்களுக்கேற்றவாறு திட்டமிட்டு அதில் அதிக மாணவர்களை ஈடுபடச்செய்து அதில் வெற்றி பெறச் செய்வதாகும்.

இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்குமிடத்து கணிப்பீடு ஆசிரியர் செய்வதால் மட்டும் அது வெற்றி பெறமுடியாது. ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து செயலாற்றுகின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை. எந்த ஒரு ஆசிரியனும் குழந்தைகளுடன் பழக அவனும் குழந்தை உள்ளம் படைத்தவனாக மாறி விடுகின்றான். அது மட்டுமல்லாது கணிப்பீட்டை புறக்கணிக்கும் தேவையும் காணப்படமாட்டாது. மேலே கூறிய எல்லாத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்புத் தர கணிப்பீடு பெரும் வெற்றியைத் தரும். அது வெற்றி பெறுமிடத்து அதன்மூலம் நல்ல அன்பும் ஒழுக்கமும் கொண்ட சமூகத்தை உருவாக்கமுடியும். அந்த சமூகத்தின்மூலம் எல்லா மக்களும் ஒற்றுமையும் சமாதானமும் கொண்ட இலங்கை மக்களாக வாழமுடியும் என்பதில் ஐயமில்லை. இந்த நல்ல நிலை கால கெதியில் உருவாகும் என நம்புவோமாக.

---

"கலைத்திட்டம் என்பது ஒரு சமூகத்தின் பண்பாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியாகும்"

— டெனிஸ் லோட்ஸ்

"கல்வி என்பது வழிகாட்டல் வழிகாட்டல் என்பது கல்வி"

— ஹேர்பட் கொசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் சமவாய்ப்புக்கள்

**இ. நவகேதீஸ்வரன்**
(1ஆம் வருடம்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா)

கல்வித்துறையில் சமவாய்ப்புக்களைப் பல்வேறு சமூகத்தினருக்கும் வழங்க வேண்டியதன் நோக்கம் அவற்றினூடாக பொருளாதார, சமூக சமத்துவமின்மையைக் குறைப்பதாகும். 'கல்வியில் சமவாய்ப்புக்கள்' எனும் கோட்பாடு 19ஆம் நூற்றாண்டின் பின்னரே முக்கியத்துவம் பெற்றது. இருபதாம் நூற்றாண்டிலேயே இவற்றை வழங்குவதற்கான கொள்கைகள் உருவாக்கப்பட்டன. 1950ஆம் ஆண்டின் பின்னரே இத் துறையில் விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன கைத்தொழில் மயமாக்கமும் மக்களாட்சி முறையும் வளர்ச்சியடைய இக்கோட்பாடும் விரிவுபெறத் தொடங்கிற்று.

கல்வி மனிதனின் பண்பையும் தராதரங்களையும் மேம்படுத்துகிறது. கல்லாத ஒருவனை விட கற்றவன் பொருளாதார சமூகத்துறைகளில் கூடிய உற்பத்திப் பெறுமதி மிக்கவன். எனவே கூடியளவு கல்வி கற்ற வன் கூடிய உற்பத்தித் திறன்களைப் பெற்று நாட்டு வளர்ச்சிக்கு உதவக்கூடியவன். எனவே கல்வி என்பது தனியாளுக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் பயன்மிக்கது என்ற கருத்தின் வளர்ச்சியும் ''கல்வியில் சமவாய்ப்புக்கள்'' என்ற கோட்பாடு வலுப்பெற காரணமாயிற்று.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் முக்கிய சமூகமாற்றம் ஏற்பட்டது. அதாவது மத்தியதர வகுப்பு தோன்றியதைக் குறிப்பிடலாம். இந்நாட்டிலே ஆங்கிலக்கல்வி பரவியமை இம்மத்திய வகுப்பார் தோற்றத்திற்கு முக்கிய காரணியாக அமைந்தது. 1831இல் கோல்புறூக் ஆணைக்குழுவின் விதப்புரையினாலேயே இங்கு ஆங்கிலக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆங்கிலக்கல்வி கட்டணம் அறவிடப் படுகின்ற தனியார் பாடசாலைகளிலேயே அளிக்கப்பட்டமையினால் தனவந்தரான மத்திய வகுப்பாரின் பிள்ளைகளே அதனால் பெரிதும் நன்மையடைந்தனர் எனவே குறைந்த வருமானம் பெறுகின்ற விவசாயி தொழிலாளி வகுப்புக்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஆங்கிலக்கல்வி பெறும் வாய்ப்பு கிட்டாது போயிற்று.

1931இல் டொனமூர் அரசியல் திட்டத்தின்படி, இந்நாட்டு மக்களுக் குச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை கல்வியில் சமவாய்ப்புக் கள் எனும் கோட்பாடு முக்கியத்துவம் பெற்றமைக்கு முக்கிய காரண மாகும். 1943ஆம் ஆண்டு கன்னங்கரா சீர்திருத்த அறிக்கையின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியானது கல்வியில் சமவாய்ப்பு எனும் கோட்பாட்டில் வலிய தாக்கத்தை உண்டுபண்ணியது. இலவச கல்விமுறைக்கிணங்க இலவசக்கல்வி பாலர் வகுப்புத் தொடக்கம் பல் கலைக்கழகம் வரை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்கப்பட்டது. சமூகத் திலுள்ள எல்லோரும் இக்கல்வி வசதியினால் நன்மையடைந்தனர். நாடெங்கும் மத்திய மகாவித்தியாலயங்கள் நிறுவப்பட்டதன் மூலம் சமூகத்தில் இதுவரை உயர்கல்வி பெறமுடியாதிருந்தவர்களுக்கு பல் கலைக்கழகத்தின் கதவுகள் திறந்துவிடப்பட்டன. ஆரம்ப வகுப்புக்களிலே ஆங்கிலத்துக்கு பதிலாக சுயமொழியே போதனா மொழியாக்கப்பட்டது. 1959ஆம் ஆண்டு பன்னிரெண்டாம் தரம் வரை விரிவுபடுத்தப்பட்டு, 1960ஆம் ஆண்டிலே பல்கலைக்கழகம் (கலைத்துறை) வரை விரிவுபடுத் தப்பட்டது. இதனால் இதுவரை ஆங்கிலக்கல்வி கற்றவர்கள் அனுப வித்த வாய்ப்புக்கள் சுயமொழி கல்வி கற்றவர்களுக்கும் வழங்கப்பட்டன.

கல்வி வாய்ப்புக்களை சமமாக வழங்க பிற்காலத்தில் குறிப்பாக 1979ற்குப் பின்னர் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இலவச பாடசாலைப் புத்தகங்களின் விநியோகம், இலவச மதியஉணவு, மற்றும் இலவச சீருடை, புலமைப்பரிசில்த்திட்டம் போன்ற நலன்புரித்திட்டங்கள் நிச் சயமாகக் கல்வியில் சமவாய்ப்புக்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டவையே.

கல்வியில் சமவாய்ப்புக்களை ஏற்படுத்தும் கொள்கைகள் உருவாக் கப்பட்டாலும் நடைமுறையில் பாடசாலைகள் எவ்வாறு இயங்குகின் றன? இலவசக்கல்வி மற்றும் வசதிகளை வழங்கி பிள்ளைகளைப் பாட சாலைகளுக்கு போகச் செய்துவிடலாம். ஆனால் சமவாய்ப்பு ஏற்பட்டு விடுமா? ஆகிய வினாக்கள் எழுகின்றன. கல்வி வசதிகளை வழங்கும் விடயத்தில் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய முக்கியவிடயம் மாகாணங் களுக்கிடையில் இன்னமும் பாரிய அளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருவதனைத் தரவுகள் காட்டுகின்றன. சுமார் 25% முதலாந்தர பாட சாலைகள் மேல் மாகாணத்தில் உள்ளன. தென், மத்திய மற்றும் வட மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் 11% இப்பாடசாலைகள் அமைந்துள் ளன. ஆனால் ஊவா, வடமத்திய மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் 5% முதலாந்தர பாடசாலைகளே உள்ளன. அதேபோல, மொனராகலை போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் விஞ்ஞானக் கல்வியை வழங் கக்கூடிய வசதிகளைக் கொண்ட ஒருசில பாடசாலைகள் மட்டுமே உள்ளன

| மாகாணம் | 1ஏபி | 1சி | வகை 2 | வகை3 | தனியார் | பிரிவெனா |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 120 | 232 | 657 | 486 | 41 | 93 |
| மத்திய | 60 | 224 | 456 | 712 | 12 | 69 |
| தென் | 66 | 225 | 479 | 461 | 01 | 102 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வட | 60 | 77 | 243 | 568 | 05 | 01 |
| கீழ் | 44 | 95 | 201 | 490 | — | 06 |
| வடமேல் | 57 | 247 | 520 | 468 | — | 73 |
| வடமத்திய | 22 | 119 | 284 | 325 | — | 26 |
| ஊவா | 29 | 119 | 302 | 245 | 04 | 33 |
| சப்பிரகமுவ | 47 | 172 | 444 | 439 | — | 56 |

(1991இல் பாடசாலைகள் 10, 520)

மூலம்: பாடசாலை தொகை மதிப்பு கல்வி அமைச்சு

கல்வி வசதிகளை வழங்கும் விடயத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய மற்றைய விடயம் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும் கிராமப்புற பாடசாலைகளுக்குமிடையில் பௌதிக வளங்கள் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படாமையாகும். நகர்ப்புற பாடசாலைகள் சமூகத்தில் செல்வாக்குள்ளவர்களின் பிள்ளைகளை மாணவர்களாக்குவதில் போட்டியுடன் செயற்படும் போது கிராமப்புற பாடசாலைகளில் பணிபுரிய ஆசிரியர்கள் விரும்புவதில்லை. மொத்த ஆசிரியர்களில் (1991) 44% பயிற்றப்பட்டவர்களாகவும் 32% பயிற்றப்படாதவர்களாவும் 24% பட்டதாரிகளாகவும் இருந்துள்ளனர். நகர்ப்புற பாடசாலைகளில் பெருமளவில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இங்கும் சமமற்ற நிலை காணப்படுகின்றது.

கல்வி வாய்ப்புக்களைச் சமப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் பாடசாலை மட்டத்திலானவை என்பதை மனதிற் கொள்ளவேண்டும். பாடசாலைகளுக்குச் சென்றால் அங்கு இலவசக்கல்வி, இலவசசீருடை, இலவச பாடநூல் என்பன கிட்டும். ஆனால் கிராமப்புறப் பெற்றோர் 13 ஆண்டுகளுக்குத் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்குத் தொடர்ந்து அனுப்பும் பொருளாதார வலிமை அற்றவர்கள், அவ்வாறு 13 ஆண்டுகளுக்கு ''நின்று தாக்குப்பிடிக்கும்'' வலிமையற்ற நிலையில் சமவாய்ப்பு இலக்கு எட்டப்பட முடியாது போகின்றது. இவ்விலக்கினை அடைய கிராமம், பாடசாலைச்சமூகம் ஆகியன அக்கறை எடுப்பின் சமவாய்ப்பின் முழுப்பயனையும் அடைய முடியும்.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசியல், யுத்தச் சூழ்நிலைமையினால் குழப்பியடிக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகள், பாடசாலைகள், கட்டிட, உபகரண மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்தவரை பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. அத்துடன் கடந்த அரை நூற்றாண்டுகளாக ஆசிரியர் வழங்கலிலும் பங்கீட்டிலும் இன, அரசியல் ஓட்டத்தின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. எதிர்வரும் தசாப்தத்தில் வட கிழக்குப் பகுதிகளில் உறுதியான நடவடிக்கைக்கான சில முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு இம் முன்னுரிமைகள் அறிவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்திறன், வளங்கள் என்பன தனிநபர் மற்றும் தேசிய அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படவேண்டும். அத்துடன் சமூக பொருளாதார, ஆண், பெண் பாகுபாடுகளற்ற முறையில் கல்வி நீதியான பகிர்வு செய்யப்படவேண்டும்.

பின்தங்கிய மக்களின் கல்வி வாய்ப்புக்களை விரிவுசெய்யும் சிறந்த நோக்குடைய கல்விச் சீர்திருத்தங்கள் இறுதியில் மத்திய, உயர் வகுப்பு மக்களுக்கே மிக வாய்ப்பாக உள்ளன. ஏனெனில் அவர்களுடைய பொருளாதாரநிலை கல்வி பற்றிய சாதகமான உளப்பாங்கு, ஊக்கம் காரணமாகத் தொடர்ந்து அவர்களுடைய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதால் சமவாய்ப்பின் நன்மைகளை முழுமையாக அனுபவிக்க முடிகின்றது. கிராமப்புறத்தவர்கள், பின்தங்கிய வகுப்பினர் பொருளாதார வலிமையும் சிறந்த உளப்பாங்குகளையும் பெறுவது அவர்கள் சமவாய்ப்பின் இலக்கினை அடைய முக்கிய நிபந்தனை எனலாம்.

இலங்கையின் இன்றைய தேவை கவர்ச்சிகரமான திட்டங்களல்ல, ஆக்கபூர்வமான திட்டங்களே. இச்சமமற்ற கல்வி வாய்ப்புப் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமெனில் வளங்களின் மறுபங்கீடு, வளர்ச்சி என்ற வரம்புக்குள் தேசிய இணக்கத்தினைக் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

---

**சாணக்கிய நீதிவெண்பா**

வட்டிக் கடனும் வளர்நெருப்பும் வெம்பிணியுங் கட்டழித்தல் வேண்டுங் களைந்து குறை — விட்டதுண்டேற் சும்மா விடுமோ தொடர்ந்து முழு தழிக்கும் அம்மா தடுத்த லரிது.

ஆக்கியோன் :

சுன்னாகம் குமாரசாமிப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் விழுமியங்களும்

செல்வி சு. பஞ்சநதம்
யா / மெ. பெ. உ. பாடசாலை,
பருத்தித்துறை.

கற்பவை கற்கவேண்டும் என்பதும் கற்றபின் அதற்குத்தக நிற்க வேண்டும் என்பதும் வள்ளுவர் வகுக்கும் கல்வி அடிப்படை. மனித இரக்கமும், சகோதரத்துவமும் அளிக்காத கல்வி, கல்வி ஆகாது. அது உலகளாவிய மனப்பான்மையைப்பரந்தும், ஆழமாகவும் பரப்பி மனித குலத்தை மேம்படுத்த வழிகோலவேண்டும். இன்றைய நிலையோ பரிதா பத்திற்குரியது. பட்டங்கள் காற்றில் பறக்கின்றன. தேர்வுகள் பொரு ளிழந்து நிற்கின்றன. நம்நாட்டின் மீது ஆதிக்கம் பெற்ற ஆங்கிலேயர் தம் கல்வி முறையையே இங்கும் புகுத்தினர். அரசியலும் பணமும் கல்வித்துறையில் புகுந்து விளையாடுகின்றன. நீதிபோதனை அல்லது ஒழுக்கக்கல்வி என்று சொன்னாலே சமய சம்பந்தப்பட்டது என்று எண்ணி விஞ்ஞான, தொழில்நுட்ப வல்லுனர்களின் மனக்கதவுகள் அடைபட்டன. ஆனால் இன்று "கற்ற சமுகம்" இப்பிழையை உணரத்தலைப்பட்டுள்ளது. விஞ்ஞானக்கல்வி கற்றவர்கள் பலர் இறை வனை ஏளனம் செய்யும் நிலை மாறி வருகின்றது. வாழ்வின் பொருள் பொதிந்த மகிழ்ச்சியைத் தருவது விழுமியக்கல்வி தான் என்பதை உணர்ந்ததால் புதியகல்விச் சீர்திருத்தத்தில் விழுமியக்கல்விக்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது.

இன்று மனிதத்தன்மையற்ற விஞ்ஞானமே மேலோங்கி உள்ளது. பிழையான அச்சில் வார்த்த பொற்சிலைகள் தமது கலைத்தன்மையை இழப்பது போல் மக்கள் மகிழ்ச்சி இன்றியே இயந்திரவாழ்க்கை வாழ் கின்றனர். இத்தன்மையை மாற்றும் பொறுப்பு—கடமை (ஆசு—இரியன்) ஆசிரியக் குடும்பத்தையே சார்ந்தது

பொதுவாக ஏனைய பாடங்களைப் போலல்லாது விஞ்ஞான, கணித பாடங்களினூடாக விழுமியஞ்சார் உணர்வுகளைப் புகுத்துவது இலகுவான விடயமல்ல நன்கு திட்டமிடப்பட்ட கற்பித்தல் முறை மூலமும் தன்னையும் மனித உன்னத நிலைக்கு உயர்த்துவதன் மூலமும் ஆசிரியர் விஞ்ஞான, கணித பாடங்களினூடாக "பசுமரத்தாணி போல" மனித விழுமியங்களை மாணவர் மனதில் விதைக்கலாம். கீழே தரப்பட்டுள்ள சில எடுத்துக் காட்டுக்கள் மூலம் விஞ்ஞான பாடத் தில் விழுமியங்களைப் புகுத்தும் முறையை நாமும் அறிந்த ஆசிரியர் களாகலாம்.

1. சடப்பொருட்களின் பண்புகள்
3 வகை — திண்மம், திரவம், வாயு
உ-ம் :

திண்மம் — ஐஸ்கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Second Year Students*



**1ST ROW SEATED L to R :-**

Mr. K. K. Yoganathan, Mr. S. Kathiramalai, Miss. Y. Kandaiah (Lecturer), Mr. K. Shanmuganathan (Senior Lecturer), , Mr. T. Amirthalingam (Lecturer), Mr. V. Senthan, Mr. T. Sritharan, Mr. A. Kuganesan.

**2ND ROW STANDING L to R :-**

Miss. R. Saunthariamalar, Miss. V. Nirmalathevi, Miss. S. Malarvili, Miss. T. Pathmavathy, Miss. P. Subashini, Mrs. P. Sivamani, Miss. R. Vimatheeswary, Mrs. K. Shanthy, Miss. S. Kayalvili, Miss. S. Mythili.

**3RD ROW STANDING L to R :-**

Miss. V. Rajani, Mrs. K. Kalaivani, Miss. K. Puvaneswary, Miss. N. Ramanathev
Miss. S. Manokari, Miss. Balasaraswathy, Miss. S. Mangaleswary, Miss. V.
Miss. M. Usha, Miss. S. Selvagowri.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவம் — நீர்
வாயு — நீராவி

அ. ஐஸ் சிறிய இடத்தை நிரப்புகின்றது. நீர் சிறிது கூடிய இடத்தைப் பிடிக்கும். இவ்விரண்டை விடவும் வாயு அதிகமான இடத்தில் பரவுகின்றது. இது போன்றுதான் இறைவனை ஆலயங்களில் ஒரு சிறிய உருவம் வைத்து வழிபடுகின்றோம். உருவமற்ற இறைவன் வாயுபோன்று எங்கும் நிறைந்துள்ளான். இதனைக்காண இயலாது. ஆனால் உணரலாம். வளி இன்றேல் நாம் உயிர் வாழ முடியாது என்ற உண்மையை (சத்தியம்) உணர வைக்கலாம்.

ஆ. சடப்பொருள் இடத்தை அடைக்கும் தன்மை உள்ளது. ஒரு பொருள் இருப்பின் இன்னொரு பொருள் அதே இடத்தில் இருக்க இயலாது. அதனை அகற்றிவிட்டே வேறு பொருட்களை வைக்கலாம். அதே போன்று எமது மனத்தை நல்லெண்ணங்களால் நிரப்பினால் தீய எண்ணங்கள் இருப்பதற்கு இடமில்லாது போகும். எனவே நல் லெண்ணத்தினால் மனதை நிரப்பவேண்டும் என விளக்கலாம்.

**02. வித்து முளைத்தல்:**

பாதிக்கும் காரணிகள் 1. அகக்காரணி — முதிர்ச்சி, நோயின்மை
பூச்சி அரிக்காமை
புறக்காரணி — நீர், வளி, ஒளி

நல்ல ஒரு தாவரம் வளர்ந்து பயன்தர வேண்டுமாயின் அதன் விதை உயிர்ப்புள்ளதாக, பூச்சிகளால், இரசாயனங்களால் பாதிக்கப் படாத ஒன்றாக அமையவேண்டும். புறக்காரணிகளான உகந்தநீர், வளி, ஒளி என்பனவும் கிடைக்கவேண்டும் இதேபோல ஓர் குழந்தை வளர்ந்து சமுகத்திற்கு உதவுபவனாக ஆக வேண்டுமாயின் அவனது பரம்பரையும், சூழலும் நன்றாக அமையவேண்டும். விதையில் உள்ள உயிர்போல இங்கு தெய்வீகம் புகுந்துள்ளது. நற்பழக்கவழக்கங்களாலும், நற்செயல்களாலும் அதனைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும். இவ்வாறின்றேல் நாம் சமுகத்திற்குப் பயன்படாதவர்களாவோம்.

**03. எமது வான், கோள்கள், சூரியமண்டலம் சம்பந்தமான அலகுகள்:**

1. இவை யாவும் ஓர் ஒழுங்கில் உள்ளன. இதுபோல எமக்கும் கடமை ஒழுங்கு உண்டு. அதனை நாம் செவ்வனே செய்ய வேண்டும்.
2. சூரிய ஒளியின் பயன்கள் — பயன்கருதாத சேவை.
3. தோற்ற அசைவு — உண்மையிலிருந்து வேறுபடல்.
எனவே ஆராய்ந்தறிதல் வேண்டும்

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

எனவே மேலும் விளக்கலாம். இவற்றை எமது வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **மண்வகைகள் :**

வேறுபட்ட மண்மாதிரிகள் உள்ளன. ஒவ்வொருவகை மண்ணிற்கும் சில சிறப்புத்தன்மை உள்ளது. எனவே குறிப்பிட்டசில தாவரங்கள் செழிப்பாக வளரும். இதேபோல ஒவ்வொரு மனிதனும் சில திறன்களைப் பெற்றுள்ளான். அதனைக் கண்டறிந்து அதற்கு உகந்ததாக தன் காரியங்களைத் திட்டமிட்டால் சிறந்த பயன்பெறலாம்.

5. **மின்னைப் பயன்படுத்தல் :**

மின்னை அவதானமாகக் கையாளவேண்டும். இன்றேல் அது உயிரையும் அச்சுறுத்தும் எனினும் அது சிறந்ததொழிலாளி. பொறுமை அவதானம் என்பவை மிகவும் தேவையானவை. ஒவ்வொரு மனிதரிடமுள்ள பண்புகளிலும் நாம் நல்லதையே பயன்படுத்தவேண்டும். மற்றைய பண்புகளை ஓரளவேனும் சகிப்புத்தன்மையுடன் ஏற்கப்பழக வேண்டும்.

6. **உடற்தொகுதிகள் :**

ஒவ்வொரு தொகுதியும் தமக்கேயுரிய குறித்த தொழிலைச் செய்கின்றது. ஏதேனும் ஒரு தொகுதியில் ஒரு சிறிய பகுதி தனது கடமையைச் செய்யாவிடில் எமது உடலில் உயிர் தங்காது.

இதேபோல எமது நாடு செழிப்புற ஒவ்வொரு மக்களும் பொறுமையுடன் தத்தம் கடமைகளைச் செய்யவேண்டும். சிறிய பிழையால் நாட்டிற்கு நஷ்டமல்ல என்று நினைப்பது தவறு. இவ்வாறு நினைப்பின் நாடு அழிவுப் பாதையில் செல்லும் என்பது திண்ணம் என உணர்த்தலாம்.

அனைத்துக்கல்வியும் முதலில் ஒழுக்கம் சார்ந்ததாகவும் அதன் பின்பே அறிவு சார்ந்ததாகவும் அமைதல் வேண்டும் என்றார் ரஸ்கின். இதே போல ஸ்ரீ சத்யசாயி பாபாவும் ''கல்வி என்பது ஒழுக்கமே'' எனவும் வலியுறுத்துகின்றார்.

இவ்விழுமியங்கள் பல குழுமுறைக்கற்பித்தல் செயற்பாடுகளினூடு கொண்டுவரப்படுகின்றன. ஒருவர்க்கொருவர் உதவுதல், விட்டுக்கொடுத்தல், மற்றையோர் கருத்தை ஏற்றுக்கொள்ளல், நட்பு, தலைமைத்துவம், உண்மை விளம்புதல் போன்றவை ஒவ்வொரு குழுவிலும் செயல் வடிவம் பெறுவதைக் காணலாம். இங்கு விஞ்ஞானத்தில் விழுமியமும், விழுமியத்தில் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று உரமூட்டுகின்றன.

எனவே ஆசிரியர்களாகிய நாம் மனித விழுமியங்களை விஞ்ஞான கணித பாடங்களினூடாகவும் பொருத்தமானதாகப் புகுத்த வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. ஆனால் இவற்றிற்கு நன்கு திட்டமிடலும், சிறந்த முன் மாதிரியும் அவசியமாகும். எனவே,

''பெற்ற கடமையைப் பேணி ஏற்றே — ஞாலம்
போற்றும் சமூகத்தினை நாம் படைப்போம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைச்செடி

**செல்வி ந. ரமணா**
யா / வடமராட்சி மகளிர் கல்லூரி

ஆசிரிய உறவினிலே உம்மையெல்லாம்
நேசமுடன் நினைக்கின்றேன் நெஞ்சமதில்
ஆதார ஆத்மீக உணர்வினிலே யுங்கள்
கோல விழிகளும் கொள்கைகளும்
பூபாளம் பாடும் அதிகாலை வேளையிலே
பூஞ்சிட்டாய் ஆர்ப்பரிக்கும் ரீங்காரம்
காதைத்தழுவியென் கவலையெல்லாம் போக்க
போதை தலைக்கேற புகுவேன் வகுப்பறைக்குள்

நாடகம் நடக்கும் நல்ல தமிழ்க்கவி பிறக்கும்
பாடம் நடத்துகையில் பார்த்திருக்கும்
வேடமில்லா முகங்களில் விழுமென்னிதயம்
தேடாத அறிவெல்லாம் தேடிவந்து
பாடிப்பறக்கும் பட்டாம் பூச்சிகளே – உங்களுடன்
கூடிக்களிக்கின்றேன் சிறு பூச்சியாய் நானும்
தேடித் தேன்சுவைப்பீர் திக்கெட்டும் புகழ் பரப்ப
நாடி விரைவீர் நலம் தேடி

எட்டு மணிநேரமும் இடைவிடாத செல்லடியால்
பட்டுப்போன்ற உள்ளம் பட்ட மரமாகும்
கட்டழகு வாடிக்களையிழந்த போதும் – அறிவு
மொட்டுக்கள் மலர மடியுண்டு வாரீர்
திட்டமிட்டுச் சாதனை விதை விளைத்து
நட்டு வளர்த்து நலம் பெறுவோம் வாரீர்
வட்டமிட்டுப் பருந்துபோல்கௌவும் நிலையொழித்து
எட்டுமட்டும் மனிதத்து எல்லையினை அடையவாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் கற்பித்தலும் கற்பித்தல் சாதனங்களும்

செல்வி மா. மகாலக்சுமி
யா/தாவடி இந்து வித்தியாலயம்.

அறிதல் ஆட்சி, உளவியக்க ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி என்பன பற்றிய முழுமையான அறிவின்றி ஆசிரியர் தமது கற்பித்தல் செற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியாது. பூரண ஆளுமையுடைய மாணவனொருவனை உருவாக்குவதற்கு மேற்காட்டிய மூன்று ஆட்சிகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். பல்வேறு கற்பித்தல் சாதனங்களையும் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப எண்ணக்கருக்களைக் கற்கும் திறன் வளர்ச்சியடைகிறது எனவும் ஒரு வளர்ச்சிப் பருவத்தில் கற்கவேண்டிய எண்ணக்கருக்களை அதற்கு முன்கற்பதில் பயனில்லை எனவும் பியாஜே எடுத்துக்காட்டியுள்ளார். இவர் அறிவு வளர்ச்சி பற்றி நான்கு கட்டங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

1. புலன் இயக்கப்பருவம்.
2. தூலசிந்தனைப்பருவம்
3. தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவம்
4. நியம சிந்தனைப்பருவம்

எனவே கற்பிக்கும் ஆசிரியருக்கு வளர்ச்சிக்கட்டங்கள் பற்றிய தெளிவு இருத்தல் வேண்டும். இவர் 18 வயதுவரை அறிவு வளர்ச்சி நீடிக்கின்றது எனவும் அதன்பின் ஏற்படும் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடவில்லை. இக்கொள்கையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு புருணர் சில ஆய்வுகளை மேற்கொண்டார்.

புருணரின் ஆய்வின்படி தனியாளிடம் ஏற்படும் உள்ளமைப்பு மாத்திரமன்றி சாதாரண நுண்மதியுடைய எவருக்கும் நுண்மதியை விருத்தி செய்து கொள்ளமுடியும் எனவும் நுண்மதி வளர்ச்சியடையும் மூன்று கட்டங்கள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார்.

1. செயற்பாட்டு நிலை
2. கருத்துநிலை
3. குறியீட்டு நிலை

முதலாவது கட்டத்தில் செயற்பாடுகள் மூலம் விளங்கிக்கொள்வது. இரண்டாவது நிலை உளத்தொழிற்பாடு மூலம் விளங்கிக்கொள்வது, மூன்றாவது நிலை குறியீடுகளைக் கொண்டு ஒன்றை விளங்கிக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது. இக்கூற்று வயதடிப்படையின்றி மேற்கூறிய கட்டங்களினூடாக எண்ணக்கரு வளர்ச்சியடைகிறது என புருணர் விளக்கியுள்ளார். இதற்கு உ-ம் விளக்கியுள்ளார்.

செயல்முறை அடிப்படையில் ஒவ்வொருபிள்ளைக்கும் கயிற்றைக் கொடுத்து ஆசிரியர் ஒரு கயிற்றுத்துண்டை எடுத்து முடிச்சுப் போடு வது எப்படி என்பதைக் காட்டிக் கொடுக்கவேண்டும். மாணவர் அதனைப் பார்த்துச் செய்யும்போது செயல் மூலம் கற்பதாகும்.

இரண்டாவது நிலையில் பிள்ளைகளுக்கு கயிறு கொடுக்கப்பட மாட்டாது. ஆசிரியரும் கயிற்றைப் பயன்படுத்தமாட்டார். அதற்குப் பதிலாக குறிக்கப்பட்ட முடிச்சின் உருவத்தை வரைந்து காட்டுவார். அதன் மூலம் பிள்ளை அதனைக் கற்றுக்கொள்கின்றது.

மூன்றாவது நிலையில் பயிற்சியோ, சித்திரமோ பயன்படுத்தப் பட மாட்டாது. சொற்கள் மூலமே அதுபற்றி விளக்கப்படுகிறது. மாணவன் அதனை விளங்கி முடிச்சுப்போடும் முறையைக் கற்றுக் கொள்கிறான். மாணவரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய அனுப வங்களை வழங்குவதற்கு செயற்பாட்டு நிலை உதவுவதாக புருணர் எடுத்துக்காட்டுகிறார்.

புருணரின் மூன்று கட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டே எக்கார்டேல் ''அனுபவக்கூம்பு'' ஒன்றை அமைத்துள்ளார். அவ் வமைப்பு பின்வருமாறு.

குறியீட்டு நிலை
படரீதியான அனுபவம்
செயல்முறை அனுபவம்

இவ்வமைப்பின்படி அடிப்பகுதி நேரடி அனுபவங்கள் மூலமும் மேலே செல்லச்செல்ல கருத்துநிலை அனுபவங்களின் அடிப்படையில் எண்ணக் கருவாக்கம் நிகழ்வதையும் காட்டுகிறது.

கைத்தொழில் புரட்சியின் பின்னரே உலகில் வர்த்தகபாடமானது அறிமுகம் செய்யப்பட்டது. இப்பாடம் ஏனைய பாடங்களைப் போல் ஆரம்ப வகுப்புக்களிலிருந்து கற்பிக்கப்படுவது இல்லை. தரம் பத்தில் இருந்தே கற்பிக்கப்படுகிறது. வர்த்தக பாடத்தில் உற்பத்தி, விநியோக வழி முறைகள், தகவல்களையும் அறிக்கைகளையும் பதிவு செய்தல், வளங்களின் பயன்பாடு, முகாமைச்செயற்பாடுகள், பணம், வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் போன்றன இப்பாடத்தினூடாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதுடன் உண்மை வாழ்க்கைக்குத் திரும்புதல் அல்லது வணிக உலகிற்கு பிரவேசிக்கச் செய்தல் என்பதே வணிகக் கல்வியின் மூலம் நிகழக்கூடிய செயலாகும்.

கற்பித்தல் சாதனங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. கட்புலசாதனங்கள்
2. செவிப்புல சாதனங்கள்
3. செவிப்புல-கட்புல சாதனங்கள்
4 மாதிரி உருவம்
5. உதாரணம்
6. முன்மாதிரி
7. உண்மை வாழ்வு அனுபவங்கள் போன்றனவாகும்

வர்த்தகபாடத்தில் காசோலைபற்றிக் கற்பிக்கும் போது டேல் இன் அனுபவ வரைபு முறையில் செயற்படும் போது, காசோலைப்புத்தகம் மாணவர்களுக்கு காண்பித்து அதில் உள்ள இதழ்களில் இருக்கும் விப ரங்கள், பூரணப் படுத்தும் முறையும், குறுக்குக்கோடுகள் பற்றிய விபரம் கையொப்பம் இடும் முறை போன்றன செயல்ரீதியாக காண் பிக்கப்படுகின்றது. மாணவர் விளங்கிக்கொள்வர்.

இரண்டாவது நிலையில் காசோலையை கரும்பலகையில் வரையும் போது அதன் எண்ணக்கருக்களை மாணவர்கள் விளங்கிக்கொள்வர். மூன்றாவது நிலையில் எதுவும் காணபிக்கப்படமாட்டாது. சொற்கள் மூலமே மாணவர்கள் விளங்கிக்கொள்வர். டேலின் கருத்துப்படி நேரடி அனுபவங்களே கூடிய பங்கு வகிக்கின்றன.

மாணவர்களுக்கு அறிவைப் புகட்டுவதற்கு ஒப்புமைக்கோடன்கள் மூன்று வகையில் செயற்படலாம்.

1. பொருண்மை 2, மாதிரியாக்கம் 3. பாவனைசெய்தல்

பொருண்மை: இது உண்மை அனுபவங்களைப் பெறலாம்.
உ-ம் வெளிக்களப் பயணங்களில் இம்முறைக்கற்றலே நடைபெறும்.

மாதிரியாக்கம்: ஒரு பொருளின் உண்மைப் பிரதியாக சில காணப் படும். பொருகாட்சிச்சாலைகளில் காணப்படும் மாதிரிகள் இவ்வகைப்படும். உ-ம் வர்த்தக மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வங்கிகளின் கணக்குகள் பேணப்படுவதற்கு வேண்டிய படிவங்களைக் காண்பித்தலும் பூரணப் படுத்த வழிப்படுத்தலும், காசோலைகளைக் காண்பித்தலும் மாதிரியாக்கமாகும்.

பாவனை செய்தல்: இதுவும் ஒரு மாதிரியாக்கமே. ஆனால் இங்கு மாதிரியானது உண்மைப் பொருளை முற்றாக ஒத்திருக்கவேண்டியதில்லை பாவனையை உணர உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டாற்போதும். உ-ம் சில்லறை வியாபார அமைப்பு அல்லது சந்தை அமைப்பை வகுப்பறையில் பாவனை செய்வதன் மூலம் உண்மையை அவர்கள் உணரமுடியும்.

கற்பித்தல் சாதனம் யாவரும் காணக்கூடியவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் கற்பித்தல் சாதனங்களை ஒழுங்கு முறைப்படி படிப்படியாக விளக்குதல் வேண்டும். விளம்பரம், காப்புறுதி போன்றன கற்பிக்கும் போது நாடகபாணியில் கற்பிக்கலாம். தமது குறிக்கோளை எய்துவதற்கான தொடர்பில் கவனஞ்செலுத்தவேண்டும். ஒளிப்படங்கள், சிறியபடங்கள், உபகரணங்கள் போன்றவற்றை மாணவர்கள் கையில் எடுத்துப் பார்ப்பதற்கு வகைசெய்தல் இவ்வாறு செய்வதால் கற்றல் வேகமடையும். மாணவர்களை ஊக்குவித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யலாம். சிக்கலான எண்ணக்கருக்களை எளிதில் விளக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுமனம்

செல்வி வி. நிர்மலா
யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி.

இப்ப நேரம் ஏழரை மணிதானே. இன்னும் சாப்பாட்டு நேரத்திற்கு 1/2 மணித்தியாலம் தான் இருக்கு அது மட்டும் படிக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் இரவிலை என்னத்தைப் படிக்கிறது. இந்த அம்மாக்கு இதுகள் விளங்காது. எந்த நேரமும் படிபடி என்றுதான் சொல்லிக் கொண்டிருப்பார் ஏதோ தான் படித்தவராம் அப்படியானால் எனக்குப் பாடம் சொல்லித் தரலாம் தானே. நான் கேட்டால், தான் தம்பிக்கு சாப்பாடு ஊட்டவேணும், நித்திரையாக்கவேணும் என்று சொல்லுவார். அவரின் அலுவல்கள் முடியவும் எனக்கு நித்திரை வரவும் சரியாக இருக்கும். பாடசாலையிலை நான் தான் முதலாம் பிள்ளை. ஆனால் அம்மா என்னைப் புத்தியில்லாதவள் என்று ஏசுவா. ஒரு நாளைக்கு ரீச்சரை வந்து கேளுங்கோ அம்மா என்றால் தனக்கு நேரமில்லையாம். எங்கட நித்தியா ரீச்சர் எவ்வளவு நல்லவா. ஒரு நாளும் அடிக்கமாட்டார். நல்ல வடிவு, வடிவான சாறியெல்லாம் கட்டிக் கொண்டு வருவார். என்னைத் தன்ரை வீட்டில வந்து இருக்கும் படி கேட்டவர். அம்மாதான் போகவிடவில்லை. எவ்வளவு அன்பான ரீச்சர். கனவிலும் நனவிலும் எனக்கு அவரின் ஞாபகம் தான் வருகிறது. பக்கத்துவீட்டுப் பபிதா ரீச்சர் வீட்டை போனவளாம். அவளுக்கு என்ன குறை. அக்கா, அன்ரி, அத்தைமார் எல்லோரும் பாடம் சொல்லிக் கொடுப்பினம். எனக்குத்தான் ஒருத்தரும் இல்லை. பெரியமாமா மாமி கனடாவில் இருந்தென்ன சித்தப்பா சித்தி லண்டனில் இருந்தென்ன அவர்களின் பிள்ளைகள் என்னுடன் வந்து விளையாடவா போயினம். இனித் தம்பி எப்ப வளர்ந்து என்னுடன் விளையாடப்போகிறானோ. அப்பா பெரிய இஞ்சினியர், ஒருநாளும் வீட்டிலை நிற்பதில்லை. எந்த நாளும் கொழும்புக்கும் திருகோணமலைக்கும் ஏதோ கூட்டமென்று போய்வருவார். எனக்கு அவர் கொழும்பில் இருந்து வாங்கி வரும் சட்டையோ கன்டோசோ வேண்டாம். அவர் இரவில எனக்கு பாடம் சொல்லித் தரவேணும். சீலா, மாலா, பாமதி எல்லோரும் இரவில அப்பாவோடதானாம் படுக்கிறவர்கள். அந்தப் பாக்கியம் தான் எனக்கு இல்லையே. அம்மா தம்பிக்கு பக்கத்தில படுப்பார். நான் தனியாகப் படுத்து நடுஇரவில் கண்ணை முழிக்கப் பயமாக இருக்கும். அப்பா இருந்தால் பயமில்லைத்தானே. மொத்தத்தில் இந்த வீடே சரியில்லை. பாடசாலை நண்பிகள் எல்லாம் பக்கத்து வீட்டுக்குப்போய் ரீ. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கினம். எனக்கு வீட்டிலிருக்கும் ரீ. வி யைக்கூட பார்க்க முடியாது. படிப்புக் குழம்பிவிடும் என்று அம்மா பார்க்கவிடமாட்டா. திவி அங்கே என்ன செய்கின்றாய். நித்திரை தூங்கிவிட்டியோ. அம்மாவின் சத்தம் கேட்டு சுயநினைவிற்கு வருகிறேன். பக்கத்தில் வந்து நின்ற அம்மா திவி உனக்கு இனி வாற வருசம் ஸ்கொலசிப் சோதனை. கூட நேரம் இருந்து படிக்கவேணும். உன்ரைசிநேகிதிகள் எங்காவது ஸ்பெசல் கிளாசிற்கு போகினமா? கேட்டுப்பார் நீயும் போகலாம். சரி இனி ஸ்கொலசிப் முடியுமட்டும் இதுதான் கதை. சிலவேளை ஸ்கொலசிப் நடக்காது என்று கதைத்தவை. அம்மாக்கு இது எங்கே தெரியப்போகிறது. பரீட்சை நடந்தாலென்ன நடவாவிட்டால் என்ன நான் கவனிக்கிறேல்ல என்னை ரீ. வி. பார்க்க விடாமல் படிபடி என்று கூறும் அம்மாவுக்கு இதுதான் தண்டனை. அம்மா திரும்பவும் கூப்பிடுகின்றார். இனி சாப்பிட்டுவிட்டு நித்திரை கொள்ளுவம். நாளைக்கு நேரத்துடன் பாடசாலைக்கு போகவேண்டும்.

பாடசாலைக்குள் நுழைந்தவுடன் திவ்யாவின் கண்கள், நித்தியா ரீச்சரின் உருவம் தென்படுகிறதா என்று நாலு சுற்றும் தேடியது ஒரு இடமும் காணாததால் மனம் சோர்வடைகின்றது. இன்று பாடசாலைக்கு வந்ததே வீண். ரீச்சர் வரவில்லையோ என்று பலவாறு நினைத்துக் கொண்டு வகுப்பறையில் சென்று அமுகின்றேன். பாடங்கள் ஆரம்பமாவதற்கான மணிச்சத்தம் கேட்கவே தூரத்தில் நித்தியா ரீச்சர் வருவது தெரிகிறது. திவ்வியாவின் மனம் சந்தோசத்தால் துள்ளிக்குதிக்கிறது. எல்லோரும் காலை வணக்கம் கூறி முடிக்கவே என்ன திவி பலமான யோசனை ரீச்சர் வந்ததையும் கவனியாமல். திடுக்கிட்டு திவ்யா சுயநினைவிற்கு வருகிறாள். ரீச்சர் என்னிலை எவ்வளவு அக்கறையாய் அன்பாய் இருக்கின்றா. அவருக்காக என்றாலும் நான் நல்லாய்ப் படித்துக் ஸ்கொலசிப் பாஸ்பண்ணவேணும். அப்பதான் அவர் சந்தோசப்படுவோர். தீர்மானத்துடன் ரீச்சரை நிமிர்ந்து பார்க்கிறாள் திவ்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியனே நாட்டின் உயிர்

திரு. கே. கே. யோகநாதன்
யா/குடத்தனை அ. த. க. பாடசாலை

வாழ்க்கை என்ற நாடகத்தின் வளர்ச்சியென்ற அம்சம் பாடசாலையிற்தான் மேடையேறுகின்றது. இதனை நெறிப்படுத்துபவன் ஆசிரியனே. ஒருவனை அவனது வாழ்க்கைக்கும், சமூகத்திற்கும் ஏன் அந்த நாட்டிற்கும் பயன்படுபவனாக உருவாக்குவதே ஆசிரியரின் பொறுப்பாகின்றது.

இதனைச் சமூகத்தின் வளர்ச்சிப் படிகளிற்கு வினைத்திறன் காண விளைந்த சிந்தனையாளர்களில் ஒருவரான சோக்கிரட்டீஸ் எனும் தத்துவஞானி ''ஆசிரியன் என்போன் ஞான விளக்கு'', என்றார். இந்த வரிசையிலே 'சோக்கிரட்டீஸ்' பிளேட்டோ, மகாத்மா காந்தி. ரூசோ, புரோல், போன்ற சிந்தனையாளர்களைத் தொடர்ந்து இன்று வரை ஆசிரியன் என்போன் யார் என்ற முக்கியத்துவம் உணரப்பட்டு இதன் உண்மையும் புலப்பட்டு இருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு நோக்கங்களான கலாச்சாரம், சமயம், ஒழுக்கம், சமூகவிழுமியங்கள், போன்றவற்றின் ஊடாக நல்ல பிரஜையை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியனிடமேயுள்ளது. ஒரு சமுதாயம் பயனடைவதற்கு கல்வியானது முறையாக அளிக்கப்பட வேண்டும். கல்வியறிவில்லாத சமுதாயம் இருட்டிலே வெளிச்சமின்றி நிற்கும் ஒருவனுக்குச் சமனானது.

ஆசிரியனானவன் ஒழுக்கம், கட்டுப்பாடு, அகிம்சை, பணிவு, ஈகை, இன்சொல், தியாகம், ஆகிய பண்புகளை உடையவனாக வாழ்ந்து இவற்றை உணர்த்துபவனாக விளங்குகின்றான். கல்வி மூலம் விழுமிய பலன் காணும் உலகம் இந்தப் பொறுப்பினை ஆசிரியரிடமே விட்டு விடுகின்றது.

குரு, ஆசான், உபாத்தியாயன் என்றெல்லாம் பெயர் கொண்ட ஆசிரியனின் செயல், பெருமை, தன்மை, சேவை என்பன எழுத்தில் இல்லை. சொல்லிலும் கூறமுடியாது. இதனால் தான் இலக்கியங்களிலும் ஆசிரியர்கள் பெருமை உணரப்பட்டுள்ளதோடு, ''ஆன்மாவிற்கு உரிமைபாராட்டுவது ஆசிரியர்கள்'' எனப்பட்டது. திருமந்திரத்திலே ''தெளிவு குருவின் திருமேனி காணல்'' எனப்பட்டது. புறநானூற்றிலே ''நல்ல குருநாதன் எமை வருத்துவது கொல்ல அல்லக் கொல்ல அல்லப் பொல்லாப் பிணியகற்ற'' என்று உணர்த்தப்பட்டிருக்கின்றது. பொதுப்படையாக எல்லோரும் சிந்திப்பதனைக் கூறாது மூன்றாவது வழியாகக் கருதப்படும் கல்வியினை எந்தக் கோணத்தில் நின்று நோக்கினாலும் விடை காண்பதற்கும் வியந்து நிற்பதற்கும் இந்த உலகமானது ஆசிரியனைப் பிரித்து நோக்க முடியாதுள்ளது என்பது வெளிப்படையானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வாழ்வாங்கு வாழ வழி காட்டும் கல்வியினை ஆசிரியனே மனித சமுதாயம் தோன்றிய காலம் முதல் வளர்ச்சிபெற வைத்தவனாகின்றான். நாட்டின் தேவைக்கும் கொள்கைக்கும் ஏற்ற கல்வியினைப் பொருத்தமாகக் கையாண்டு வெற்றி கொண்ட நாகரிகங்களை கால வோட்டத்தில் நோக்கும் போது இந்த உண்மை புலனாகின்றது. கிரேக்க நாட்டிலே கல்வி வளர்ச்சி பெற்றிருந்த ஸ்பாட்டா, அதென்ஸ் இரு நகரத்திலே சிறந்த குடி மகனையும் உருவாக்குவதில் ஆசிரியன் கற்பித்தலின் ஊடாக வெற்றி கண்டான் எனும் விடயம் இந்த உண்மைக்கு அத்திவாரம் இடுகின்றது. எனவே நாட்டிற்குத் தேவையான கல்வியைப் புகட்டும் ஊடகம் ஆசிரியர்களே என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாததொன்றாக விளங்குகின்றது.

சிந்திக்கும் உயிரி எனப்படும் மனிதனை, அவனது செயலை, திறனை, பண்பினை உருவாக்குவதிலே பெரும் பங்கினை ஆசிரியனே பெற்று விடுகின்றான். அசையும் உலகத்திலே மனிதனும் தனது நோக்கிற்கேற்ப அசைகின்றான். இந்த அசைவினைப் பயன் தரத்தக்க வகையிலே சிந்தித்து அசையச் செய்பவன், அடிப்படையை உணர்பவன், அர்த்தத்தில் புரிய வைப்பவன், வழிகாட்டியே என்பது தான் இதன் பின்னணியில் மறைந்திருக்கின்றது.

மனித விருத்திக்கேற்ப சிந்தனை ஆற்றல் பெருகுகின்றது. விஞ்ஞானம் வளர்கின்றது, பொருளாதார விருத்தி ஏற்படுகின்றது, இவையெல்லாம் ஒரு நாட்டில் இயல்பாகவே நடைபெறுகின்றதா? என்ற கேள்வியினைத் தொடுக்கின்ற போது இதன் பின்னணியில் ஆசிரியர் அசைகின்றார். 'புரோபல்' என்ற கல்விச் சிந்தனையாளர், ஆசிரியனை ஒரு தோட்டக்காரனாக ஒரே வார்த்தையில் கூறி கற்பவர்களைச் செடிக்கு ஒப்பிட்டமையிலிருந்து பயிரை வளர்த்தெடுத்துப் பயன்படுத்தும் பொறுப்பிலே ஆசிரியரையும் நல்ல சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் உத்தம வரிசையிலே அடங்குகின்றார்.

நாட்டிற்குத் தேவையான பொருளாதார, அரசியல், கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் அத்தனைக்கும் அதன் பொருத்தப்பாட்டினை உணர்ந்து செயற்பட வேண்டியவர் ஆசிரியரே. சிந்தனையாற்றலைத் தூண்டி, சீரிய சிந்தனையாளராக விளங்கி இதன் மூலம் தர்க்க ஆற்றல், காரண காரியத் தொடர்புகாணும் திறன், பகுத்தறிவு, என்பன வெளிப்படச் செய்யும் சீரிய சிந்தனையாளனாக ஆசிரியன் இருக்க வேண்டும். இதனை மனதிலிருத்தி ஆசிரியனானவன் காலத்தின் தேவைக்கேற்பத் தன்னைத் தயார்ப்படுத்திக் கல்விப் பாதைக்கு வித்திடும் விருட்சமாக மிளிர வேண்டும். எனவே ஆசிரியரே நாட்டின் உயிர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பாங்கு

திருமதி செ. செல்லையா
யா சுழிபுரம் கிழக்கு,
அ. மி. த. க. பாடசாலை.

கல்வியின் நோக்கங்களின் தன்மைகள் காலத்திற்கு காலம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. எந்த நேரத்திலும் எந்த நாட்டிலும் கல்வியின் நோக்கங்களை அடையச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

சமூகத்தைப் பொறுத்தவரையிலும் ஆசிரியருக்கு பெரிய பொறுப்பு உண்டு. வேகமாக மாற்றம் அடைந்து வரும் சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் தன்னை தயாரித்துக்கொள்ளும் ஆற்றல் பெற்று இருக்க வேண்டிய அவசியம் ஆசிரியருக்கு உண்டு. தொழிலின் மதிப்பைப் பாதுகாத்துக் கொள்வது ஆசிரியரின் கடமையாகும். ஆசிரியர் என்ற வகையில் ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களையும், கடமைகளையும் நன்றாக விளங்கிக் கொண்டு தன்னம்பிக்கையுடன் திறமையாகவும், வெற்றிகரமாகவும் கடமையாற்ற வேண்டும். ஆசிரியரின் பங்கு என்ற பதத்திற்கு பொருள் கூறும் போது, நியூயோக்கிலுள்ள மிக்சிக்கன் பல்கலைக்கழகத்து இரு அமெரிக்க கல்விமான்கள் ஆகிய வில்பரீப்புறூக்கோவர், டேவிட் கொட்டிப் என்போர் எழுதிய கல்வியியல் சமூகவியல் என்ற நூலில் பங்கு என்பது ஒன்றுடன் ஒன்று தொடர்பான நிலை, தகுதி, பதவி என எடுத்துக் காட்டியுள்ளனர்.

நிலை என்பதனை எடுத்துக் கொண்டால் ஒரு நிறுவனத்தில் அல்லது சமூகக் குழுவில் தனியாட்கள் இடம் ஆகும். உதாரணம் தந்தை, தாய், மகன், மகள், கமக்காரன், குரு என்பனவாகும். இங்கே பாடசாலை என்ற ஓர் நிறுவனத்தை எடுத்து நோக்கினால் அதிபர், ஆசிரியர், மாணக்கர் என்ற பிரிவினர் உள்ளனர். இந்த ''நிலை'' என்ற சொல் இத்தகைய பிரிவினைக் குறிக்கும். இவ்வாறு ''ஆசிரியர்'' என்பது ஓர் நிலையாகும். அடுத்ததாக ''தகுதி'' என்பதை நோக்கின் ஒரு தகுதியுடையவருடன் பல்வேறு தனி நபர்கள் தொடர்பு கொண்டிருப்பர். ஒரு நிலையை வகிப்பவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனில் இத் தனி நபர்கள் சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருப்பர். இவ் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப ஆசிரியர் ஆனவர் நடந்து கொள்ள வேண்டும். இவ் எதிர்பார்ப்புக்களே அவரின் ''தகுதியை'' வரையறுக்கும். ஒரு நிலையில் நியமிக்கப்பட்டவர்கள் அந்த நிலைக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியைப் பாதுகாக்க வேண்டும். ஒரு வைத்தியரிடம் சமூகம் எதிர் பார்ப்பது நோய்க்கு சிகிச்சையாகும். சட்ட வல்லுனரிடம் இருந்து எதிர்பார்ப்பது சட்ட ஆலோசனை அல்லது சட்ட விளக்கத்தையாகும். இது தான் அவர்களுடைய '' தகுதி '' இதன் பிரகாரம் சமுதாயம் ஓர் ஆசிரியரிடம் இருந்து எதிர்பார்ப்பது '' கற்பித்தல் '' அது ஆசிரியரின் '' தகுதி '' யாகும்.

ஒரு நிலையை உடையவர்களிடம் பல பிரிவுகள் உண்டு. இதன் படி ஆசிரியரின் நிலை 1. பாடங்களுக்கு பொறுப்பு 2. வகுப்புக் களுக்கு பொறுப்பு 3. மாணவரின் நல்லொழுக்கங்களுக்கு பொறுப்பு என பொறுப்புக்கள் வேறுபடும். ஆசிரியர் என்ற பதவிப் பெயருக் குரிய பொறுப்புக்கள் அதிகாரங்கள் கடமைகள் நடத்தை ஒழுங்கு சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றுக்கு ஏற்ற நடத்தையே ஆசிரியர் '' பாங்காகும் ''. ஓர் ஆசிரியர் தனது கடமைகளைத் தெளி வாக விளக்கிக் கொண்டால் தான் தனது பங்கினை சுலபமாக ஆற்ற முடியும் வரையறுக்கப்பட்ட பதிவேடாக ஆசிரியரின் கடமைகள் பதியப் படவில்லை. ஆசிரியர் கடமைகள் பற்றிக் காலத்துக் காலம் கல்வி மான்களால் வெளியிடப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகும். ஓர் ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் தொழில்நுட்பம் வெற்றிகரமாகவும் திறமையுடனும் விளங்க அத்தொழிலுக்குரிய கடமைகளை நிறைவேற்ற சில அதிகாரங்கள் தேவைப்படும். ஆசிரியர் இவ் அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்புடன் செயற்படும் போது நிலையின் கௌரவத்தைப் பாதுகாத்தல் வேண்டும். ஒரு சேவையில் நியமிக்கப்பட்ட ஒருவரின் பங்கு அந் நிலைக்குரிய அதிகாரம், பொறுப்புகள். கடமைகள் நடத்தைகள் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புற்ற செயற்பாடாகும்.

முழுப் பாடசாலையிலும் ஆசிரியர் செய்ய வேண்டிய கடமைகள் ஆவன :- ஆசிரியர் ஆனவர் அதிபரின் தலைமையை ஏற்றுக் கொண்டு பாடசாலையின் நிர்வாகக் கடமைகள் யாவற்றிலும் பங்கு கொள்ளல். உதாரணமாக நேரத்துடன் வரல், பாடசாலையில் குறிப்பிட்ட நேரம் வரையும் சமுகம் அளித்தல், சுற்று நிருபங்களுக்கு ஏற்ப செயற் படல், பாடத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தல், ஆசிரியர் கூட்டங்களில் பங்கு பற்றுதல், ஏனைய ஆசிரி யர்களுடன் தனது தனிப்பட்ட பிரச்சனைகள் பற்றிக் கலந்துரையாடி அவற்றை நீக்குதல், பாடசாலை அபிவிருத்தியில் உற்சாகத்துடன் செயற்படுதல், மாணவர்களின் விருப்பு வெறுப்புக்களையும் திறமை களையும் அறிந்து கற்பித்தல், மாணவர்களின் கல்வி வளர்ச்சி, பாட சாலை வளர்ச்சி, ஆகியவற்றில் பெற்றோரின் ஒத்துழைப்பை பெறுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் உள்ளும் புறமும் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாட்டைப் பேணல், தொழில்சார் கலந்துரையாடல்களில் பங்கு கொள்ளல் என்பனவாகும்.

இவற்றைத்தவிர ஆசிரியருக்கும் பெற்றோருக்குமிடையே தொடர்பினைப் பேணல், சமுதாய வளர்ச்சியில் உதவுதல், சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டல் தேவையான சந்தர்ப்பங்களில் தலைமைதாங்குதல், பாடசாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் சமூக கலாச்சார சமய நிறுவனங்களில் பங்குகொள்ளல், சமூக வளர்ச்சிக்கு சமூகத்தின் உதவியைப் பெறல், அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கைக்கு ஏற்ப சமூகக் கருத்துக்களை மாற்றியமைத்தல்போன்ற பொறுப்புக்கள் உண்டு

எனவே ஆசிரியர் ஆனவர் பாடசாலைக்கும் பரந்த சமுதாயத்திற்கும் இடையிலான தனியாள் இடைத்தொடர்புகளை ஏற்படுத்துகின்ற பிரதான இணைப்பாக இருந்து தனது பொறுப்புமிக்க கடமைகளை நன்றாக அறிந்து செயற்படுமிடத்து அவ்வாசிரியர் தனது நடிபங்கை செவ்வனே செய்து ஆசிரிய உலகில் ஓர் நட்சத்திர ஆசிரியராகத் திகழ முடியும் என்பதில் ஐயமில்லை.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"

---

## கருவறை முதல் கல்லறை வரை கல்வி

இச்சையுடன் நல்லியற்கையை நாட்டிலே
கொச்சையில்லாது குலுங்கிடச் செய்திட
பச்சை விருட்சமும் பாங்காய் ஓங்கிட
கச்சை கட்டியாளும் கல்வியைத் தேடிட
காட்டிடு கல்லறை பூக்களின் வாசனை
கற்றிரு கல்வியைக் கல்லறை வரை.

கே. கே. யோகநாதன்
2ஆம் வருடம்
தொடர்பக்கம் -53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வி மறுசீரமைப்பில் ஆரம்பக்கல்வி

செல்வி மங்களேஸ்வரி நடராசா
யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

நாட்டின் கல்வி தொடர்பான செயற்பாடுகளின் மூலம் தகவல்களைத் திரட்டி அதன் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர் திருத்தமானது ஆரம்பக்கல்வி வகுப்புகளில் எத்தகைய மாற்றத்தைத் தோற்றுவித்துள்ளது என நோக்குவோமானால் அன்னை மடியில் அர வணைத்தபிள்ளை சூழலில் பெற்ற அனுபவத்துடன் பாடசாலை நுழை வாயிலை அடைகின்றது. அங்கு பிள்ளை பலதரப்பட்ட முகங்களைப் பார்த்து சூழலுக்கேற்ப தன்னை இயல்புபடுத்திக் கொள்வதற்கு முனை கின்றது. சுயசிந்தனைக்கு இடமளித்து சுயமாகக் கற்பதற்கு ஏற்ற கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுத்தல் அவசியம்.

அந்த வகையில் ஆரம்பக்கல்வியை முதனிலை ஒன்று, முதனிலை இரண்டு, முதனிலை மூன்று என வகுத்துள்ளனர். இதன் அடிப்படை யில் முதனிலை ஒன்றாகிய தரம் ஒன்றிலே மாணவன் தனது ஆற்றலுக் கும், திறமைக்கும் ஏற்ற கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பாக முதலில் தன்னைத் தானே அறிவதற்கும் எந்தளவிற்கு தேர்ச்சியைப் பெறுகின் றனர் என்பதற்கும் ஏற்றதாகப் பிள்ளையை அறிதல் எனும் விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தரங்களில் காணப்படும் மாணவரைக் கற்றலில் ஈடு படுத்துவதற்கு ஏற்ற வகையில் விளையாட்டுடன் கூடிய கற்றலானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் தாம் விரும்பிய செயற் பாட்டில் சுதந்திரமாக ஈடுபட்டு உடல், உளம் சார்ந்த திறன்களை வெளிக் கொணர்வதற்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மகிழ்ச்சிகர மான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதற் கும் ஏற்றதாக அமைந்துள்ளது எனலாம்.

கவின் நிலையையுடைய வகுப்பறையானது ஒன்றிணைந்த கல்வியை மகிழ்வுடன் கற்கத்தூண்டும் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு அமைவாக தரம் 1, 2 வகுப்பறைகள் செயற்பாட்டறையுடன் கூடிய கவின் நிலையுடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வியில் பிரவேசிக்கும் மாணவர்களின் சமநிலைவிருத் திக்கு அறிவு போன்று உடல் உள சமூக விருத்தியும் அவசியமாகும். அந்த வகையில் விளையாட்டு முற்றமானது நுழைந்து செல்வதற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுவதற்கு, ஏறுவதற்கு தொங்குவதற்கு எனப் பிள்ளைகளின் விருத்திக்கு வித்திடக்கூடியதாகவும் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இயற்கையுடன் கூடிய கல்வியை ஏற்படுத்தியுள்ளது.

இதுமட்டுமன்றி மாணவர்கள் குழுவாகச் செயற்படுவதன் மூலம் ஒற்றுமை தொடர்பாடற்திறன், தலைமைத்துவப்பண்பு, சமூகஉணர்வு என்பன விருத்தியடைகின்றமைக்கு ஏற்ற வாய்ப்பைக் கல்விச் சீர்திருத்தமானது கொண்டுள்ளது

நெருக்கீடான சூழலில் வாழும் பிள்ளைக்குச் செயற்பாட்டுடன் கூடிய கல்வி புத்துணர்ச்சியை அளிக்கவல்லது. பெற்றோருக்கு அடுத்ததாகத் தமக்குப் பாதுகாப்புத் தரக்கூடியவர்கள் ஆசிரியர்கள் தான் என்பதைப் பிள்ளை உணர்ந்து தெளிவடைகின்றது. செயற்பாட்டுக் கல்வியில் அடுத்து முக்கிய இடத்தை வகிப்பது பாடசாலைக் குடும்பமாகும். தனது பாடசாலையில் ஆசிரியரை, தன் ஒத்த வயது நண்பர்களை அறிந்த பிள்ளை பாடசாலைக் குடும்பம் என்ற அமைப்பின் கீழ் உள்ள வேறு பாடசாலை ஆசிரியர்களுடன் தன் வயதொத்த மாணவர்களுடனும் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் அன்பை வளர்க்கவும் புதிய விடயங்களைச் சிந்திக்கவும் சுதந்திரமாகச் செயற்படவும் ஆற்றலை வெளிப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடிய நாட்டின் அபிவிருத்திக்குச் செயலொழுங்கிற்கு பங்களிக்கக்கூடிய, சமநிலையுடைய ஆளுமைகொண்ட பிரஜையை உருவாக்குவதே ஆரம்பக்கல்வி மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாகும். பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வைக் காணுவதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கமுடியும் என்பதில் ஐயமில்லை.

சுயநம்பிக்கையை விருத்தியடையச் செய்து சுய ஊக்கத்துடன் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் சுயதிருப்தி விருத்தியடைகின்றது. இத்துடன் விழுமியப் பண்புகளும் விருத்தியடைவதை அவதானிக்க முடிகிறது.

தரம் ஒன்றில் கற்பித்தல் செயற்பாட்டில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது வாய்மொழி ஆங்கிலமாகும். முதனிலை இரண்டால் இரண்டாம் தேசிய மொழிக்கலப்பும் புகுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற கொள்கைக்கு ஏற்ப ஆண்டு மூன்றில் முறைசார் ஆங்கிலம் கற்பதற்கு முன்னர் தரம் ஒன்றில் ''செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம்'' அறிமுகப்படுத்தப்பட்டு உரையாடலுக்கு உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மூலம் மாணவர் கற்றல் எனும் செயற்பாடானது புதிய கல்வி மறுசீரமைப்பில் இன்றியமையாததாக உள்ளது. ஆறாம் தர மாணவர்களுடன் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியும், அனுபவங்களைப் பகிர்ந்தும் இடைத்தாக்கம் ஏற்பட வாய்ப்பாகின்றது. இவ்விடயத்திலும் ஆசிரியர் மறைமுகக் கணிப்பீட்டில் தவறக்கூடாது.

பிள்ளையின் கற்றல் முன்னேற்றம் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்கும் தகவல்கள் சேகரிப்பதற்கும் பயன்படுத்தப்படும் முறைகளில் கணிப்பீடும் ஒன்றாகும். தரம் ஒன்று, இரண்டு மூன்றில் தொடர்ச்சியான கணிப்பீடு முக்கியம் பெறுகிறது.

முதனிலை ஒன்றிலிருந்து விளையாட்டின் மூலம் கற்ற பிள்ளை முதனிலை இரண்டில் செயற்பாடுகளுக்கு முக்கியம் கொடுக்க நேரிடுகிறது. அவ்வாறே ஒன்றிணைந்த பாடச் செயற்பாடுகள் தரம் ஐந்தில் பிள்ளையின் மகிழ்ச்சிக்கும் ஏற்ற பொருத்தமான தெரிவுப்பாடம் ஒன்றைக் கற்பதற்கும் கால அட்டவணை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதில் எழுத்து வேலைகள் விருத்தி அடைகின்றன.

மாணவர் மையக்கல்வியை அடிப்படையாகக் கொண்ட புதிய கல்வி மறுசீரமைப்பானது அவர்களின் அறிவு, திறன் மனப்பாங்கை விருத்தி செய்வதில் இன்றியமையாததாகும். எனினும் இதன் வெற்றியும் தோல்வியும் ஆசிரியர் கையிலும் பெற்றோர் கல்விச் சமூகத்தின் கையிலும் தங்கியுள்ளது எனலாம்.

---

சாற்று நல்வித்தைக்குச் சாரும் பலவழி
நற்குணப் பண்பினை நாட்டில் வளர்த்திடும்
உற்ற தேசப்பற்றை ஓங்கிடச் செய்திடும்
சாதி சமயங்கள் ஒன்றெனக் கொண்டிடும்
போட்டி பொறாமைகள் ஓடி ஒதுங்கிடும்
தொட்டில் முதற் கொண்டு கல்வியைப் பெற்றிடு

தொடர்பக்கம் — 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவாமை

இ. கலைவாணி
குட்டியப் புலம் அ. மி. த. க.

ஒரு ஊரில் ஒரு குடியானவன் வாழ்ந்து வந்தான். இவனுக்கு நான்கு புதல்வர்கள். அவன் கூலி வேலை செய்து பிழைப்பவன். ஆனால் மதுவிற்கு அடிமையாகி அதிகமான பணத்தை விரயமாக்குவான். குடும்பச் செலவிற்கு கொடுப்பது குறைவு. அவனது மனைவி, தான் உழைக்கும் பணத்தைக் கொண்டு குடும்பத்தை ஓட்டி வந்தாள். பிள்ளைகள் தாங்கள் விரும்பியதை வாங்கவோ, சாப்பிடவோ முடியாத ஏழ்மை நிலையில் இருந்தனர்.

பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றார்கள். நான்கு பிள்ளைகளும் படிப்பில் மிகவும் சிறந்தவர்களாகக் காணப்பட்டனர். இருந்தாலும் நான்கு பிள்ளைகளுக்கும் தங்கள் குடும்பக் கஷ்டத்தையும் தாயின் பரிதாப நிலையினையும் பார்த்து மிகவும் கவலையாக இருந்தது. பாடசாலையில் அவர்களின் ஏழ்மை நிலையை அறிந்த அதிபரும் ஆசிரியர்களும் தந்தையிடம் உங்கள் பிள்ளைகள் மிகவும் கெட்டிக்காரர்கள் நீர் குடிப்பதை நிறுத்தி நன்றாக உழைத்து இந்தப் பிள்ளைகளைப் படிப்பித்தால் அவர்கள் நால்வரும் நல்ல நிலையை அடைவார்கள் என்று புத்திமதி கூறினார்கள். ஆனால் அவர் திருந்துவதாகவில்லை. அவரது சகோதரர்களும் சொல்லியும் திருந்தவில்லை. எனவே எல்லோரும் கைவிட்டுவிட்டனர்.

பிள்ளைகள் படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் மிகவும் திறமை உடையவர்களாகவே செயற்பட்டார்கள். பிள்ளைகளின் வகுப்புத்தரம் ஏறஏற செலவு அதிகமாகிக் கொண்டு சென்றதால் தாய் தன் வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி மிகவும் கஷ்டப்பட்டாள். தினமும் ஆலயம் சென்று தனது மனவேதனையைக் குறைத்துக்கொள்வாள். இருந்தும் அவளது செலவை அவளால் ஈடுசெய்துகொள்ளமுடியவில்லை. உதவி கேட்பதற்கும் ஒருவரும் இல்லை. எனவே தனது மூத்த மகனிடம் ''மகனே வருமானம் போதாமல் உள்ளது செலவு வரவர அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே நீ உனது கல்வியை இத்துடன் நிறுத்தி விட்டு ஏதாவது சிறுவேலை செய்தால் தம்பிமாரையாவது நன்றாகப் படிப்பித்து நன்நிலைக்கு கொண்டுவரலாம். என்ன சொல்கிறாய்'' என்று மிகவும் மனவேதனையுடன் கேட்டாள். அவனது மனதும் வேதனையுற்றது. இருந்தபோதிலும் தாயின் கவலைகளைக் குறைப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கும் தான் உழைத்தால் தம்பிமாரையாவது நல்ல நிலைக்கு கொண்டு வரலாம் என்ற விருப்பத்தினாலும் தனது ஆசையை நிராசையாக்கி னான். கல்வியை 8ஆம் தரத்துடன் நிறுத்திக்கொண்டான்.

சிறிது காலத்தின்பின் தந்தை நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். அவருக்கு வேண்டிய சகல மருத்துவ வசதிகளும் உணவு வகைகளும் கொடுத்தனர். ஆனாலும் அவரைக் காப்பாற்ற முடிய வில்லை. தந்தை இருக்கும்வரை உதவ முன்வராதவர்கள் தந்தை இறந்த பின் மூத்தமகனையும் வேலைக்கு போகாமல் மறித்து கல்வி கற்க உதவி செய்தார்கள். மூத்தமகன் சந்தோசத்துடனும் ஊக்கத்துடனும் படிப்பில் கவனம் செலுத்தினான். தான் ஒரு வைத்தியனாக வரவேண்டும் என்ற இலட்சியத்துடன் அயராது முயற்சி செய்து க. பொ த. உயர்தரப் பரீட்சையில் அதி திறமைச் சித்தியைப் பெற்று அனைவராலும் பாராட் டப்பட்ட பொழுது தாய் தான் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் சிறந்த பலனை அடைந்துவிட்டேன் என்று பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற திருவள்ளுவரின் கூற்றிற்கிணங்க தாய் தன் மகனை மற்ற வர்கள் எல்லோரும் பாராட்டிப் புகழ்ந்து பரிசில்கள் கொடுத்துச் சென்றபொழுது மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். இருந்தாலும் தன் மகனை ஒரு டாக்ரராகப் பார்ப்பதற்கு பெத்த தகப்பன் இன்று இருக்க வில்லையே என்றும் கவலை அடைந்தாள். மகன் வைத்தியனாக வந்த தும் தனக்கு உதவி செய்த வள்ளலுக்கு நன்றி செலுத்தியதோடு பல உதவிகளையும் செய்து வந்தான். தனது ஏனைய சகோதரர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து முன்னேறச் செய்தான்.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற கூற்றிற்கிணங்க அவனது அயராத முயற்சியினால் செல்வம் மிகுந்தவனானான்.

அவனுக்கு உதவி செய்தவர்களை மறவாது தன் உயிரினும் மேலாக மதித்துப் போற்றி வாழ்ந்துவந்தான். தனக்கு உதவி செய்தவர்களின் பிள்ளைகள் நல்லநிலையில் இருந்த போதிலும் முதுமைக்காலத்தில் பெற்றோரை அறிந்த இவன் மிகவும் வேதனையடைந்து அவர்களிடம் சென்று அவர்களை அழைத்து வந்து தன் வீட்டில் வைத்து நல்ல முறை யில் கவனித்து வருகின்றான். இவ்வேளையில் இவனது தாயும் நோயி னால் படுக்கையில் வீழ்ந்தார். இவனது இளையதம்பி உயர் தரம் படித் துக்கொண்டிருக்கின்றான். அவன் இவ் வயோதிபர்கள் இங்கு இருப் பதால் தன்னால் கல்வி கற்கமுடியவில்லை என்றும் அவர்களை எங்கா வது கொண்டுபோய் விடும்படியும் தமையனாரைப் பேசுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி கூறியதைக் கேட்டதும் அண்ணனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'பெற்றதாயையும் உதவி செய்தோரையும் பார்ப்பது நமது கடமையல்லவா? இப்பெரியவர்கள் இல்லாவிடில் நாம் இன்று இந் நிலைக்கு வந்திருக்கமுடியாது. சிறிதாவது யோசித்துப்பார்த்துத்தான் பேசுகிறாயா. அவர்களை கண்ணை இமை காப்பதுபோல காப்பது நமது கடமைல்லவா'

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருவள்ளுவரின் கூற்றில் எத்தகைய பெரிய பாவச் செயல் களை செய்தவர்களும் வாழ்வில் முன்னேற இடமுண்டாம். ஆனால் ஒருவனுக்குச் செய்த நன்றியை மறந்தவனுக்கு வாழ்க்கையில் உய்வே இல்லையாம் என்று தம்பிக்கு எடுத்துக்கூறி விளக்கினான். இதனை மனதில் நினைத்துப்பார்த்த தம்பியும் அண்ணனின் செயலில் மகிழ்ச்சி யடைந்து அண்ணனின் மனதைப் புண்படுத்தியமைக்காக மன்னிப்பும் கேட்டுக்கொண்டான்.

---

கல்வியின் கூர்மையைக் கூறி முடியுமோ
புல்லரைப் பூமியில் பூண்டோடொழித்திடும்
புத்திசாலிகள் புனிதமே கண்ணுறும்
காட்சிகள் கண்டு நம் தேசம் செழிப்புறும்
பெற்றிடு போதனை, பேதமை போக்கிடு
கற்றிடும் கல்வியோ கருவறை முதல் கல்லறை வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# First Year Students



**1ST ROW SEATED L to R :-**

Mr. R. Navaketheeswaran, Mrs. G. Palini, Miss. Yogeswary Kandiah (Lecturer), Mr. K. Shanmuganathan (Lecturer), Mr. T. Amirthalingam (Lecturer), Mr. A. V. Mahadevan, Mr. E. Bernad Mahendran

**2ND ROW STANDING L to R :-**

Miss. S. Rajeswary, Mrs. K. Velayuthapillai, Miss. A. Srivathany, Miss. S. Sugirtha, Mrs. S. Karunakaran, Miss. S. Thanusa, Miss. S. Sasikala, Mrs. S. Sarvesvaravel, Mrs. K. Mahendran

**3RD ROW STANDING L to R :-**

Mrs. R. Atputhamalar, Miss. G. Rajanajagi, Miss. Malliga, Mrs. A. Gnan
Miss. T. Yogarani, Miss. S. Komala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நாளும் கல்வி

செல்வி க. அமிர்தரஞ்ஜினி
யா / வயாவிளான் ம. ம. வி.

'' கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு மாட்டு அல்ல மற்றை யவை'' அதாவது உலகிலுள்ள செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் கல்விச்செல்வமே. இச்செல்வம் திருட்டுப்போக முடியாதது. அழிவற்றது. அள்ள அள்ளக் குறையாதது. எங்கு சென்றாலும் எம் முடன் கூட வருவது. இச்சிறப்புமிகு செல்வத்தை பெறுவதற்கு யாவரும் முயற்சிசெய்ய வேண்டும். ஏனெனில் '' கல்வியே வாழ்க்கை'' '' வாழ்க்கையே கல்வி '' இரண்டையும் நாம் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. கல்வியால் மனிதவாழ்க்கை மேம்படுகின்றது. வளம் பெறு கின்றது. வாழ்க்கை முறைகளே கல்வியாகின்றன. இந்நிலையில் கல்வி என்றால் என்ன என்பதை நாம் நோக்குவதே அவசியமாகும்.

'' உண்மை, நன்மை, அழகு என்பவற்றை உணர்த்துவது கல்வி '' என்கிறார் பிளேட்டோ.

கல்வி என்பது வளர்ந்து செல்வது. '' அனுபவமே கல்வி '' என் கிறார் ஜோன்டுயி. '' முழுமையான வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வதே கல்வி '' என்கிறார் கேபட் ஸ்பென்சர். '' கல்வி என்பது யாதேனும் இலக்கை அடைதல் ஆகும் '' என்கிறார் ஆர். எஸ். லீடர்ஸ். இவற்றுக்கு மேலாக ''உடல் உள்ளம் ஆன்மா போன்றவற்றின் இயற்கைத்தன்மையை வெளிக்கொணர்ந்து விளக்கம் பெறத் தூண்டுவதே கல்வி '' என்று ஆன்மீக ரீதியான சிந்தனையைக் காந்தியடிகள் முன்வைக்கிறார். இவ் வாறாக கல்வி என்றால் என்ன என்பது பற்றி பல அறிஞர்களும் பல் வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்தாலும்கூட '' அறிவு, திறன், மனப் பாங்கு சார்ந்த நடத்தை மாற்றமே கல்வி '' எனக்கொள்வதே பொருத்த முடையதாகும். ஏனெனில் ஒரு விடயத்தை அறிந்துவிடுவதால் மட்டுமோ அல்லது ஒரு செயலை வெறுமனே பொறிமுறையாக செய்வதால் மட்டுமோ கல்வியைப் பெற்றுவிட முடியாது. அது அந்நிகழ்வுகளுக் குரிய சந்தர்ப்பங்களில் மட்டும் கற்றலாக இருக்கும். ஆனால் மனப் பாங்கு ரீதியாக நாம் கற்றவற்றைச் செயற்படுத்தும் சிந்தனையும் தெளிவும் ஏற்படும்போது மட்டுமே அங்கு நடத்தையில் மாற்றம் ஏற் பட முடியும். எனவே அறிவு, திறன், மனப்பாங்கு சார்ந்த நடத்தை மாற்றமே கல்வியாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கல்வியின் வரையறைகளின் ஊடாக நாம் கல்வியின் நோக்கங்களையும் இனங்காணக்கூடியதாக உள்ளது. நோக்கம் என்பது இறுதி நிலை. இது பரந்த பொருளைக் கொண்டது. தனியாள் தேவைகள், சமூகத்தேவைகள், தேசிய தேவைகள் என்பவற்றைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கிலேயே கல்வியின் நோக்கங்களும் வகுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய நோக்கங்களை படிப்படியான செயற்பாடுகள் மூலமே அடைந்துகொள்ளமுடியும். இச்செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையிலேயே கல்வி வழங்கல் திட்டமிடப்படுகின்றது. அதாவது படிமுறை ரீதியான மாற்றங்களின் மூலமே உயரிய இலக்கை அடைவது உறுதியாகிறது.

கீழ்நிலையான மிருகநிலைக்கும் செல்லாது அதி உயர் நிலையான தெய்வநிலைக்கும் செல்லாது குறைந்த பட்சம் மனிதன் மனிதனாகவேனும் வாழுதல் வேண்டும். இந்நிலையினை எய்துவதற்கு கல்வி இன்றியமையாதது. கல்வி என்கையில் வெறுமனே ஏட்டுக்கல்வி மட்டுமல்ல அனுபவரீதியான பட்டறிவுக் கல்வியும் கல்வியே. முறைசார்ந்த, முறைசாரா முறையில் என கல்வியானது தற்போது மூன்று வகைப்படுத்தப்படுகின்றது. இம்மூன்று முறைகளினூடாகவும் கிடைக்கப்பெறுகின்ற அறிவு, திறன், மனப்பாங்கு மாற்றங்களே கல்வி ஆகின்றன. இக்கல்வியே வாழ்விற்கு வழிகாட்டுகின்றது. கல்வி மூலம் ஒவ்வொருவரதும் திறன்கள் ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுகின்றன. கல்வியின் மூலமே பண்பாடு கலாச்சாரம் சமயம் சார்ந்த விழுமியங்கள் இளந்தலைமுறையினருக்குக் கையளிக்கப்படுகின்றன. ஏனையவர்களுடன் சுமுகமாக உரையாடும் இயைபாக்கத்தை கல்வி ஏற்படுத்துகின்றது. உடல் உள ஆரோக்கியத்தைப் பேண கல்வி வழிகாட்டுகின்றது.

விஞ்ஞான வளர்ச்சி தொழில்நுட்ப விருத்தி என்பவற்றின் விளைவாக உலகம் சுருங்கிவிட்ட இன்றைய நிலையில் கல்வி என்பது மிக மிக இன்றியமையாததாகவே காணப்படுகின்றது. கல்வி இன்றேல் தொடர்பாடல் என்பது மிகவும் கடினமானதாகவே இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. '' எல்லோருக்கும் கல்வி '' '' வாழ்நாட்கல்வி '' என்னும் சிந்தனைகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டமையும் பின்பற்றப்பட்டமையும் இன்றைய நிலையின் தீர்க்கதரிசனமான வெளிப்பாடுகளே என்றும் கொள்ளலாம். இத்துடன் இன்றைய உலகமாற்றங்களுக்கும் நிலைமைகளுக்கும் முகம் கொடுக்கும் சக்தியானது கல்வி மூலமே மனிதனைச் சென்றடைய முடியும்.

முழுமையான கல்வி என்பது வாழ்வின் சகல அம்சங்களையும் அதாவது மொழி, இலக்கியம், கணிதம், விஞ்ஞானம், சமூகவியல், புவியியல், உளவியல், அரசியல், பொருளியல், கலைகள் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல துறைகளையும் உள்ளடக்கியதாக அமைவதும் அத்தியாவசியமா கின்றது. இது காலத்தின் நிர்ப்பந்தமும் கூட. இயந்திரமயமாகிவிட்ட இன்றைய வாழ்வில் இரசனையைத் தூண்டும் சிந்தனையை, மனப் பாங்கினை கல்வியே வழங்கவேண்டிய தேவையும் உள்ளது.

கல்விச்செல்வத்தின் சிறப்பையும் பயன்பாட்டையும் தத்துவஞானி களும் அறிவியலாளர்களும் மட்டுமன்றி எமது சான்றோர்களான தெய் வப்புலவராம் திருவள்ளுவர், ஒளவையார், பாரதியார் போன்ற பலரும் கூட தமது பாடல்கள் மூலம் எமக்குக் கூறியுள்ளனர். இதன் மூலம் கல்வியின் அவசியம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உணரப்பட்டுவிட்டது எனலாம். ''கற்றவர்களுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு'' என்பதற்கிணங்க ஒருவன் கல்வியைக்கற்றிருந்தால் அவனுக்கு எங்குசென்றாலும் வரவேற்பு இருக்கும். கல்வியறிவுடையவர்களை பெரியோர், அரசர் போன்ற யாவரும் மதித்து நடப்பர். கல்லாதவர் களை நல்லுலகம் மதிக்காது. கல்விச்செல்வத்தினை சிறு பராயத்தி லிருந்தே ஆர்வமுடன் பெறவேண்டும். அதாவது ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பது முதுமொழி உடல் உள அமைப்பு நிலை களுக்கேற்ப சிறு பராயத்தில் கற்கும் விடயங்கள் ஆழமாக பதிந்து என்றும் நினைவில் இருக்கும். இது கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும்.

தாயின் கருவறையிலேயே ஆரம்பமாகும் கல்வியானது ஆரம்பக் கல்விக் காலத்திலேயே ஒருவரிடம் புடம்போடப்படுகிறது. ஒரு கட்டிடத் திற்கு அத்திவாரம் எவ்வாறு அவசியமோ அவ்வாறே ஆரம்பக்கல்விக் காலமும் ஏனைய காலக்கல்விச் செயற்பாட்டிற்கும் வாழ்க்கை முறை களுக்கும் மிகவும் அத்தியாவசியமாகின்றது. இக்காலத்தில் சுதந்திர மான, சுயாதீனமான அனுபவம் சார்ந்த கல்வியைப் பெற்றுக்கொள் வதும் இன்றியமையாதது. இவ்வாரம்பக்கல்விக்காலமானது ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தானது. கிரேக்க தத்துவஞானியான பிளேட்டோ ''பிள்ளை பெற்றோரைவிட அரசுக்கே சொந்தமானது'' என்று கூறு வதன் மூலம் இப்பருவத்தில் கிடைக்கக்கூடியதான கல்வி அரசாங்கத் தினால் திட்டமிட்டு வழங்கப்படக்கூடியது என்பதையும், நாட்டுப்பற்று, சட்டத்தை மதிக்கும் பண்பு, சிறந்த நற்பிரசை ஆகுதல் என்பனவற்றை ஏற்படுத்துவதாகவும் அமைவதாக உணரப்படுகிறது. இது போலவே ரூசோ, டூயி, ஸ்பென்சர், காந்தியடிகள் போன்ற அறிஞர்களும் ஆரம் பக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். இதனை உணர்ந்த உலகநாடுகளில் ஆரம்பக்கல்விக்கு இன்று முக்கியத்துவம் வழங்கப்படு கிறது. இந்த வகையில் எமது நாட்டிலும் ஆரம்பக்கல்வி மறுசீரமைக் கப்பட்டுள்ளதையும் 0-14 வயதுவரை கட்டாயக்கல்விச்சட்டம் ஏற்படுத் தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே ஆரம்பக்காலத்தில் பெற்றுக் கொள்ளும் கல்வியைத் தொடர்ந்து வளர்த்தெடுக்கவேண்டும். இதற்கு பலவழிகளையும் கையாள வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள், அறிவுசார் நூல்கள் வாசிக்க வேண்டும். ''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்'' எனவே வாசிப்பதன் மூலம் புதிய விடயங்களையும் நடைமுறை உலகையும் அறிந்துகொள்ள முடியும். தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தவேண்டும். அதன்மூலம் வாழ்வை வழிநடத்த முடியும். ''கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' ''பாடையது ஏறினும் ஏடது கைவிடேல்'' என்று கல்வியாற் சிறந்த ஔவையார் வலியுறுத்துகின்றார். அதாவது என்ன துன்பம் வந்தாலும் கல்வியைக் கற்றலே சிறந்தது. இறக்கும் நேரம் வரும்வரைக்கும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். கல்வி என்பது ஆயுள்பூராவும் தொடரக்கூடியது என்பதை இதன்மூலம் எமக்கு உணர்த்துகிறார். ஏனெனில் ''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'' ஆகும். அதே வேளை ''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்து ஊறும் அறிவு'' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க கல்வியறிவானது அள்ள அள்ளக் குறையாததாய் மணலில் தோண்டிய குளத்து நீர் ஊறுவது போல கற்கும் அளவிற்கு வளர்ந்து செல்லும்.

எனவே சிறந்த செல்வமாகிய கல்விச்செல்வத்தை யாவரும் ஆர்வமுடன் பெறமுயலவேண்டும். கல்வியின் மூலமே உண்மையை உணர்ந்து யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும். மனிதன் மனிதனாக வாழ முடியும். மற்றவர்களுக்கு உதவமுடியும். இதனை உணர்ந்து கற்பதன் மூலமும் கற்க வைப்பதன் மூலமுமே ஒவ்வொருவரும் தமது வீட்டிற்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் முன்னேற்றத்தையும் பெருமையையும் தேடிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரியும் ரோஜா மொட்டு

**ஞானேஸ்வரி அதிசயநாதன்**
2ஆம் வருடம்

பாடசாலைக்குப் புதிய ஆசிரியர் வேணி அவரது 3ஆம் வகுப்பு மாணவன் நந்தீஸ் வீட்டுப் பாடம் செய்துவரவில்லை என்று கையிலுள்ள பிரம்பால் காலுக்கு கீழ் இரண்டு அடிகள். அவனது மெலிந்த காலில் ''சுள்'' என்று இருந்தது. அவன் காலை உடன் தூக்கியதிலிருந்து தெரிந்தது. ஆசிரியர் வினாவும் வினாக்களுக்கு வெளியே கலைக்கப்பட்டான். வேறு மாணவர்களும் ஆசிரியர்களும் அவனை ஏளனமாகவும் பரிதாபமாகவும் பார்த்துச்சென்றது அவர்கள் பார்வையிலிருந்து புரிந்தது அதன் மத்தியில் கண்கள் சிவந்த வண்ணம் கண்ணீர்த் துளிகள் சொட்ட தனது பாடவேலையைச் செய்து கொண்டிருந்தான் நந்தீஸ்.

ஆசிரியர் அவன் செயலை எட்டிப்பார்த்து ''நந்தீஸ் வீட்டுப் பாடம் செய்து முடித்து விட்டீரா'' என்று கேட்டார். அவனும் ''அரைவாசி செய்து விட்டேன் ரீச்சர்'' என்று தயக்கத்துடன் பதில் கூறினான். நந்தீசின் முகபாவத்தைக் கண்ட ஆசிரியர் தாய்மை உள்ளம் கொண்டவராய் ''இனி ஒழுங்காக வீட்டுப்பாடத்தை செய்து வரவேண்டும்'' என்று கூறி அவனது ஆசனத்தில் உட்கார வைத்தார். மறுநாள் அவனது தாயைக் கூட்டிவரச் சொன்னார். மறுநாள் தாயைக் கூட்டி வரவில்லை. நந்தீஸ் வேணி ரீச்சரின் வினாக்களுக்கு மௌனமாக தலையைக் கீழே கவிழ்ந்தபடி நின்றான். மீண்டும் தண்டனை. வகுப்பறையிலுள்ள சகமாணவர்கள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

இடைவேளை மணி ஒலித்தது. அவ்வழியே வந்துகொண்டிருந்த கமலா ரீச்சரிடம் நந்தீசின் முறைப்பாட்டைக் கூறினார் ஆசிரியர். உடனே கமலா ரீச்சர் ''நந்தீசின் தாயார் நோயினால் இறந்து இரண்டு வருடங்களாகி விட்டன. இன்னும் சிறு தம்பிகளும் இருக்கின்றனர். அப்பாவோ சரியான குடிகாரன், பிள்ளைகளைக் கவனிக்காது தானும் தனது வேலையுமாகவே இருப்பார். என்றாலும் முன்னரை விட தற்போது ஒழுங்காக வருகின்றான்'' என்று அவன் விபரத்தை கூறி அப்பாற் சென்றார்.

ஆசிரியர் வேணியின் உள்ளம் ஒருநிமிடம் துடிதுடித்தது, உடலெல்லாம் விறைத்தது, தாயில்லாத பிள்ளையா, சக மாணவர்கள் கூட அந்த வேளையில் நந்தீசுக்கு அம்மா இல்லை என்று சொல்ல முடியாமல் நடந்து கொண்டு விட்டேனே. அந்தப் பிஞ்சு உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேனே என்று மனம் நொந்து கொண்டார். அவர் நந்தீசை தனியாக அழைத்து தனது அன்புக் கரங்களால் அவனைத் தடவி ''எனக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையைப் பற்றித் தெரியாமல் போய்விட்டது ஏதாவது விளங்கா விட்டால் பயப்படாமல் கேட்க வேண்டும், என்ன பிரச்சனையென்றா லும் தயங்காது சொல்ல வேண்டும்'' என்று பாசக்குரலால் அறிவுரை கூறி அனுப்பினார் ஆசிரியர் வேணி.

ஒரு சில மாதங்கள் கடந்து சென்றன. ஒரு நாள் காலை 7மணி யளவில் பாடசாலை வாசலண்டை ஆசிரியர் வரும் போது நந்தீஸ் ஓடிவந்து தனது அம்மா அவரைக்காண வந்ததாகக் கூறினான். ஆசிரி யரும் ''அம்மாவா!'' என்று சொல்லி முடிக்க முன்னே ''வணக்கம் ரீச்சர் நந்தீஸ் எப்படி வகுப்பறையில் குழப்படியா?'' என்றபடி வந் தாள் அந்தத்தாய். ஆசிரியரும் அவளுடன் உரையாடினார். பாடசாலை ஆரம்பமணியடித்தது. அடுத்தவாரம் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத் தில் தன்னைச்சந்திக்கும்படி கூறி ஆசிரியர் பிரார்த்தனை மண்டபம் நோக்கி விரைந்து சென்றார். அப்போது ஆசிரியர் கமலாவும் வந்தார். அவரிடமிருந்து நந்தீசின் தந்தை திடீரென மறுதிருமணம் செய்து இன்று ஒருவாரமாகிவிட்டது என்பதையும் அறிந்து கொண்டவராய் சிறிய தாயின் கவனிப்பு பரவாயில்லை எனக்கூறியபடி பிரார்த்தனை மண்டபத்தினுள் நுழைந்தார் ஆசிரியர் வேணி. நந்தீசின் வகுப்பறை வேலைகளில் படிப்படியான விருத்தி காணப்பட்டது.

பலமாதங்கள் கடந்தன தனக்கு ஓர் தம்பி பிறந்துள்ளார் என்று கற்கண்டுடன் வந்தான் நந்தீஸ். ஆசிரியரும் மிக்க சந்தோசத்துடன கற்கண்டை எடுத்து வாயிற்போட்டார். இவ்வாறு மறுவருடமும் ஆசிரியர் வேணியிடம் கல்விகற்கும் வாய்ப்புக்கிடைத்தது. பாடசாலை ஆரம்ப மாகி ஒரு வாரமாகி விட்டது. நந்தீஸ் புதிய அப்பியாசக் கொப்பி களிற்கு மேலுறை போடவில்லை. இதையிட்டு ஆசிரியர் அவனைக் கண்டித்தார் அவனும் ''அப்பா இன்றைக்கு விடு வரும்போது வாங்கி வருவார், நாளை நிச்சயமாக புத்தகங்களிற்கு மேலுறை போட்டுவரு வேன் ரீச்சர் என்று பதிலளித்தான். ஆசிரியர், இதுவரை வாய்விட்டு பேசாதவன் இவ்வாறு பதிலளித்தது ஆசிரியருக்கு முள்ளுள்ள றோசாச் செடியிலுள்ள மொட்டு சாதுவாக விரிவது போல உள்ளத்தை உறுத் தியது. என்றாலும் மூன்று நாட்களாகியும் நந்தீஸ் அப்பியாசக் கொப்பிகளுக்கு மேலுறை போடவில்லை. அவனுக்கு தம்பி பிறந்துவிட் டான் அல்லவா, அதுதான் காரணம் என்று ஆசிரியருக்குப் புரிந்து விட்டது.

விரிய ஆரம்பிக்கும் மொட்டு தொடர்ந்து நீர் கிடைக்காது வாடி விடப்போகின்றதே என்று மனதில் எண்ணியபடி பிரம்பை எடுத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒத்தபடிதான் உங்களுக்கு மட்டும் விட்டுக் கொடுக்கமுடியாது'' என்று கூறியபடி கீழ்க்காலில் இரண்டு அடிகள் அடித்தார். உடனே நந்தீஸ் ''ரீச்சர் ரீச்சர் நாளைக்கு நிச்சயம் போட்டு வருவேன் அடிக்காதேயுங்கோ'' என்று பெரியசத்தத்துடன் கூறிக் கொண்டு ஆசிரியர் மீண்டும் கண்டித்துவிடுவாரோ என்ற ஏக்கத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இருக்கையில் இருப்பது சற்றுப்பின் சென்றான். இன்று தான் நந்தீசுக்கு கடைசி மன்னிப்பு என்று கூறி அவனை இருக்கையில் உட்காரவைத்தார். ஆசிரியர் வேணிக்கு மறுநாள் தனது அப்பியாசக் கொப்பிகளைத் தூக்கிக் காட்டினான். நாளிதழ் காகிதத்தாளை மறு பக்கம் திருப்பிப் போடப்பட்டிருந்தது. தனது வீட்டுச் சுவரில் தொங்கிய நாளிதளை கிழித்துப் போட்டிருந்தான். இதைக்கண்ட ஆசிரியருக்கு அவனது குடும்ப சூழ்நிலையும் விளங்கிவிட்டது.

ஆசிரியர் அவனை முதுகில் தட்டியபடி எல்லோர் முன்னிலையிலும் '' நந்தீஸ் இன்று நல்ல பிள்ளை சொன்னபடி செய்துள்ளார் '' என்று மிக்க மகிழ்ச்சியுடன் பாராட்டினார். அன்று தான் அவன் முகத்தில் புன்னகை பூத்ததை ஆசிரியர் கண்டுகொண்டார். அவனுக்கு ஒரு சிறிய குறிப்பேட்டைக் கொடுத்து ஒவ்வொரு நாளும் வீட்டுப்பாட வேலைகளை அதில் குறித்துச் செல்லும் படி கூறினார். பாட வேலைகளை மெது வாகச் செய்வான். மெல்லக் கற்கும் மாணவனாகக் காணப்பட்டான். ஆசிரியர் '' நந்தீஸ் எப்படிச் செய்கிறார் என்று பார்ப்போம் '' என்று அடிக்கடி அவனருகே சென்று அவன் செயற்பாடுகளைக் கவனிப்பார். அவனும் புன்னகையுடன் ஆசிரியர் முகம் பார்த்துப் பார்த்து தனது வேலையில் ஈடுபட்டான். படிப் படியாக ஆசிரியருடனும், சக மாணவர் களுடனும் நன்கு வாய்விட்டுப் பேசத்தொடங்கினான் ஏனையோர்போல் பதட்டமின்றி மிக்க சுறு சுறுப்புடன் முன்னின்று பல செயற்பாடுகளைச் செய்தான். மாதாந்தப் பரீட்சையிலும் 80% புள்ளிகள் பெற்றான்.

வரவு இடாப்பில் அவனது பிறந்த தினத்தை அறிந்து பரிசுப் பொருளுடன் நந்தீசின் வீட்டுக்கு அவனும் அவனது பெற்றோரும் எதிர் பார்க்காத வண்ணம் சென்றார். நந்தீசும் '' அம்மா ரீச்சர் வருகிறா '' என்று கூறியபடி துள்ளிக் குதித்த வண்ணம் சிறியதாயை அழைத்து வந்தான். பரிசுப் பொருளுடன் ஆசிரியரைக் கண்டவுடன் தான் நந்தீசின் பிறந்ததினம் இன்று என்று பெற்றோருக்கு ஞாபகம் வந்தது. அவன் பரீட்சையில் 80% புள்ளிகள் பெற்றதையிட்டு அவர்களுடன் வினாவினர். அது கூட அவர்களால் கவனிக்கப்படவில்லை. இதை அறிந்த வேணி ரீச்சர் மனம் சஞ்சலமானது. அதை அவர் வெளிக் காட்டாது பெற்றோருடன் கலந்துரையாடினார். நந்தீசின் செயற் பாடுகளையும் திறனையும் எடுத்துக் கூறினார். அவர்களும் நந்தீசின் சிறந்த மனப்பாங்கான காரியங்கள் சிலவற்றையும் எடுத்துக் கூறினர். தனது தொழிலில் ஓரளவேனும் திருப்தி கொண்டவர் போல் அவர் களிடம் இருந்து விடை பெற்றுச்சென்றார் ஆசிரியர்.

காலங்கள் கடந்தன மீண்டும் சிறிய தாய் ஆசிரியரை அடிக்கடி சந்தித்து நந்தீசைப் பற்றி அறிந்துகொள்வாள். தவணைப் பரீட்சை யில் ''Merit'' தரத்திலிருந்து ''Good'' என தரம் உயர்ந்தது. முட்செடி மீது மெல்ல விரிய ஆரம்பிக்கும் இம் மொட்டு பூரணமாக விரிந்து தனது நிறைவையும் கண்டு ஏனையோருக்கும் அழகாகவும் வாசனையாகவும் வீசவேண்டும் என்ற மனப்பாங்குடன் இவ்வாறான செடிகளை இனங் கண்டு நீர் ஊற்ற முயற்சி எடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வி கற்பித்தலில் கட்புல செவிப்புல சாதனங்களின் பங்கு

திரு. க. உதயரூபன்
2ஆம் வருடம்

சமூகத்தின் மையமாக விளங்கும் தனிமனிதனின் இயல்புகள், குடும்பம், பாடசாலை, கிராமம் போன்ற சூழுக்களின் இயல்புகள், மனிதனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள தொடர்புகள், சமுதாயத்திற்கும் மனிதனுக்குமிடையே உள்ள தொடர்புகள் இத்தொடர்புகளிடையே உள்ள மாற்றங்கள் ஆகியனவற்றை மாணவனுடைய இயற்கைச்சூழல், சமூகச்சூழல் அடிப்படையில் செயற்பாடுகளின் மூலம் கற்பிக்கப்படுவதே ''சமூகக்கல்வி'' என்பதாகும்.

வெபர் என்பவர் குறிப்பிடுகையில் கட்புல செவிப்புல சாதனங்களை கற்பித்தலுக்கு பயன்படுத்தும்போது ஏற்படும் ''ஒப்பீட்டு விளைவுகள்'' எனும் தனது நூலில் நமது எண்ணக்கருக்கள்

| | |
|---|---|
| கட்புல அனுபவத்தால் | 40% |
| செவிப்புல அனுபவத்தால் | 25% |
| தொடுகை உணர்வு | 17% |
| சுவைத்தல், மணத்தல் | 03% |
| ஏனைய வழிகள் | 15% |

உருவாகுவதாக குறிப்பிட்டுள்ளார்.

''பெஸ்டலோசி'' எனும் கல்வியியல் அறிஞர் ''புலக்காட்சிகளினூடாக கல்வி அறிவினைப் புகட்டுவது பொருட்களின் வழியாக அமைவதே'' என்றார். எனவே இன்று ''வகுப்பறையில் சொற்களுக்கு முன் பொருட்கள்'' எனும் கருத்தே பலராலும் வற்புறுத்தக் காண்கின்றோம். ''நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பண்படுத்தப்பட்டால் இத்துணைக்கருவிகளை நிலையான பயனுள்ள கவர்ச்சிகளை மாணவர்களிடையே தோற்றுவித்து அவர்களை கற்க ஊக்குவிக்கும்'' என்று ''மெக்கவுன்'' என்பவரும் ''ராபர்ட்ஸ்'' என்பவரும் கூறியுள்ளனர். இக்கற்பித்தற்சாதனங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு காண முடியுமா எனக்கூறமுடியாது. இவை கற்றலை எளிதாக்குகின்றன என்றே கூறலாம். இவை திட்டமிடாமல் பயன்படுத்தப்பட்டால் சில சந்தர்ப்பங்களில் பயனற்றவையாகியும் விடலாம். கற்பித்தலுக்கு உதவும் சாதனங்கள் கட்புல சாதனம், செவிப்புலசாதனம், கட்புல செவிப்புல சாதனம் என மூன்று வகைப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Second Year Students*



**1ST ROW SEATED L to R :-**

Mr. N. Amirthalingam, Mr. S. Sivasiva, Miss. Y. Kandiah (Lecturer), Mr. T. Amirthalingam (Lecturer), Mr. K. Shanmuganathan (Lecturer), Mrs. V. Sanmuganathan (Lecturer), Mr. K. Uthayarooban, Mr. V. Karthikiyan, Mr. T. Sritharan.

**2ND ROW STANDING L to R :-**

Mrs. Anusooya, Mrs. M. Selvamagal, Mrs. R. Ratneswary, Miss. M. Yasotha, Miss. S. Sundaravathany, Mrs. N. Sureginy, Mrs. S. Nimalini, Mrs. L. Gurubama, Mrs. S. Balagowry, Miss. N. Suseela, Mrs. U. Malini, Mrs. T. Keethngali.

**3RD ROW STANDING L to R :-**

Miss. N. Kayalvili, Miss. I. Sasikala, Mrs. M. Vasugi, Mrs. A. Jeyamalar, Mrs. S. Selvarani, Mrs. A Santhanayagi, Miss. James Regina Mariyapavalar Miss. S. Kalagini, Miss. T. Pangayachcelvi, Miss. S. Gnanampal.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் கட்புல சாதனம் என்பதனுள் கரும்பலகை உண்மைப் பொருட்கள், மாதிரி உருக்கள், படங்கள், பூகோள உருண்டை, பொருட் காட்சி நிலையம், அட்டவணைகள் என்பவற்றையும் செவிப்புல சாதனங் களாக வானொலி, ஒலிப்பதிவுநாடா, ஒலித்தட்டுக்கள் என்பவற்றை யும் கட்புல செவிப்புல சாதனங்களாக தொலைக்காட்சி, திரைப்படம், கண்காட்சி என்பவற்றையும் குறிப்பிடலாம் இச்சாதனங்கள் சமூகக் கல்வி கற்பித்தலில் எவ்வாறு பயன்படுகின்றது என்பதனை ஆராய் வோம்.

**கரும்பலகை** கற்பிக்கும்போது ஆசிரியரால் பயன்படுத்தப்படும் இன் றியமையாத சாதனம் கரும்பலகை. இதை முறையாகப் பயன்படுத்த வேண்டும். தடித்த தெளிவான எழுத்தில் இடப்பக்கத்தில் ஆரம்பித்து எழுதவேண்டும். கவனத்தை ஈர்க்க வர்ணக்கட்டிகளையும் பயன்படுத்த லாம். சமூகக்கல்விப் பாடத்தைப் பொறுத்தவரை வேலைத்திட்டத்தைத் தயாரித்தல், பெயர்களைக் குறிப்பிடுதல், ஆண்டு திகதிகளை குறிப் பிடுதல், விளக்கப்படம் வரைதல் போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத் தலாம்.

**உண்மைப்பொருட்கள்** வகுப்பறையில் மாணவர் நேரே பொருட் களைப் பார்க்கும்படி காட்டிக் கற்பிக்கும்போது அவன் நேரடி அனுப வத்தைப் பெற இது உதவும் பொருட்களைப் பார்த்து, தொட்டு தெளி வாக அறிந்து கொள்வதால் ஆர்வத்துடன் பாடத்தில் ஈடுபடுவதுடன் சுயகற்றலுக்கும் தூண்டப்படுவர். பொருட்களைக் காட்டும்போது வகுப்பு அமைதியைப்பேண வேண்டும். சமூகக்கல்விப் பாடத்தில் நெல்வகை, மண்வகை, புராதன நாணயங்கள் என்பவற்றைப் பயன்படுத்தமுடியும். கொண்டுவர முடியாத பொருட்களாயின் அழைத்துச்சென்று காட்ட லாம். குளம் அதன் கூறுகள் போன்றவை.

**மாதிரி உருக்கள்** உண்மைப் பொருட்களை வகுப்பறையினுள் கொண்டுவரமுடியாத இடத்திலும் வெளியில் சென்று பார்வையிட முடி யாத சந்தர்ப்பங்களிலும் மாதிரி உருக்களை அமைக்கலாம். சமூகக் கல்விப்பாடத்தில் தரைத்தோற்றப்பிரிவுகள், சுவடு, குடி, முனைபோன்ற அமைப்புக்கள், மகாவலித்திட்டம், சூழல்மாசடைதல், பாதுகாப்புபோன்ற வற்றை இவ்வகையில் அமைக்கமுடியும்.

**பூகோளம்** உண்மைப்பொருள், மாதிரிப்பொருள் என்பவற்றைக் காட்ட முடியாத இடங்களில் இதனைப் பயன்படுத்தலாம். ஒளிப்படம் தேசப்படம், வரைபடம் உருவப்படம் விளக்கப்படம் என்பவை இதிலடங் கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மேற்பருவக்காற்று மழைவீழ்ச்சி செயற்பாட்டைக் காட்டும் விளக்கப்படம், விகா..ரகளின் உருவப்படம், முக்கியமானவர்களின் ஒளிப்படம் பாடசாலைவரைபடம் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

**அட்டவணைகள்** ஒழுங்கமைப்பான செயற்பாடுகளைக் காட்ட இதனைப் பயன்படுத்தலாம். பெரிய எழுத்துக்களில் கவர்ச்சியாகத் தயாரிக்கவேண்டும். காலம், மன்னர், கட்டியகுளம், காலம், புரட்சி, வாசகம், தலைமைதாங்கியவர், கனியவளம், கிடைக்குமிடம், உற்பத்தி, தொழிற்சாலை எனும் வகையில் பொருத்தமாக இவற்றை அமைக்கலாம்.

**வானொலி** இது ''கண்களுக்கு தூண்டுதலாக இல்லாத இடத்தும் கருத்தாளம் மிக்கது'' எனவே பாடப்புத்தகத்தில் இல்லாத புதிய விடயங்கள் கல்வி ஒலிபரப்புகளாக இடம்பெறும்போது அவற்றைப் பயன்படுத்துதல் ஏற்றதாகும். வானிலைத் தகவல்கள், நேர்முகவர்ணனைகள், பாராளுமன்றத்தில் இன்று போன்ற நிகழ்ச்சிகள் பொருத்தமானவை.

**தொலைக்காட்சி** இன்று கல்வியில் பல நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுவது இதுவாகும். இது கண்களுக்கும் காதுகளுக்கும் தூண்டுதலாவதுடன் சிந்தனையையும் தூண்டுகிறது. விவசாயம், விலங்குவேளாண்மை, புயல், நிலநடுக்கம், வரட்சி என்பவற்றை இவற்றினூடாகக் காட்டமுடியும்.

**வெளிக்கள ஆய்வுப்பயணம்** சமூகக்கல்வியைக் கற்கும்போது இவ் ஆய்வுப்பயணம் மேற்கொள்ளுதல் அவசியம். இது செயல்முறைக் கல்வியை வளங்குவதுடன் மாணவரைக் கற்கத் தூண்டுகிறது. வாழ்க்கையுடன் ஒன்றிணைத்துக்கற்க முடியும். தொடர்பு சாதனம், சமுதாய அமைப்பு, பொழுதுபோக்கு, போக்குவரத்து வசதி என்பவற்றை இம் முறைகளினூடாகக் கற்பிக்கமுடியும்

இவ்வாறான வெளிக்கள ஆய்வு முறைகளைப் பின்வரும் முறைகளில் மேற்கொள்ளமுடியும். அவை,

1. ஓரிரு பாடவேளைகளில் பாடசாலைச் சுற்றுப்புறச்சூழலில் மேற்கொள்ளும் ஆய்வு
2. ஒருநாள் அல்லது அரைநாள் நீடிக்கும் ஆய்வு
3. சில நாட்களுக்கு அல்லது வாரத்தில் நீடிக்கும் ஆய்வு
4. சமூக ஆய்வு பாட அலகினைப் பற்றிய ஆய்வுக்கான சமூக ஆய்வுப்பயணம்

என்பனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை நடன ஆசிரியர்களின் பிரச்சனைகள்

திருமதி மாலினி உலகநாதன்
2 ஆம் வருடம்

இசை நடனத்துறையானது மனிதர்களுக்கு கட்டாயமாக உள்ளத்தோடு ஒன்றித்த கலைவடிவமாகும். இன்பத்தை ஊட்டி, பக்தியை ஏற்படுத்தி, ஆன்மீகத்தை நெறிப்படுத்தி, உள்ளத்தை தூய்மையாக்கி மனிதனை மனிதனாக்குவது கலைகளுக்கு உள்ள சிறப்பாகும். அதிலும் இசை, நடனம் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சிறப்பான கலையாகும். இந்தப்பாடங்களை மாணவர்களுக்கு ஓரளவுக்கு பயிற்றுவிப்பதால் தான் மாணவர்கள் உள்ளங்கள் பக்குவப்படுகின்றன. இதனால் தான் ஏனையபாடங்களைக் கூட மாணவர்கள் கற்றுக்கொள்ள முடிகின்றது. அனேகமாக பாடசாலைகளில் இசை நடனத்துறைகளிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் தான் ஏனைய பாடத்துறைகளிலும் மிளிர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்குக் காரணம் மாணவன் உள்ளம் தூய்மையாக்கப்படுவதாகும்.

இப்படியான ஓரரிய பொக்கிசமான இசை, நடனத்துறையைப் பற்றி புரிந்து கொள்ளாத பலர் இன்னுமுள்ளார்கள் என்பது காணக்கூடியதாகவுள்ளது. எல்லாப்பாடங்களும் முக்கியமானவை, எல்லாப் பாடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

சிறிய வகுப்பிலிருந்து இசை நடனத்துறையால் பக்குவமடைந்த மாணவர்கள் ஆண்டு 10, 11 இல் பின்னடைவை எதிர்கொள்கின்றனர். இதற்குக்காரணங்கள் பலவுண்டு.

1. பாடத்திட்டத்தில் உள்ள மாற்றங்கள்
2. முக்கியபாடக் கணிப்பீடுகள்

முக்கியபாடங்கள் என்று சொன்னவுடன் மாணவர்கள் இசை, நடனத்தையோ தொழில் முன்னிலைப்பாடங்களையோ கருத்திற்கொள்ளாது விடுகின்றார்கள். பாடங்களை மட்டும் கருத்திற்கொள்ளாது விடுகின்றார்களா. அல்லது அந்தத் துறைசார்ந்த ஆசிரியர்களையும் கருத்திற்கொள்ளாது விடுகின்ற ஒரு நிலையை உருவாக்குகின்றது. ஆகவே கல்விச் சிந்தனையாளர்கள் முக்கிய பாடம், முக்கிய மில்லா பாடம் என்ற தப்பான வரைவிலக்கணத்தை மாற்றியமைத்து எல்லாம் தேவையான பாடம் என்பதை உணர்த்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பாடங்கள் ஒருபுறமிருக்க இசை நடனத்துறைப் பாடங்கள் நுண்கலைவடிவம் கொண்டவை. அவை சுருதி, லய உணர்வோடுகூடிய ஒன்றித்த கலைகளாகும். இந்தத்துறையைக் கற்பிக்கும் ஆசிரியருக்கும், மாணவருக்கும் ''செவிப்புலன் மிகவும் இன்றியமையாததாகும்.'' இதைக்கற்கும்போதும் கற்பிக்கும் போதும் மிகவும் அமைதியான சூழல் இன்றியமையாதது. ஆனால் பாடசாலைகளில் பல இரைச்சல்களுக்கு மத்தியில் ஆசிரியன் கற்பித்தால் ஆசிரியரின் நிலை என்னவாகும். ஆறு மாதத்தில் தொடர்ச்சியாக ஆசிரியன் கத்தினால் ஆசிரியரின் உடல் நிலை பாதிக்கப்படுகின்றது. இது உண்மை நிலையாகும்.

ஆகவே, இசை நடனத்துறை ஆசிரியர்கள் உளத்தாக்கம் அடை வதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றுட்சில

1. பாடசாலைகளில் தனித்தனியாக வகுப்பறைகள் இல்லை.

2. மாணவர்களின் ஆக்கங்களை இசைக்கருவிகளை பதிவேடுகளைப் பேணிப்பாதுகாக்க தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படு வதில்லை.

3. பாடசாலை அதிபர்கள், ஏனைய சக ஆசிரியர்கள் இசை நடனத் துறை ஆசிரியர்களைப் பற்றி சரியாகப் புரிந்துகொள்வதில்லை.

4. பாடசாலைகளில் இடம்பெறும் விழாக்களின்போது சரியான ஆசிரி யர்கள் ஒத்துழைப்பு நல்குவதில்லை.

5. இசை நடனப் போட்டிகளின்போது சரியான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை.

6 விழாக்கள் போட்டிகளின்போது மாணவர்கள் சரியான முறையில் ஒத்துழைப்பு நல்குவதில்லை.

7. பாடசாலை சம்பந்தப்படாத வேறு வெளிநிலைப் போட்டிகள் நிகழ்ச்சிகள் கூடுதலான வேலைச் சுமையை அதிகரிப்பது.

8. இசை, நடனப்போட்டிகள், நிகழ்ச்சிகள் போட்டிகள் விழாக்களின் போது இத்துறைசார்ந்த ஆசிரியர்களே கூடுதலான பணத்தைச் செலவு செய்ய வேண்டியநிலை உள்ளது.

9. இசை நடனப்போட்டிகள் விழாக்களின்போது அதிபர் உட்பட ஆசிரியர்களின் பாராட்டுகளோ, நல்ல விமர்சனங்களோ கிடைக் காத நிலை.

10. பாடசாலைகளில் நடைபெறுகின்ற பரிசளிப்பு விழா, கலைவிழா, நூல் வெளியீட்டுவிழா, கட்டிடத்திறப்புவிழா, வாணிவிழா, முத்தமிழ்விழா போன்ற பல்வேறுபட்ட விழாக்களை அலங்கரிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக இசை நடனத்துறை ஆதலால் இசை நடன ஆசிரியர்கள் பல வழிகளிலும் செலவு செய்து தமது நேரத்தை மிகக் கூடுதலாகச் செலவிட்டுத் தரமாக நிகழ்ச்சிகளை மேடையேற்ற அரும்பாடு படுகிறார்கள். அதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பு வேண்டும்.

ஆனால் இன்றைய சூழலில் ஒத்துழைப்பு மிகவும் குறைவு, இருந்தும் சில கண்டிப்புக்களின் நிலையில் பல சிரமத்தின் மத்தியிலும் நிகழ்ச்சிகளை மேடையேற்றவேண்டிய நிலையில் உள்ளாகின்றார்கள்.

அதிலும் சரியான மேடை வசதிகள் இராது, ஒலி, ஒளி, வசதிகள் சரியான முறையில் இராது, ஒத்திகை பார்க்கலாம், இடவசதி, மாணவர் ஒத்துழைப்பு இராது. இதனால் இசை நடன ஆசிரியர்கள் மனம் பாதிப்படைகின்றது.

இந்த நிலைகளில் இருந்து ஓர் நிகழ்ச்சியை மேடையேற்றினால் பாடசாலைக்குவரும் பிரதம விருந்தினர்களோ, சிறப்பு விருந்தினர்களோ அதைக் கண்டுகளிப்பதில்லை. நேரத்தைப் பார்த்துவிட்டு எழும்பிச் செல்கின்றனர். இந்நிலையில் தான் இசை, நடன ஆசிரியர்களின் மன நிலை எப்படி இருக்கும் என்று சிறிது சிந்திப்பீர்களா?

---

மலர் சிறக்க வாழ்த்துவோர்

அசோகா நகை அகம்

இன்றைய நவநாகரிக உலகில்
தரமான தங்க நகைகளைப் பெற்றிட
இன்றே நாடுங்கள்

அசோகா நகை அகம்

இல. 111A,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணநல மேம்பாட்டை விருத்திசெய்தல்

திருமதி சுவேந்திரன் பாலகௌரி

சமூகம் ஆசிரியர்களிடமிருந்து பல்வேறு கடமைகளையும், சேவைகளையும் எதிர்பார்த்து நிற்கின்றது. இதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களை உருவாக்க தற்போது புதிய செயற்திட்டங்கள், கல்விச்சீர்திருத்த முன்முயற்சிகள் பல பரிமாணங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. விரைவான சமூக மாற்றங்களுக்குப் பொருந்தாத பழைமை வாய்ந்த ஆசிரியர் குணநல மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு கல்வியமைச்சு பல மில்லியன் ரூபாக்களை இவ்வருடம் செலவிடவுள்ளது.

மேலும் ஆசிரியர்கள் மாலை நேரத்தில் சுற்றாடலுக்கு ஏற்ப சிறந்த கற்பித்தல் சாதனங்களை உருவாக்கும் திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கும்; தேசிய கல்வி நிறுவகம், கல்வியியற் கல்லூரிகள், மாகாணக்கல்வியமைச்சு என்பவற்றினூடாக ஆசிரிய கல்வி அதிகாரசபை (NATE) ஆசிரியர்களின் குணநல மேம்பாடுகளை உயர்த்த. பயனுறுதி வாய்ந்த கல்வியை வழங்க, புலமைப்பரிசில்களைக் கொடுத்து ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது. இதில்;

1. பாடசாலை முறையிலேதிறமையும் தியாகமனப்பான்மையும்உடைய ஆசிரியர்களுக்கு உள்ள குணநலத் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.
2. ஆசிரியர் தொழில் அபிவிருத்திக்கும், அர்ப்பணிப்புச் சேவைக்கும் வாண்மை விருத்திக்கும் புதிய செயற்திட்டங்களை அமைத்தல்.
3. ஆசிரியர்களை ஒழுக்கக்கோவை ஒன்றிற்கு உட்படுத்தலும் அகன்ற பொறுப்புடன் ஈடுபடச் செய்தலும்
4. சமூகநீதி, எதிர்பார்ப்புகள், கலாசாரப் பெறுமானங்கள், எதிர்காலத் தேவைகளுக்கு அமைய ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தல்
5. சமூகப்பொறுப்புடன் வகைகூறக்கூடியவராகவும், நவீன மாற்றங்களுக்கு இயைபடைந்து கல்விக்கூர்ப்பின் வளர்ச்சிக்கு வித்திடும் கடமையுணர்வுள்ள ஆசிரியர் குணநலன்களை மேம்படுத்தல்,
6. மாணவரின் முன்னேற்றம் பற்றி நிரந்தரமாகவே பெற்றோர்களுக்கு அறிவுறுத்துவதோடு பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் பற்றிய பெற்றார்களின் கருத்துக்களைச் செவிசாய்த்து தீர்வுகளைக் காணல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு மற்றும் பாடஅறிவு, உளத்திறன்கள் மனப்பாங்குகளைப் பெற்றுக்கொடுத்தல் பற்றிய விஞ்ஞான ரீதியிலான அபிவிருத்தியினை மாணவர்களிடம் ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் கல்வி தொழில் வழிகாட்டல் சேவைமூலம் ஆளுமை விருத்திக்குத் தேவையான சக்தியையும் நடத்தைகளையும் சாதகமான முறையில் மாணவரது நடத்தை, உளப்பாங்குகளை மாற்றி நல்விருத்திக்கான குணநலன்களுடன் ஆசிரியர்கள் மிளிர்ந்து வழிகாட்டல் வேண்டும்.

இவற்றிற்கு ஏற்ப இன்றைய ஆசிரியர்களின் பாத்திரப்பரிமாணங்களும், பொறுப்புக்களும் மிகப்பலவாகவுள்ளன. தீர்மானம் மேற்கொள்பவர், முகாமையாளர், ஆலோசனை கூறுபவர், சமூகமாற்ற முகவர், பொதுச்சேவையாளர் என மேலும் விரிந்து கொண்டே செல்கின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தியின் அச்சாணிகள் ஆசிரியர்களே. அவர்கள் வழங்கும் கல்வியே நிலையான அபிவிருத்திக்கு வழிகாட்டுவன.

**அபிவிருத்தி நோக்கியல் :**

நாம் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் அபிவிருத்தியைப் பற்றிப் பேசும் போது பொருளாதாரக் காரணிகளின் வளர்ச்சிகளை மட்டுமே முக்கியமாகக் கொண்டோம். அபிவிருத்தியில் பொருளாதாரச் சிந்தனையே மேலோங்கியிருந்தது. ஆனால் நிலைத்து நிற்கக்கூடிய சமூக பொருளாதார விருத்தியை பொருளாதாரக் காரணிகளின் வளர்ச்சியை மட்டும் ஊக்குவிப்பதனூடு ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்பது தற்போது உறுதியாக உணரப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் பொருளியல் சாராத சில காரணிகளில் மிகவும் முக்கியமானது கல்வியே ஆகும்.

ஒரு நாட்டின் முழுமையான அபிவிருத்திக்குப் பொருளாதாரமும், கல்வியும் இரு கண்கள் போன்றவை. இத்தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு மானிடமூலவள அபிவிருத்தி என்னும் புதிய கருதுகோள் இன்று வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தி பொருத்தமான கல்வி முறை ஒன்றின் அபிவிருத்தியுடனும் தொழில் வாய்ப்புக்களின் தேவைகளுடனும் பொருந்திச் செல்லக்கூடிய விதத்தில் பயிற்சிகளை வழங்குவதில் கவனம் செலுத்துகின்றது. இதற்குக் கலைத்திட்டத்தில் மாற்றங்கள் நிகழ்வதுடன் ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாமைத்துவ முறையியல்களிலும் புதிய செயற்திட்டங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன. தொடர்கல்வி, வாழ்நாட்கல்வி, கற்றல்கலாச்சாரம் கற்கக்கற்றல் தேர்ச்சி என்ற வகையில் ஆசிரியர்களின் குணநலன்களை மேம்பாடு செய்வதற்கு பல முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சேவையிலுள்ள ஆசிரியர்களின் குணநலத் திறன்களை விருத்தியாக்க ஐந்து அல்லது ஏழு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள் பயிற்சி வழங்குவதற்கான திட்டமும் இவ்வாண்டு ஆரம்பமாகவுள்ளது. இது இலங்கையின் ஆசிரியர் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். பாடத்திட்டமீளாய்வு, கற்பித்தல் தேவைகளுக்கு உள்ளூர்ப் பொருட்களைப் பயன்படுத்தல், நவீன கட்புல செவிப்புல சாதன உருவாக்கம், கணணிப்பிரயோகம், தரவுகளைச் சேகரித்தல், தரவுகளைப் பரிமாறல் போன்ற விசேட விடயங்கள் பற்றிய ஆய்வும் கலந்துரையாடிப் பூரண விளக்கம் பெறவும், ஆசிரியர் வள நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றினூடு பாடசாலை ஆசிரியர்களுக்கான முகாமைத்துவப் பிரச்சினைகளைத் தீர்க்கும் புதிய செயற்றிட்டப் பயிற்சிகளும், முரண்பாடுகளைத் தீர்க்கும் புரிந்துணர்வுத் திட்டங்களும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் செயற்படுத்தப்படும்.

வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தாலும் அதனாற் சோர்வடையாது பாடசாலையில் கிடைக்கும் ஒவ்வொரு வளத்திலிருந்தும் அதி உச்சப்பயன்பாட்டைப் பெற முயலும் குணநலமுடைய ஆசிரியர்களே நல்லாசிரியர்கள். இவ்வாறான நல்லாசிரியர்களை உருவாக்கவே பல்வேறு பயிற்சித்திட்டங்களும் சுயமதிப்பீட்டு அம்சங்களும் வழிகாட்டுகின்றன. இவற்றைச் சரிவரப்பயன்படுத்திக் கொள்பவர்களே ஆசிரியப் பணியின் மகத்துவத்தைக் காப்போராக இருப்பர். பாடசாலையில் அளிக்கப்படும் கல்வியின் தரமும் அக்கல்வியினால் மாணவர்கள் அடையும் பயனும் அப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையைப் பொறுத்தே அமைகின்றன. அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களினாலேயே சிந்தையில் தெளிவு, உள்ளத்துறுதி, கடமையுணர்வு, பொருளாதார சிந்தை, சமுதாய நேயம் மிக்க மாணுடர்களாகத் தம் மாணவர்களை உருவாக்க முடியும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திட்டம்

சி. தனஞ்சயன்
வட்டு. இந்துக்கல்லூரி

கடந்த சில வருடங்களாக பாடசாலைக்கல்வி பரீட்சை நோக்கையே பிரதானமாகக் கொண்டிருந்தது. இக்கல்வி முறையானது மாணவனின் சுய கற்றலை மேம்படுத்த பயன்படாமை மாணவனின் திறன்களை சரியாக வெளிக்காட்டல் ஊக்கம் அளிக்கப்படாமை போன்ற பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருந்தது. இவற்றை நீக்கும் விதமாக இப்போது வாழ்க்கை தகைமை விருத்தி செயற்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இச்செய்திட்டமானது நவீன கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாகும். இது அமெரிக்கா ஜேர்மன் கல்வித்தகுதியை அடிப்படையாகக் கொண்டது. இச்செய்திட்டம் எம் கல்விசார் உலகிற்கு புதிய பொருள் அல்ல. இது 1950களில் சமுகக்கல்விப்பாடத்தில் ஒரு வகை செய்திட்டமாக நடைமுறையில் இருந்தது. எனினும் பின்னர் கல்வி முறை எழுத்துப்பரீட்சை சார்ந்ததாக அமைந்ததால் ஆர்வம் படிப்படியாகக் குறைந்து அற்றுப்போனது. இன்று மீளவும் செய்திட்டங்கள் கொண்டுவரப்பட்டு செயல்மூலம் கற்றல் என்னும் நோக்கம் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்செய்திட்டமானது மாணவனை முனைப்புள்ளவனாக மாற்றும் அதே சந்தர்ப்பத்தில் சுறுசுறுப்புள்ளவனாகவும், இன்று இச்செய்திட்டம் பற்றி பல்வேறு மட்டங்களிலும் தெளிவான விளக்கமின்மை, சந்தேகங்கள் நிலவுகின்றன செய்திட்டம் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் பேராசிரியர் வி. பசநாயக கருத்துப்படி ''பாடநூலில் இல்லாத மாணவரினால் செய்யப்படும் அறிவியல் ரீதியான நடைமுறையே செய்திட்டம்'' எனப்படும். மேலும் இவரது கருத்துப்படி மாணவனை புத்தகப்பூச்சியாக இல்லாது அனுபவத்தின் மூலமான கற்றலைப்பெற வழிவகுக்கும். செய்திட்டங்கள் மாணவரின் தன்னம்பிக்கை சுய எண்ணக்கருக்கள் விருத்தியடைவதுடன் சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அதிலிருந்து விடுபட வழிவகைகளைத் தேடுதல், செய்திட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் சமுகத்திடம் தொடர்புகொள்ளும் திறனையும் வாழ்க்கையின் அறைகூவல்களை சந்திக்கக்கூடிய மனப்பக்குவத்தையும் ஏற்படுத்திக்கொடுக்கும்.

இச்செய்திட்டம் பல்வேறு குறிக்கோள்களை உடையது அவற்றுள் சில வருமாறு.

1. செயல்முறைத் தகைமைகளைப் பெறல்
2. சமுகத் தொடர்புகளை ஏற்படுத்தல்
3. சுற்றாடல் வளங்களை இனங்காணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கூட்டாக செயற்படும் மனப்பாங்கினை வளர்த்தல்
5. வேலை உலகின் பால் வழிகாட்டல்
6. ஓய்வுநேரத்தை பயனுடையது ஆக்கி அபிவிருத்திச் செயல் முறையில் ஈடுபடுதல்

**செயற்திட்டக் குறிக்கோள்கள் சரியான முறையில் அணுகா விட்டால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள்:**

செயற்திட்டம் சரியானதுறையில் அணுகாவிடில் பல எதிர்பாராத விளைவுகளும் ஏற்படும். செயற்திட்டம் என்று வீணாகப் பணத்தைச் செலவழிக்கிறார்கள், காலத்தை வீணடிக்கின்றார்கள் என்ற குறைபாடுகளும் உண்டு. வரையறையான நேரம் கூடத்தடையாக உள்ளது.

முறையான கற்றல் நிகழ்வதில்லை. செயற்திட்டங்கள் வழியே சுய கற்றல் நிகழ்கிறது. அதனை எல்லோரும் புரிந்து கொள்வார்கள் என்று கூறமுடியாது. ஆசிரியர் ஏனோ தானோ என்று செயற்திட்டங்களை கவர்ச்சிகரமாக ஆக்காது விடின் மாணவர்களின் கற்றல் பாதிக்கப்படும்.

இங்கு பெறப்படும் அறிவு சிறுசிறு கூறுகளே ஒழிய புதுமையானது என்று கூறமுடியாது. செயற்திட்டங்களினால் பாடசாலையின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கின்றது என்ற குறைபாடும் உள்ளது.

மாணவர்கள் செயற்திட்டங்களில் ஈடுபடுவதால் முறையற்ற குழுக்கள் உருவாகி விடுகின்றன. இதனால் கற்றல் பாதிக்கப்பட்டுவிடுகின்றது.

ஆக்கச் செயற்திட்டம் மூலம் உருவாக்கப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தைப்படுத்தல் வசதிகள் குறைவு. இவ்விதமான குறைபாடுகள் இருந்தபோதிலும் கற்றல் அபிவிருத்தியிலும் செயற்திட்டம் முக்கியமான ஓர் இடத்தை இன்று பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கீடுகளுக்குள்ளான பிள்ளையை இனங்காணலும் அவர்களுக்கான கற்பித்தற் செயற்பாடும்

செல்வி பாலினி குணரத்தினம்
(யா/தாவடி இ. த. க. பாடசாலை)

நெருக்கீடு என்னும்போது ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறபோது உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் அல்லது எதிர்விளைவுகளே நெருக்கீடாக உணரப்படுகிறது.

போர்ச்சூழலால் ஏற்பட்ட அகதிவாழ்க்கை, இடப்பெயர்வு, உயிர் உடமை இழப்பு, மரணபயம், காயங்கள், பேரழிவுகள் போன்றவற்றினாலும் குடும்ப சூழ்நிலையினாலும் தாய்தந்தையினரின் சீரற்ற உறவு, நோய், சமுகத்தினால் புறக்கணிக்கப்படுதல் போன்ற காரணிகளினால் பிள்ளை தன்னையறியாமலேயே ஏதோ ஒருவகை துன்பத்திற்குள்ளாகிறது. அது அடிமனதில் பதிவதனால், பிள்ளையிடம் பயந்த சுபாவமும், பதகளிப்பு, ஏக்கம், சோர்வு, திக்கிப் பேசுதல், நகங்களைக்கடித்தல், பற்றற்றநிலை, மனவளர்ச்சியின்மை, வலோற்காரம் போன்ற தன்மைகள் பிள்ளையிடம் காணப்படும். இதனால் அவன் கற்றலில் இடர்ப்படும் நிலை தோன்றும்.

ஆசிரியர்கள் இத்தகைய பிள்ளைகளை இனங்கண்டு, அவர்களுக்கு வேண்டிய அன்பு, காப்பு, களிப்பு, தேவைகளை வழங்கி, அவர்களை அரவணைத்து பிள்ளை தனது துன்பத்தை ஆசிரியரிடம் வெளியிடச் செய்தல் வேண்டும். இதனால் பிள்ளையின் மன அழுத்தம் குறைவடையும், அவர்களுக்கு நகைச்சுவை துணுக்குகளைக் கூறியும், கதை, பாடல், ஆடல்முலம், அவர்களையும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்குட்படுத்தலாம்.

இவ்வாறான பிள்ளைகளுக்கு வேண்டிய அன்பு, ஆதரவுகிடைக்காதவிடத்து பிள்ளை ஆசிரியரை வெறுக்கும், பாடசாலையை வெறுக்கும், இந்நிலையில் பிள்ளை இடைவிலகி, மதுவுண்ணல், போதைப் பொருள் பாவனை, புகை பிடித்தல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகி, கொலை கொள்ளை வன்முறை போன்றவற்றிலும் ஈடுபடத் தயாராகிவிடுவான்.

பிள்ளையை வாழத் தயார்படுத்துவதுடன் அவனை நற்பிரசையாக வாழவைப்பதுமே கல்வியாகும். எனவே ஆசிரியர் மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றிச் செயற்படுவாராயின் அவரே ''ஆசிரியர்'' என்பதற்கு இலக்கணமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்பாகத்திட்டமிடலும் பாடசாலை அபிவிருத்தியும்

கலாநிதி நா. அமிர்தலிங்கம்,
விரிவுரையாளர்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
தேசிய கல்வி நிறுவகம்,
யாழ்ப்பாணம்.

பாடசாலை அபிவிருத்திக்கு திட்டமிடல் அவசியமானதாகும். பாடசாலைகள் அனைத்துக்கும் பொதுவாகத் திட்டமிடுவதிலும் பார்க்க தனித் தனி பாடசாலைக்கான 'நுண்பாகத் திட்டமிடல்' இன்றைய காலகட்டத்தில் பொருத்தமானது.

நுண்பாகத் திட்டமிடல் என்பது சிறு அலகு அல்லது சிறிய பிரதேசத்திற்கான திட்டமிடலாகும். இது பிரதேசம், பாடசாலை, அணிய மட்டங்களில் திட்டமிட உதவுகின்றது. இத்திட்டம் சிறிய பகுதியில் எல்லோரது கவனத்தை ஈர்ப்பதால் இது நடைமுறையில் இலகுவாக இருப்பதோடு வெற்றியும் பெறுகின்றது. பாரியளவில் திட்டமிடும்போது திட்டமிடுவோர், அமுற்படுத்துவோர், பயன்பெறுவோர் ஆகிய மூன்று பிரிவினரும் ஒன்று சேர்வது இயலாத காரியம். ஆனால் நுண்பாகத் திட்டமிடலில் மூன்று பிரிவினரும் திட்டத்தில் ஏதோ ஒரு விதத்தில் பங்குபற்றுகின்றனர். இங்கு திட்டமிடுவோர் திட்டத்தை அமுல்நடத்துபவர்கள் இடையே நெருங்கிய தொடர்பும் சுதந்திரமான கலந்துரையாடலும் நிகழ வாய்ப்புகள் உண்டு. பொதுத் திட்டமிடலில் இத்தகைய சூழ்நிலை இருக்கமாட்டாது.

திட்டத்தை அமுல் படுத்துவோர்களுக்கு திட்ட காலத்தில் அமுல் படுத்துவதில் தெளிவு ஏற்படும் என்று கூறமுடியாது. பொதுக்கல்வி திட்டமிடலில் அதிபர்கள் விளங்கிக்கொண்டு அமுல்படுத்துவது கிடையாது. அதனை தெளிவாக விளங்கிக்கொள்கின்ற அறிவு சிலருக்கு இல்லை. எனவே பாடசாலைகள் பொதுத்திட்டத்தை அமுல்படுத்தும் சூழ்நிலைகள் இல்லை. பொதுத்திட்டத்தை அமுல்படுத்துவதிலும் பாடசாலைகளிற்கிடையே வேறுபாடுகள் அதிகம் காணப்பட்டன. பொதுத் திட்டமிடலை தயாரிக்கும் பொழுது அதிபர்கள் அதில் பங்குகொள்வது இல்லை. அவர்களுக்கு இதில் ஆர்வம் ஏற்படும் எனக் கூறமுடியாது. இதனால் பெரும்பாலான அதிபர்கள் மனதில் பொதுத்திட்டமிடல் பொருத்தமற்றது என்ற எண்ணத்தினால் அது ஒரு பிரச்சனையாக உருவெடுத்தது. மேலும் திட்டத்தை அமுல ஆக்குவதற்கான வளங்களை பெற்றுக் கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *First Year Students*



**1ST ROW SEATED L to R :-**

Mr. V. Naguleswaran (2nd Year), Mr. Thiraviyarajah, Mr. Manoharan, Mr. T. Amirthalingam (Lecturer), Mr. K. Shanmuganathan (See Lecturer), Miss. Yogeswary Kandaiah (See Lecturer), Mr. P. Anandarajah (2nd Year), Mr. S. Nagendran, Mr. S. Amarasivam

**2ND ROW STANDING L to R :-**

Mrs. Lingeswary, Miss. S. Sivakamasundari, Miss. S. Lathamani, Miss. K. Nandakumar Miss. S. Sasilini, Miss. T. Kalachchelvi, Mrs. Kamlaveni, ........................................, Miss. M. Thanaluxumi, Miss. T. Thusyanthi, Miss. T. Tenuga, Mrs. K. Subathira.

**3RD ROW STANDING L to R :-**

Mrs. M. Krishnakumari, Miss. S. Suganthi, Mrs. Lugirtharani, Mrs. Rajakumari Miss. P. Vijitha, Miss. S. Kirubagari, Mrs. Y. Kanagogilam, Mrs. Tisitharama

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மட்டத்தில் இலக்குகள், அதனை அடையும் வழிவகைகள், காலம், உபயோகப்படுத்தும் முறைகள், பயன்பாடுகள், வளங்கள் என்பனவற்றை முன்னேற்பாடாகத் தீர்மானித்து பாடசாலை மட்டத்தில் செயற்படும் விதமே பாடசாலை மட்டத்தில் திட்டமிடுவது ஆகும். இதுவும் ஓர் நுண்பாகத் திட்டமிடல் முறை ஆகும.

அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் மேலிருந்துவரும் அறிக்கைகள், தீர்மானங்கள் போன்றவற்றை செயற்படுத்துபவர்களாகவே காணப்படுகின்றனர். இம்முறை கீழ்நோக்கிய தொடர்புகொள்ளல் முறை என்பர். ஆனால் நாம் பாடசாலை மட்டத்தில் கல்வித்திட்டமிடலை மேற்கொள்கின்றபொழுது பிரச்சினைகளை அறிந்து மேல்நோக்கிய தொடர்புகொள்ளல் ஏற்படுகின்றது. இதனால் கல்வி அபிவிருத்தியடைய வாய்ப்புக்கள் அதிகமாகும்.

பாடசாலை மட்டத்தில் திட்டமிடும்பொழுது ஏ. சி. ஆர். வீலர் (A C. R. Wheeler) கூறிய கருத்தை நோக்குவோம். ''கல்வியைத்திட்டமிடுபவர்கள் திட்டத்தை வரைபவராக மட்டும் இராது அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களையும் சமுகத்தினது தேவைகள், விழுமியங்கள் போன்றவற்றையும் அறிந்தவராக இருத்தல்வேண்டும்''.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அப்பகுதி மக்களின் விழுமியங்கள், அபிலாசைகள் அறிந்தவராக இருப்பதால் பாடசாலை மட்டத்தில் திட்டமிடுதல் பெரும் நன்மை பயக்கும்.

வளங்கள் மாவட்டத்துக்கு மாவட்டம் ஏன் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டன. அத்தகைய வளங்களுக்கு ஏற்ப கைத்தொழில்களோ, விவசாயமோ, மீன்பிடித்தொழிலோ விருத்தி செய்யப்படவேண்டும். இதற்குத் தொழில்நுட்பம் அவசியம். அத்தகையவற்றை கல்வி வழங்கவல்லது. அதனைப் பாடசாலை மட்டத்திலும் வழங்கக்கூடிய முறையில் நாம் திட்டமிடவேண்டும்.

மாணவர்களைக் கல்வி இலக்குகளின்பால் கொண்டுசென்று பயன்பெற வைக்கின்ற பாரிய தொழிற்பாட்டினைக் கல்வி கொண்டுள்ளது. இதனைப் பாடசாலையில் மட்டுமே விருத்திசெய்ய முடியும். எனவே பாடசாலை மட்டத்தில் கல்வி திட்டமிடுதல் அவசியமாகும்.

பாடசாலை வளங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இவ்வளங்களில் இருந்து உச்சப்பயன்பெற வேண்டுமாயின் கல்வித் திட்டமிடல் கட்டாயமாகின்றது.

கல்வித் திட்டமிடல் பாடசாலைச் சமுகத்தை ஒன்றிணைக்க வைக்கின்றது பாடசாலைச் சமுகத்திடையே விரிசல்நிலை காணப்படுவது அபிவிருத்திக்கு ஒரு பெரும் தடையாகும். இதனை நீக்கும் பொருட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் சகல பிரிவினரும் ஓர் இடத்திற் கூடிப் பிரச்சினை களைக் கலந்து ஆலோசிக்கவும் தீர்மானங்களை எடுக்கவும் செயற் படுத்தவும் கல்வித் திட்டமிடல் வழிகாட்டுகின்றது. எனவே பாடசாலை மட்டத்தில் திட்டமிடுதல் ஒருங்கிணைப்பினைக் கொண்டுவர வல்லது.

கல்வி பின்னடைவதற்கு ஒரு காரணம் தகுந்த கல்வி மேற்பார்வை இல்லாததாகும். கல்வி மேற்பார்வையைச் சீர்திருத்துவதற்கு அரசாங் கம் முயற்சிசெய்து வருகிறது. மேற்பார்வையை செய்வதற்குரிய திட் டங்களைத் தீட்டவும் அவற்றை அமுல்படுத்தவும் திட்டமிடல் உதவிபுரி கின்றது. இதனைச் செய்ய ஆசிரியர்களுள் மேற்பார்வை செய்யும் திறனுடைய மூத்த ஆசிரியர்களைப் பயன்படுத்த வேண்டும். கணக்கிய லில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு எண்பார்வை எவ்வளவு முக்கியமோ அதுபோல் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு கல்வி மேற்பார்வை முக்கியமானதாகும்.

ஆளணி முகாமைத்துவத்தையும் பாடசாலை மட்டத்தில் தீர்மானிக்க வேண்டும். பாடசாலைச் சமூகத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள், பெற்றோர், பழைய மாணவர்கள் எனப்பல பிரிவினர் இருககின் றனர். இவர்களுக்கு இடையில் உகந்த தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பல்வேறு தரப்பினரும் உகந்த நட்பை வளர்த்துக்கொள்வ தற்கான (பயனற்ற நட்பை அல்ல) வழிவகைகளைக் கண்டறிந்து செயற்படுத்துவதன் வாயிலாகப் பாடசாலையில் நல்ல ஒரு சுவின் நிலையை ஏற்படுத்தமுடியும். இத்தகைய சூழலை ஏற்படுத்திக்கொள்ளத் திட்டமிடல் அவசியமாகும்.

மாணவர்கள் ஒரே தரத்தினரும் அல்ல. பாடசாலைக்குப் பாடசாலை ஒரே வகுப்பு மாணவர்களிடையேயும் வேறுபாட்டை ஏற்படுத்துகின்ற பாடசாலைக் கலாசாரத்தைத் திட்டமிடுவோர் அறிந்துகொள்ள வேண் டும். பாடசாலை மட்டத்தில் அதனை உருவாக்க எல்லாப் பிரிவினரும் முயற்சி எடுக்கவேண்டும். இது ஓர் நீண்டகாலத் திட்டமிடலாகும்.

பாடசாலைக் காலம் மிக முக்கியமானதாகும். இது வீண் விரய மாக்கப்படலாகாது. பதினொரு ஆண்டுகள் பாடசாலையிற் கற்ற ஒரு மாணவன் எதையும் தெரியாத நிலையில் இருக்கின்றான் என்றால் அது யாரது குற்றம்? இவ்வாறு ஏராளமான மனித மணித்தியாலங்கள் வீணே சிதறடிக்கப்படுகின்றன. இதற்கு நாட்டின் அரசியல் பொருளா தார சமூகக் காரணிகளும் உண்டு. கல்வியாளர்கள் என்று கூறப்படு வோர் காலத்தையும் வைத்துப் பாடசாலை மட்டத்தில் திட்டமிட்டால் அதிக பயனைப் பெறமுடியும்

கல்வி புத்தாக்கங்களையும் எதிர்பார்க்கின்றது. ஆசிரியர்கள், மாணவர்கள் ஆக்கத்திறன்கள் படைப்பாற்றல்கள் கற்பித்தல் முயற்சி கள் கற்பித்தல் முறைகள் கற்றல் முறைகள் என்பனவற்றில் மாற்றங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஏற்பட்டுள்ளன. இவை சாதாரண மாணவனுக்கும் கிராமங்களுக்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும்.

பாடசாலை மட்டத்தில் திட்டமிடுவோர், பயன்பெறுவோர், செயற்படுத்துவோர் ஒருங்கிணைந்து காணப்படுகின்றனர். இந்நிலையில் பாடசாலை மட்டத்தில் திட்டங்களை ஆக்கவும் அவற்றைச் செயற்படுத்தும் சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யவும், மீளமைக்கவும் முடியுமாதலால் திட்டம் அபிவிருத்திப்பாதையில் பாடசாலையை இட்டுச்செல்லும்.

நிகழ்ச்சித்திட்டம் என்பது பல செயற்திட்டங்களை உள்ளடக்கியது ஆகும். பௌதிக வளங்கள், ஆசிரியவளம், இணைபாடவிதான செயற்பாடு, மாணவர் செயற்பாடு, அலுவலக முகாமைத்துவம், பாடவிதான முகாமைத்துவம், ஆளணி முகாமைத்துவம் என பல்வேறு பிரிவுகள் பாடசாலையில் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் பாடசாலையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் காணப்படுகின்ற பிரச்சனைகள் வெவ்வேறானது. இப்பிரச்சனைகளில் சில நிதி இல்லாமலே தீர்க்கமுடியும். எனினும் பல பிரச்சனைகள் நிதி வளம் இல்லாததனால் தீர்க்கமுடியாது உள்ளது இப்பிரச்சனைகள் பாடசாலைக்கு பாடசாலை வேறுபட்டவை. சில பிரச்சனைகள் இன்னொரு பாடசாலையில் முக்கியம் அற்றதாக இருக்கும். எனவே ஒவ்வொரு பாடசாலையும் தத்தம் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்க வேண்டும். இவ்வாறு நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பதன் மூலம் பாடசாலைகள் அங்கு நிகழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் போது அபிவிருத்தியிலும் சிறிது சிறிதாக முன்னேற முடியும்.

பாடசாலையை பொறுத்தவரையில் செய்திட்டங்களை கருத்துள்ளதாக்கி அவற்றை அவ்வப்பகுதியின் அபிவிருத்தியுடன் இணைப்பதன் மூலம் நிகழ்ச்சித் திட்டங்களை பயனுள்ளதாக்க முடியும். பாடசாலை உருவாக்கக் கூடிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

- ★ பௌதீகவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ★ ஆசிரியவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ★ மாணவர் பொதுநல சேவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ★ அலுவலக முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ★ கற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ★ இணைபாடவிதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ★ பாடசாலை சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கம்

சி. மலர்விழி
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

பள்ளி மனை தனில்
பயின்றிட நாம் புகுந்திடவே
பல்லக்கில் ஏற்றி எம்மை
பற்றி தனில் சேர்த்தனரே

நாமோர் கல்விமானாக வேண்டுமென்றே
நம்முடன் நம் பெற்றோரின் எண்ணங்களும்
நிறைவேறுமோ யார் அறிவார்
நிர்க்கதி தான் கிடைக்குமோ?

எண்ணும் இவ்வேளை தனில்
கல்விமானா கவிமானா இல்லை இல்லை
கவிஞனா கலைஞனா இருவரும்
சளைத்தவர்கள் இல்லை இப்பாரினில்,

மருந்து இல்லா வைத்தியரோ
கருவி இல்லா விஞ்ஞானியோ
நூல் இல்லா அறிஞனோ
இவ் உலகதனில் உதிப்பதில்லை

எனும் பெருண்மைகள் தன்னை
குன்றில் இட்ட தீபமாய்
ஒளிர விட்டு வீறு
நடை போட்டுவரும் கணிப்பீடே

கணம்தோறும் உம்மை போற்றுகின்றோம்
மனமார உம்மை வாழ்த்துகின்றோம்
நீர் உடன் நீர்
போல் உறவாட விரும்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமுடன் எமக்கொரு சேதி வரும்

**செல்வி வி. நிர்மலாதேவி**
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

*நாளை விடியும்
நலமுடன்
நமக்கொரு
சேதி வரும்
முத்தர் மாமா
முறுவலிப்பார்
மூத்த மருமகன்
சித்தன்
சில நேரம்
வரலாமென்று
அபிராமிக்கும்
ஆவல்
ஆதவனை மறந்தா
அயல் நாடு போவது
நாளை விடியும்
நலமுடன்
நமக்கொரு
சேதி வரும்
பக்கத்து வீட்டு
பார்வதி மாமி
பாரிசவாதத்தில்
படுத்த படுக்கை
தூரத்தி வரும்
காலனுடன்
நாளும் பொழுதும்
போராட்டம்*

*கொள்ளி போட
பெற்ற பிள்ளை
துள்ளி இங்கே
வருவான் என்று
மாலாவுக்கும்
மகிழ்ச்சி
தடைப்பட்ட
திருமணம்
தம்பி வருகையுடன்
தடல் புடலாகு
மென்று
நாளை விடியும்
நலமுடன்
நமக்கொரு
சேதி வரும்
போர் மேகம்
கலைந்தோட
வான் மங்கை
பூத்தூவ
அப்பனும்
அம்மையும்
அன்புடன்
அளவளாவுவர்
நாளை விடியும்
நலமுடன்
நமக்கொரு
சேதி வரும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யப்பானும் 5 'S' திட்டமும்
# Japan and 5 'S' Programme

திரு. ஏ. சி. யோர்ஜ்
யாழ்ப்பாணக் கல்வி வலயம் – 1
யாழ்ப்பாணம்.

தகவல் தொழில் நுட்பத்திலும் கைத்தொழில் துறையிலும் உலகின் முன்னணி நாடாக யப்பான் திகழ்கின்றது. வளர்ந்துவரும் பொருளாதாரங்களுக்கு ஒரு முன்னுதாரண நாடாக (Model) வும் யப்பான் காட்டப்படுவதுண்டு. பொதுவாக யப்பானின் இத்தகைய வளர்ச்சிக்கு பல விடயங்கள் எடுத்துக் கூறப்படுவதுண்டு. யப்பான் நாட்டு மக்களின் சுறுசுறுப்பு, நாளொன்றிற்கு நீண்ட நேரம் வேலை செய்யும் பழக்கம் யப்பான் ஒருபோதும் குடியேற்ற நாடாக இராமை போன்ற பல காரணங்கள் எடுத்துச்சொல்லப்படுவதினை நாம் அறிவோம் ஆனால் இக் காரணங்களுடன் அதிகம் பேசப்படாத முதன்மைப்படுத்தப்படாத இன்னொரு காரணமும் அதன் வளர்ச்சிக்கும் முன்னணி நிலைக்கும் காரணமாக அமைந்துள்ளது. அதனை யப்பானி மொழியிலும் திட்டம் என அழைக்கின்றனர். இக்கட்டுரையானது இவ்விடயம் குறித்து சுருக்கமாக ஆராய்கின்றது. 5 'S' திட்டம் என இதனைக் கூறுவதற்கு ஆங்கில எழுத்தான 'S'ல் தொடங்கும் ஐந்து விடயங்களை அல்லது தலைப்புக் களை இது குறிக்கின்றது. இவ்வைந்து விடயங்கள் அல்லது தலைப்புக் களாவன.

1. SEIRI (இதனை செய்ரி என அழைக்கலாம்)
2. SEITON (செய்டோன்)
3. SEISO (செய்சோ)
4. SEIKETSO (செய்கெட்சோ)
5. SHITSUKE (செட்சூகி)

மேலே கூறிய 5 'S' என்னும் விடயங்கள் நிர்வாகத்தில் ஒழுங்கமைப்பு (Organization) என்னும் எண்ணக்கருவுடன் தொடர்புடையதாகும். யப்பானிய மக்களும், நிறுவனங்களும், அரசும் இந்து 5 'S' திட்டத்தினை பின்பற்றி வருகின்றன. யப்பானியர்களுடைய வாழ்வில் இந்த 5 'S' திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும் 5 'S' என்ற விடயங்கள் எவை பற்றிக்கதைக்கின்றன என்பது பற்றியும் நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEIRI (செய்ரி):

யப்பானிய மொழியில் செய்ரி எனக் கூறப்படுவதன் கருத்து யாதெனில் மிகத்தேவையான விடயங்களை வைத்துக்கொண்டு தேவையில்லாதனவற்றை உடனே எறிந்துவிடுதல் என்பதாம். பொதுவாக ஒருவரின் தனிப்பட்ட வாழ்விலும்சரி, நிறுவனங்கள், அரசு போன்றவற்றில் காலவதியான கோவைகள், கடதாசிகள் போன்ற இன்னோரன்ன பொருட்கள் தேவையற்ற விதத்தில் குவிந்து கிடப்பதினை அவதானிக்க முடியும். தேவையான ஒரு கோவையோ, தகவல்களையோ, பொருட்களையோ, ஒரு விடயத்தினையோ பெறவேண்டியோ எடுக்க வேண்டியோ நேரிடும் பொழுது தேவையற்றவற்றின் குவியலில் இருந்து தேவையானவற்றை தேட வேண்டிய நிலை காணப்படுகின்றது. நமது நாட்டில் வீடுகளிலும் காரியாலங்களிலும் பிற இடங்களிலும் இது சாதாரண ஒரு நடைமுறை. இதனால் காலதாமதம், வினைத்திறன் குறைவு, தேடுபவரின் எரிச்சல், மனோபாவம், சிவப்பு நாடாத் தொழிற்பாடு போன்ற பலவற்றுக்கு காரணமாகி இறுதியில் செயலானது வினைத்திறன் குறைவானதாக அமைகின்றது. ஆனால் யப்பானியர்கள் ஒழுங்கமைப்பில் தேவையில்லாதவற்றை உடனே எறிந்துவிடுவார்கள் யப்பானியர்களின் வாழ்வில் ''செய்ரி'' பொதுவான ஒரு அம்சமாகவுள்ளது.

**செய்டோன் :**

செய்ரியினை பின்பற்றும் யப்பானியர்கள் அதனுடன் இணைந்ததாக செய்டோனையும் பின்பற்றுவர். செய்டோன் என்பதின் கருத்து யாதெனில் தேவையானவற்றை மட்டும் வைத்திருத்தல் என்பதாகும். அதாவது தேவைக்கு ஏற்றாப்போல் வைத்திருப்பதினை குறிக்கும். இதனை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம். பாடசாலைக்கு செல்லும் போது ஒரு மாணவனின் பாடசாலைப் பையில் அன்று புதன்கிழமையாயின் புதன்கிழமை நேரசூசிக்குரிய பாடநூல்களும் கொப்பிகளும் இருந்தால் மட்டும் போதும் இதனையே செய்டோன் என்ற விடயம் குறிக்கும் கருத்தாம். எல்லாக்கிழமை நாட்களுக்கும் உரிய பொருட்கள் பையில் இருப்பது குழப்பத்தினை ஏற்படுத்தும். இது போலவே ஏனைய கருமங்கள் விடயங்களுக்கும் இது பொருந்தும். யப்பானியர்கள் பெரும்பாலானோர் வீடு, காரியாலயம், உற்பத்தி நிறுவனம் போன்றவற்றில் செய்டோனை பின்பற்றி வருகின்றனர். நமது நாட்டிலும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களிலும் ஒழுங்கமைப்பு விடயத்தில் செய்டோன் பின்பற்றப்படுவது அரிது.

**செய்சோ :**

செய்ரி, செய்டோன் போன்றவற்றை பின்பற்றும் யப்பானியர்கள் செய்சோவிலும் கவனம் செலுத்துகின்றனர். செய்சோ என்ற யப்பானிய மொழிச்சொல்லின் பொருள் உடனடியாக துப்பரவு செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் என்பதாகும். அதாவது, குசினி, சாப்பிடும் மேசை, வீடு, காரியாலயம், நிறுவனம் என்றவாறு எதிலும் வேலை முடிந்ததும் உடனடியாக துப்பரவு செய்வது பொதுவாக யப்பானியர்களது பழக்கம். இதனால் பிறகு செய்வோம், நாளை செய்வோம் என்ற நிலைமையை அவர்கள் தவிர்த்துக்கொள்கின்றனர் என்ற ஆங்கிலப் பழமொழியினை அவர்கள் செய்சோ மூலம் நன்கு விளங்கி வைத்துள்ளனர். ஒரு காரியாலயத்தில் ஒரு கோப்பு தேவைக்கு வெளியே எடுக்கப்பட்டால் அது தேவை முடிந்ததும் பழைய இடத்திற்கு அனுப்பிவிடுவது யப்பானியர்களின் வழக்கம்.

நமது நாட்டிலும் வளர்ந்து வரும் பெரும்பாலான பொருளாதாரங்களிலும் செய்சோ குறித்து என்ன நடக்கின்றது என்பது எமக்கு நன்கு தெரியும்.

**செய்கெட்சோ :**

செய்ரி, செய்டோன், செய்சோ என்பனவற்றை பின்பற்றும் யப்பானியர்கள் செய்கெட்சோவையும் கடைப்பிடிக்கின்றனர். செய்கெட்சோ என்ற யப்பானிய மொழிச்சொல்லின் கருத்து தொடர்ச்சியான தரங்களை பேணுதல் அல்லது நிர்ணயித்தல் எனப்பொருள்படும். வீடு, காரியாலயம், நிறுவனம், அரசு என்பவற்றில் எத்தகைய ஒரு வேலைக்கும் ஒரு நேரசூசி ஒரு ஒழுங்குமுறை (Keeping a System) என்பவற்றை அவர்கள் கடைப்பிடிப்பர். இதனை ஒரு சிறு உதாரணம் மூலம் விளக்கலாம். யப்பானியர்கள் விருந்தோம்பலில் தமது கலாச்சார நடைமுறைகளை பெரும்பாலும் பின்பற்றுவர். அவ்வாறு செய்யும்போதும் செய்கெட்சோவையும் பின்பற்றுவர். தமது அன்றாட தேவைக்கு தேநீர் அருந்த ஒருவித கலர் கோப்பையினையும், எதிர்பாராமல் வரும் விருந்தினர்களுக்கு வேறு ஒரு நிற தேநீர் கோப்பையையும் பயன்படுத்துவர். இதனால் உடனடியாக விருந்தினர்க்குரிய கோப்பையில் விருந்தினர் உபசரிக்கப்படுவார். இதனையே செய்கெட்சோ என்ற விடயம் விளக்குகின்றது. இவ்வாறு எத்தகையவொரு வேலைக்கும் தரங்களை நிர்ணயித்தல் காரியங்களை சுலபமாக ஆற்றுவதற்கு அவர்களால் முடிகின்றது.

**செட்சூகி :**

செய்ரி, செய்டோன், செய்சோ, செய்கெட்சோ என்பவற்றை பின்பற்றும் யப்பானியர்கள் திட்டத்தின் ஐந்தாவது விடயமான செட்சூகியினையும் பின்பற்றுகின்றனர். செட்சூகி என்ற யப்பானிய சொல்லின் பொருள் ஒழுங்கு (Disciptine) என்பதாகும். ஒவ்வொரு யப்பானிய மக்களும் செட்சூகியினை பின்பற்றுகின்றனர். அவர்கள் அணியும் ஆடைகள், பாதணிகள் எங்கே அவற்றை கொழுவ வேண்டும் என்பதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பைகள், வெற்றுப்போத்தல்கள் போன்றவற்றை எங்கே வீசவேண்டும் என்பது பற்றியும் அனைத்து யப்பானியர்களிடமும் ஒருவித ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வீடு, பாடசாலை, காரியாலயம் என்று எல்லா இடங்களிலும் யப்பானியர்களிடம் ஒழுங்கு உண்டு. வாழ்வின் வெற்றியில் இரகசியமாகவும் செட்சூகி காணப்படுகின்றது.

இந்த ஐந்து திட்டம் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டது. ஒன்றைப் பின்பற்றி மற்றொன்றை பின்பற்றாது இருக்கமுடியாது. யப்பானியர்களது நாட்டின் அபிவிருத்திக்கு இந்த ஐந்து, திட்டம் கைகொடுத்து உதவுகின்றது. வீடு, பாடசாலை, காரியாலயம், நிறுவனங்கள் என எத்துறையிலும் இதனை அவர்கள் பின்பற்றிவருகின்றனர். இதனால் நேரம்மிச்சம் (Time Saved) உளைச்சல் இல்லை (no stress) முரண்பாடுகள் இல்லை (no Conflict) மகிழ்ச்சி, முன்னேற்றம் என்பன யப்பானியர்களது வாழ்வில் காணப்படுகின்றது. இதனால் எந்தத் துறையிலும் வினைத்திறனும் அதனால் வினைத்திறனும் கிடைக்கின்றது.

இது அவர்களது நாட்டினை உலகின் முன்னணி நாடாக மாற்ற உதவியுள்ளது.

---

"மங்கை சில்க்ஸ்"ன்
மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
ஆசிரியர் மலர்
மென் மேலும் வளரட்டும்

ஏற்றமிகு ஜவுளிகளின் எழில் மிகு
காட்சியகம்

மங்கை சில்க்ஸ்
MANGAI SILKS

இல. 8, நவீன சந்தை, சுன்னாகம்.
No. 8, NEW MARKET, CHUNNAKAM.

மலர் சிறக்க வாழ்துகின்றனர்

**பிறேம் நகை மாடத்தினர்**

உன்னத கலை நயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு
கேசத்திற்கேற்ற, அதி நவீன மோஸ்தர்களில் தரம்
குன்றா தங்கப்பவுண் நகைகளைச் செய்து
பெற்றிட வாரீர்,



மென்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
ஓடர் நகைகளை குறித்த காலத்தில்
பெற்றுக்கொள்ள



# பிறேம் நகை மாடம்

*தங்கப்பவுண் நகை வியாபாரம்*

யாழ். வீதி, சந்தையடி, மானிப்பாய்.

---

*வாழ்த்துகின்றார்கள்*

# சீமாட்டி புடவைக் கடல்

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான ஒரே நிறுவனம்

## *சீமாட்டி புடைவைக் கடல்*

பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரிகப்
புடைவைத் தினுசுகள் என்றும் எங்கும் கிடைக்காத
விலையில் மலிவாக விற்பனை செய்யும் ஒரே நிறுவனம்

சீமாட்டி புடைவைக் கடல்
*122,* மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
T. P. 2196 FAX 2101

**கிளை மங்கைசில்க்**
*15,* நவீன சந்தை,
*மின்சாரநிலைய வீதி,*
யாழ்ப்பாணம்.

மலர்சிறக்க வாழ்த்துகின்றார்கள்

# சுந்தர்சன் ஸ்தாபனம்

மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி, மானிப்பாய்.

யாழ். குடாநாட்டில்,

★ மின்சார உபகரணங்கள் ★ மின்மோட்டர்கள்

★ மின்சாரத்தில் இயங்கும் அலங்காரப்பொருட்கள்

★ சமயல் உபகரணங்கள் ★ நீர் இறைக்கும் இயந்திரங்கள்

★ பி. பி. சி. நீர்க் குழாய்கள், இணைப்புகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்

தொலைபேசி மூலமோ, பக்ஸ் மூலமோ ஓடர்கள் ஏற்றுக்கொண்டு உரிய இடத்திற்கு துரிதகெதியில் பொருட்களைச் சேர்க்கும் ஒரே ஸ்தாபனம்

வாடிக்கையாளர்களை இன்முகத்துடன் வரவேற்று சேவையாற்றும் ஒரே ஸ்தாபனம்

"சுந்தர்சன்" மத்தியசந்தை முன்பாக,
பிரதான வீதி, மானிப்பாய்.

FAX: 021-2751 நன்றி தொலைபேசி: 021-2751

மலர் சிறக்க வாழ்த்துபவர்கள்

# குகன் ஸ்ரோர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# சந்திரன்

பான்சி பலஸ்

கணனிப் பயிற்சி

( கண்ணன் கடை )

Tele Phone:
021 - 2758

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

" வாழ்த்துகிறோம் மலர்சிறக்க "

# MANO AMBIS STORES
# FANCY GOODS

JAFFNA ROAD, MANIPAY.

*Prop*: M. MANOGARAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org